# படிகவிழா மலர்

## 2003- 2018




## கிளி/மாயவனூர் வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படிக விழா மலர்

## கிளி/மாயவனூர் வித்தியாலயம்
## மாயவனூர் ,வட்டக்கச்சி

அறிவே எமது உயிர்

MV

கிளி / மாயவனூர் வித்தியாலயம்

**2003-2018**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூல் | : | படிகவிழா மலர் |
| பதிப்புரிமை | : | கிளி/மாயவனூர் வித்தியாலயம். |
| பதிப்பு | : | கார்த்திகை 2018 |
| பக்கங்கள் | : | XXIII - 64 |
| பிரதிகள் | : | 150 |
| அளவு | : | B5 |
| கடதாசி | : | 70gsm |
| அச்சுப்பதிப்பு | : | சக்தி பதிப்பகம்<br>மீசாலை கிழக்கு,<br>மீசாலை. |
| அட்டைப்படம் | : | திரு. ந. பிரசாந் |
| புகைப்படம் | : | திரு. கோ.கர்ஷன் |
| தட்டச்சு | : | திருமதி. குணரத்தினம் கலாதேவி |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவே எமது உயிர்

M V

கிளி / மாயவனூர் வித்தியாலயம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகுடவாசகம்

"அறிவே எமது உயிர்"

## தூரநோக்கு

நிதமும் மாறிக்கொண்டிருக்கும் உலகிற்கேற்ப வளமான சமூகத்தை உருவாக்குவோம்.

## பணிக்கூற்று

உரிய தேர்ச்சி மட்டத்தை அடைவதற்காக கிடைக்கக்கூடிய வளங்களை திசைக்கோட்படுத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தாய் வாழ்த்து

இராகம்:- மாண்டு தாளம்:- ஆதி

தான தனத்தன தான தனத்தன தான தனத்தன

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே
வான மளந்தனைத்தும் அளந்திடும்
வண் மொழி வாழியவே

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீச
இசை கொண்டு வாழியவே
எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே

சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே

வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழியே
வானம் அறிந்தனைத்தும் அறிந்து
வளர் மொழி வாழியவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக்கீதம்

இராகம் :- ஹம்சத்வனி    தாளம் :- ஆதி

பல்லவி

வாழ்க வாழ்க வாழ்க என்று வாழ்த்திடுவோமே
வாழ்க எங்கள் மாயவனூர் வித்தியாலயம்.

அனுபல்லவி

சேய்கள் அனைவரும் சேர்ந்துணை பணிந்துமே
தூய அறிவொளியை அள்ளித் தந்திட

சரணம்

அமுது எங்கள் தமிழே இன்ப உயிர்த்தாயே
அரனும் அறிவுமாய் எம்மில் அமர்ந்திடவே
ஆங்கிலமொடு கணிதமும் சுற்றாடலை அறிந்திட
நவீன நுட்ப முறைகளை எமக்கு என்றும் புகட்டியே
(வாழ்க வாழ்க)

அன்பு தனை ஊட்டியே பண்புடனே அரவணைத்து
சமூகம் போற்றும் சிற்பிகளாய் காசினியில் ஒளிர்ந்திட
எமக்கு வழிகாட்டிடும் எம் ஆசான்களைப் பணிந்துமே
குன்றிலிட்ட தீபமாய் குவலயம் போற்ற வாழ்கவே.
(வாழ்க வாழ்க)

இயற்றியவர்:- அமரர்.பொ.சுப்பிரமணியம்
(ஓய்வுநிலை அதிபர்)

இயற்றிய ஆண்டு :- 2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை அடிப்படைத் தகவல்கள்

1. பாடசாலையின் பெயர் :- கிளி/மாயவனூர் வித்தியாலயம்.
2. பாடசாலை முகவரி :- மாயவனூர், வட்டக்கச்சி.
3. மாகாணம் :- வடமாகாணம்
4. மாவட்டம் :- கிளிநொச்சி
5. கல்வி வலயம் :- கிளிநொச்சி
6. கல்விக்கோட்டம் :- கரைச்சி
7. பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு :- 01.01.2003
8. பாடசாலை மீள ஆரம்பித்த திகதி :- 26.04.2010
9. பாடசாலையின் மகுடவாசகம் :- "அறிவே எமது உயிர்"
10. பாடசாலையின் வகை :- வகை III
11. வகுப்புக்கள் :- தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை
12. கிராம சேவையாளர் பிரிவு :- KN/40 மாயவனூர்
13. பிரதேச செயலர் பிரிவு :- கரைச்சி
14. பாடசாலை அடையாள இலக்கம் :- 1101036
15. பாடசாலை தொகை மதிப்பீட்டு இலக்கம்:- 10098
16. பாடசாலை பரீட்சை இலக்கம் :- 16096
17. பாடசாலையின் முதல் முதல்வர் :- திருமதி.லக்ஷ்சாந்தி கோபாலராசா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர்



திருமதி.லக்ஷ்சாந்தி கோபாலராசா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உப அதிபர்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகாமைத்துவக் குழு



# ஒழுக்காற்றுக் குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆசிச்செய்தி | VIII - X |
| வாழ்த்துச்செய்தி | XII - XXII |
| இதழாசியர் பேனாவில் இருந்து | XXIII |

**வரலாற்றின் பதிவுகள்**

| | |
|---|---|
| பாடசாலை வரலாறு | 1 - 4 |
| எமது பாடசாலையில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர் விபரம் | 5 |

**மாணவர் ஆக்கங்கள்**

| | |
|---|---|
| மழை | 6 |
| பழைய புத்தகத்தின் சுயசரிதை | 7 |
| எமது கிராமம் | 7 |
| எமது பாடசாலை | 8 |
| எனது வகுப்பறை | 8 |
| சிறுகதை | 9 |
| தாவரங்கள் | 10 |
| உயிரியல் உண்மைகள் | 10 |
| எறும்புகள் பற்றிய தகவல்கள் | 11 |
| Sobriquets | 11 |
| சிரிக்க சிந்திக்க சிந்தனைத் துளிகள் | 12 |
| பாடசாலையில் கடைப்பிடிக்க வேண்டியவை | 13 |
| உங்களுக்குத் தெரியுமா.....? | 13 |
| வயிற்றுக்குள் அமிலம் | 14 |
| அன்னாசிப்பழம் பற்றிய தகவல்கள் | 14 |
| ஆரோக்கியத்துக்கு ஆபத்து | 14 - 15 |
| செல்போன் | 15 |
| இயற்கைச்சூழல் | 16 |
| பறக்க முடியாத பறவைகள் | 16 |
| நட்பு | 17 |
| எனது பாடசாலை | 18 |
| நுண்ணறிவு | 18 |
| தொழில்களும் பெயர்களும் | 19 |
| அன்னையும் ஆசானும் | 20 |
| விநாயகப் பெருமான் | 20 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பே பாசல 21
அம்மா 22
மாணவர்கள் படிப்பதற்கு சில ஆலோசனைகள் 22
நன்மையை நினை - தீமையை வெறு 23
பாலைவனக் கப்பல் 24
சிந்தனைக்குச் சில.... 24
முதலுதவிக் குறிப்புக்கள் 25
ஏழைத் தாய் 26
என் இயேசு 26
My School 27
சிரிக்க சிந்திக்க சிலேடைகள் 27
நன்னெறிக் கதைகளில் வாசித்ததில் யோசித்தது 28
பறவைகளின் தகவல்கள் 28
வண்ணத்துப் பூச்சிக்கும் அந்துப்பூச்சிக்குமான வித்தியாசம் 29
அடிப்படை உண்மைகள் 30
தெரிந்து கொள்ளுங்கள் 31
Good Mannaers 31
சுகாதாரமான சமநிலையான வாழ்விற்காக வழிகாட்டல்கள் 32
ஒரு பங்கு உணவில் சரியாக இருக்க வேண்டிய அளவு 33 - 34
My best Friend 34
நேர் சிந்தனை உருவாக்கம் 35
உயிர்களிடத்தில் இரக்கம் 36
இயற்கைத் தாய் 37
ஆசிரியர்கள் 38

**ஆசிரியர் ஆக்கங்கள்**

தமிழ் வரிவடிவமும் எழுத்துப் பொறிமுறையும் 39 - 41
அதாவது நீங்கள் இறந்த பின்யார் அழப்போகிறார்கள் 41 - 42
பயனுள்ள மனிதனாக உருவாக 43 - 45
எனது பார்வையில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை 46 - 47
சரீர தண்டனையும் (Corporal Punishment) அதன் எதிர்மறை விளைவுகளும் 48 - 49
உட்படுத்தற் கல்வி 50 - 51
கிருஷ்ண பக்தி 52 - 57
மெசியா (அபிசேகம் செய்யப்பட்டவர்) 58 - 59
ஆசிரியர் ஒருவர் பெற்றுக் கொள்ளக்கூடிய லீவுகள் 62
இதுவரை பாடசாலைக்கு அன்பளிப்புச் செய்தோர் விபரம். 63

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலர்க் குழு



## விழாக் குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழு

தலைவர் :- திருமதி.ல.கோபாலராசா

மலராசிரியர் :- திருமதி.ச.மதனறாஸ்

உறுப்பினர்கள் :- திரு.பொ.சுகந்தன்

திருமதி.உ.மாதவரூபன்


திருமதி.ம.டயந்தினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

**ஓம் ஸ்ரீராம ஜெயம்**



கிளிநொச்சி வட்டக்கச்சி மாயவனூர் வித்தியாலயம் தனது பதினைந்தாம் ஆண்டிற்கான படிகவிழாவை சிறப்புடன் நடாத்துவதையிட்டு நான் பெரும் அகமகிழ்வடைகின்றேன். எமது கிராமத்தில் அமைந்த இவ்வித்தியாலயமானது கால ஓட்டத்திற்கு ஏற்றவாறு மாணவர்களுக்கான கற்பித்தலை ஆசிரியப் பெருந்தகைகள் சிறப்பான முறையில் கற்பித்து வருகின்றனர். இன்றைய கால கட்டத்தில் அதி நவீன திறன் வகுப்பறைகளில் கல்வி கற்கும் வாய்ப்பு இப்பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு கிட்டியுள்ளது.

இவ்வாறு இனிவரும் காலங்களிலும் வகுப்புக்கள் யாவும் தரம் உயர்த்தப்பட்டு எமது கிராமம் கல்வியில் முன்னேற்றம் அடைய வேண்டுமென்பதே எனது ஆசையாக இருக்கின்றது. இவ்வளவு காலமும் எமது மாணவர்களுக்கு கல்வியில் பணியாற்றுகின்ற அதிபர் திருமதி.ல.கோபாலராசா மற்றும் ஆசிரியர்கள், பெற்றோர்கள், சமூக நலன் விரும்பிகள், பாடசாலைச் சமூகத்தினர் அனைவருக்கும் இந்நாளில் இறை அருளுடன் நல் ஆசிகளையும் தெரிவித்து இப் படிகவிழா மலர் சிறப்புடன் வெளிவர எனது வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்.

சுபம்.

சிவஞானஸ்ரீ கெங்காசிவக்குருக்கள்
கண்ணன் ஐயா.
(சமாதான நீதவான்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி



கிளிநொச்சி மாயவனூர் வித்தியாலய 15ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி வெளிடப்படும் படிக விழா நூலுக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகிறோம். மாயவனூரானது ஆசாரமிக்க சைவப்பெருமக்கள் வாழும் பழமையான கிராமமாகும். இருப்பினும் உலகியற் கல்வியில் பின்தங்கிய இக்கிராமத்தில் புனிதப்பணியான கல்விப்பணியினை ஆரம்பித்த கிளி/ மாயவனூர்வித்தியாலயம் இன்று தனது 15வது அகவையில் தடம் பதிக்கின்றது. கடந்த 15ஆண்டுகளாக இப்பாடசாலை மாணவர் சமுதாயத்தின் கலங்கரை விளக்காக பெரும்பணியாற்றி வருவது மிகவும் பாராட்டத்தக்கதாகும். இன்றைய விஞ்ஞான யுகத்திற்கேற்ப நவீன கற்பித்தல் முறைகளை அறிமுகப்படுத்திவருவதும் மெச்சத்தக்கதே.

கல்வியும் ஒழுக்கமுமே எமது இரு கண்களாகும். கல்வியின் நிறைவே ஒழுக்கமாகும். வாசிப்பு பழக்கம் மனிதனை பூரணமாக்கும். இந்தவகையில் வெளிவரும் படிகவிழா நூலானது மாணவ சமுதாயத்தில் ஓர் விழிப்புணர்வை ஏற்படுத்தி கல்வித் துறையில் ஓர் உன்னத உயர் மாற்றத்தினை ஏற்படுத்தும் என்பதில் கடுகளவேனும் ஐயமில்லை.

இந் நூல் ஆக்கமானது இன்றைய காலத்தின் அத்தியாவசியமான பெரும் சேவையாகும். கல்விசார் ஒழுக்கம் என்பது இன்றைய இளைய தலைமுறையிடமிருந்து தூரமாக்கப்பட்டு வருகின்றது. ஏனெனில் இந்துக் குருமாரோ ஆத்மீக தலைவர்களோ ஏன் குடும்பத்திலுள்ள பெரியவர்களோ கூட நேரங்களில் இளையோருக்கான சரியான பாதையை அவர்களுக்குரிய விதத்தில் எடுத்துரைக்க தவறிவிடுகின்றனர். இதுவே இளைய சமுதாயம் நெறி தவறக் காரணமாக அமைந்துவிடுகிறது. இக்குறைபாட்டை படிகவிழா நூலானது நிச்சயமாக நிவர்த்தி செய்யும் என நம்புவோம்.

மாணாக்கரின் கல்விச்சமுதாய வாழ்வு மலர்ந்து நறுமணம் வீசவும் நம் உள்ளிருக்கும் தெய்வீகத்தை உணர வழிகாட்டும் பல நூல்களை எதிர்காலத்தில் இக்கல்விச் சமூகம் வெளியிடவும் அனைவரும் பல்லாண்டு காலம் நோயற்ற வாழ்வுடனும் குறைவற்ற செல்வத்துடனும் வாழ எல்லாம் வல்ல இறையருளும் சுவாமி சின்மயானந்தரது குருவருளும் கிடைக்க மனமார பிரார்த்திக்கின்றோம்.

**"போற்றி எல்லா உயிர்க்கும்"**

**பிரமச்சாரி சிவேந்ர சைதன்யா**
**வதிவிட ஆச்சாரியர்**
**சின்மயாமிசன் கிளிநொச்சி.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி



கல்விப் புலத்திலே சிறப்பான, நிறைவான பணியை ஆற்றிவரும் கிளி/ மாயவனூர் வித்தியாலயம் இன்று படிகவிழாவை முன்னெடுக் கின்றது.

மிகவும் தேவையான ஒரு பிரதேசத்திலே இந்தப் பாடசாலை செய்து வரும் பணியை பாராட்டாமல் இருக்க முடியாது. வறுமை நிலையில் வாழும் மக்கள் பெரும்பாலும் இருக்கும் இந்த இடத்திலே கல்வியின் மேன்மையை உணர்ந்து பணியாற்றும் அதிபர், ஆசிரியர்களை நன்றியோடும் பெருமனதோடும் நினைக்கின்றேன்.

வாழ்க பல்லாண்டு என வாழ்த்தி வளர்ந்து விருட்சமாக வேண்டு மென ஆசிக்கின்றேன். அற்புதமான கல்விமான்கள் உருவாக்கம் பெறவும், சிறப்பான மகான்கள் ஒளிபெறவும் வாழ்த்தி நிற்கின்றேன். இறைவனின் அருள் நினைவாகப் பொழியப்பட இறையருளை இறைஞ்சுகின்றேன்.

அன்புடன்
அருட்திரு.பாலதாஸ் பிறையன்
பங்குத் தந்தை,
வட்டக்கச்சி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

கிளிநொச்சி மாயவனூர் வித்தியாலயத்தின் படிகவிழா மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். கிளிநொச்சி கல்வி வலயத்தின் கரைச்சிக் கோட்டத்தில் அமைந்துள்ள ஆரம்ப வித்தியாலயங்களில் கிளி/ மாயவனூர் வித்தியாலயமும் ஒன்றாகும். 2003ம் ஆண்டு புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இவ்வித்தியாலயமானது பதினைந்து வருட காலப்பகுதியில், கல்வியிலும் இணைபாடவிதான செயற்பாடுகளிலும் துரித முன்னேற்றம் அடைந்து வருவது கண்கூடு. மிகவும் பின் தங்கிய கிராமியச் சூழலில் வாழும் பொருளாதார வளம் குறைந்த பிள்ளைகளின் கல்வியறிவினையும் சமநிலை ஆளுமைப் பண்புகளையும் வளர்க்கும் ஆலயமாக இவ்வித்தியாலயம் விளங்குகின்றது என்று கூறினால் அது மிகையாகாது. இவ் வித்தியாலய வளர்ச்சிக்காக அதிபர், ஆசிரியர்கள் அரும்பாடுபட்டு உழைப்பது பாராட்டுக்குரிய விடயமாகும். இவ் வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியைக் கற்ற மாணவர்கள் பல்கலைக்கழகங்களிற்கும் கல்வியியற் கல்லூரிகளுக்கும் தெரிவாகியிருப்பது குறிப்பிடத் தக்கது.

மாறிவரும் உலகின் சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய பிள்ளைகளை உருவாக்கும் வகையில் அண்மைக் காலத்தில் திறன் வகுப்பறைகள் உருவாக்கப்பட்டு, சிறப்பான முறையில் கற்றல் கற்பித்தல் செயலொழுங்குகள் திட்டமிடப்பட்டு நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. மாணவர்களின் படைப்பாற்றல் திறன்களை வெளிக்கொணரும் நோக்கோடு முதன் முதலாக மலர் வெளியீடு ஒன்றினை மேற்கொள்வது காலத்தின் பதிவாக அமையும். இவ்வித்தியாலயத்தின் வளர்ச்சிப்போக்கில் முக்கியமான ஒரு மைல்கல்லாக இம்மலர் வெளியீடு அமைகின்றது. மலர்வெளியீடு சிறப்புற அமைவதற்கு கூட்டுவலுவுடன் உழைத்த அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் கல்விச் சமூகத்தினரைப் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

திரு.தி.ஜோன் குயின்ரஸ்
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்வி அலுவலகம்,
கிளிநொச்சி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை

கிளி/மாயவனூர் வித்தியாலயத்தின் படிகவிழா மலருக்கான வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரிதும் மகிழ்வடைகின்றேன். தைமாதம் 01ம் திகதி 2003இல் ஆரம்பிக்கப்பட்ட இவ் வித்தியால யமானது 15 ஆண்டுகள் கடந்த நிலையில் இன்று பெருமிதமாக வளர்ச்சிகண்டு புதுப்பொலிவுடன் திகழ்கின்றது. 9ஆண்டு காலமாக தற்காலிகக் கொட்டகைகளில் இயங்கி வந்த இப்பள்ளி இன்று நிறைவான பௌதீகவளத்துடன் தனது கற்றல் கற்பித்தல் செயற் பாடுகளை திறம்பட வளர்த்துக் கொண்டே செல்கின்றது.

திறன் வகுப்பறைகளை தன்னகத்தே கொண்டுள்ள இப் பாடசாலை இன்று நவீன கற்பித்தல் உத்திகளுடன் மாணவர்கள் கற்க சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது பாராட்டத்தக்க அம்சமாகும். மேலும் இப்பள்ளி ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை இப்பள்ளியில் திருமதி.ல.கோபாலராசா அவர்களே அதிபராக செயற்பட்டுக் கொண்டு இருக்கின்றார். மிகவும் பின்தங்கிய பிரதேசத்தில் மாயவ னூர் என்ற கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்ட இப்பள்ளியும் இக்கிராம மும் துரிதகதியில் அபாரவளர்ச்சி அடைந்தது அந்த மாயவனின் செயல் என்றால் மிகையாகாது.

இப்பள்ளியின் நிரந்தரக் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டு நிகழ்விற்கு நானும் கல்விப் பணிப்பாளர் என்ற வகையில் பங்கு கொண்டதை இங்கு நினைவு கூருகின்றேன். போர்அனர்த்தம் காரணமாக பள்ளிகளும் இடம் பெயரும் அன்றைய காலத்தில் இப்பள்ளி வளாகத்தில் இப்பள்ளி ஆரம்பிக்கப்பட முன்னர் திருவையாறு மகாவித்தியாலயம் இயங்கிய கால வரலாற்றை நாம் மறந்துவிடலாகாது. இவ்வாறாக இவ்வித்தியாலயத்தின் கல்வி வளர்ச்சியில் அர்ப்பணிப்புடன் உழைத்த அதிபர் ஆசிரியர்கள், மாணவர்கள், கிராமமக்கள் அனைவருக்கும் கல்விப்புலம்சார்ந்த உத்தியோகத்தர்களுக்கும் இறைவனின் ஆசிகள் கிடைக்கவேண்டி என் வாழ்த்துரையை நிறைவு செய்கின்றேன்.

திரு.க.முருகவேல்,
முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர்,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருள்மிகு மாயவனூருக்கு பெருமை சேர்க்கும் வித்தியாலய படிகவிழா வாழ்த்துச்செய்தி

வட்டக்கச்சிப் பிரதேசத்தின் மக்கள்வளம் பெருகிய காலத்தில் கிராமவிஸ்தரிப்புக் காரணமாக உருவாகிய மாயவனூர்க் கிராமம் பிற்கால த்தில் வன்செயல்களால் இடப்பெயர்ந்தவர்களையும் உள்வாங்கி வளம்பெற்று வருகின்றது. வட்டக்கச்சி மண்ணின் மகிமையை மேலோங்கச்செய்து கிளிநொச்சி மாவட்டத்திலும் இலங்கைத் தீவகத்துடனல்லாது புலம்பெயர் தமிழர்கள் வாழும் உலகநாடுகள் எங்கும் பேரருள் பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் ஆலயத்தின் திருவருளும், மாயவனூர்சிவன் ஆலயத்தின் அருகிலிருக்கும் பாக்கிய மும், அன்னை வேளாங்கன்னியின் அனுக்கிரகமும் கொண்ட மாயவனூர் வித்தியாலய மானது தன்னகத்தே மங்காபுகழ் கொண்டு உயர்வு பெற்றுவரும் கலைக்கூடமாகும்.

கல்விப்புலம் சார்ந்தவர்கள் பலரும் தெரிவிக்கும் முக்கியமான கருத்து யாதெனில் நகர்ப்புற மாணவர்களின் கல்வியில் பல பின்னணிகள் உதவும் ஆனால் கிராமப்புற மாணவர்களின் கல்வியில் அவ்வூர்ப்பாடசாலையே முழுவதுமாக உதவும் அமைப்பாக உள்ளது. இந்தவகையில் ஓரிரு வசதிபடைத்தோரை விட அனேகமாக அன்றாடத் தொழில்மூலம் வாழ்க்கை நடாத்தும் ஒருகிராமமாகவே மாயவனூர்க் கிராமம் பொருளாதாரநிலையில் காணப்படுகின்றது. இதனால் அதிகஷ்டப்பிரதேசமான இக்கிராமத்தின் சிறார்களுக்கு கல்விபுகட்டுவதில் தம்மை அர்ப்பணித்து செயற்படும் ஆசிரியர்கள் ஆசிரியச் சேவையுடன் அர்ப்பணிப்பு கொண்டவர்களாக மாணவர்களின் கல்விவளர்ச்சிக்காக தம்மாலான சேவையை ஆற்றிவருகின்றனர். இவர்களை நீண்ட காலமாக முறைப்படுத்தி கற்பித்தற்சேவையை மேம்படுத்த உதவிவரும் அதிபர் திருமதி. லக்ஷ்சாந்தி கோபாலராசா அவர்களும் மிகுந்த அர்ப்பணிப்புத் திறமையுடன் இப்பாடசாலையின் வரலாற்றில் இரண்டறக் கலந்துள்ளார்.

இரண்டாயிரத்து மூன்றாம் வருடம் தைமாதம் முதலாந்திகதி (2003.01.01) ஆரம்பிக்கப்பட்ட இவ்வித்தியாலயம் பதினைந்துஆண்டுகளை சீராகநிறைவாக்கி உயர்வுப்பாதையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது. பாடசாலையை நம்பியே கல்விகற்றுவரும் மாணவர்களின் நலன்களில் மிகஅக்கறையாக இருந்து அவர்களின் கற்றலிலும் ஏனையபாடப்புறச் செயற்பாடுகளிலும் தேர்ச்சியினைப் பெற்ற இவ் வித்தியாலயம் அரும்பெரும்சேவை செய்கின்றது. தகுந்தகல்விப்பின்புலம் அற்ற நிலையும், வறுமைநிலைகொண்ட வாழ்க்கை அமைப்பையுடைய பெற்றோர்கள் சூழலும் கொண்டஇக்கிராம மாணவர்களை அவர்கள் நிலையிலிருந்து விடுவித்து கல்விச் சூழலில் தேர்ச்சிபெற வைப்பதென்பது இலகுவானகாரியமல்ல இதை நிறைவு செய்துள்ள வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள் மக்களால் என்றும் போற்றப்படக் கூடிய வர்களாவர். 2014ம் ஆண்டு இவர்களின் அரும்பெரும்முயற்சியில் ஒரு மாணவன் தரம்5 புலமைபரிசில்பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்குமேல் புள்ளிகள்பெற்றது குறிப்பிட தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபரின் அரும்முயற்சியினாலும் கல்வித்திணைக்கள உதவியினாலும் ஏனைய நிறுவனங்களின் உதவியினாலும் இப்பாடசாலையின் பௌதீகவளதேவைகள் கணிசமானஅளவு அதிகமாக காணப்படுகிறது. இது மாணவர்களின் கற்றல் கவின் நிலைக்கு மிகவும்உதவியாகஉள்ளது. அண்மையில் இப்பாடசாலையில் நவீன கற்பித்தல் திறன்வகுப்பறைகள் (Smart) திறந்து வைக்கப்பட்டுள்ளது. திரு.வே.சிவேசனறாஜ் குடும்பத்தினரும்(லண்டன்), வைத்தியகலாநிதி இ.கிருஷ்ணலிங்கம் அவர்களின் அனுசரணையுடன் லூட்சேர்ன் தமிழ்மன்றம் சுவிஸ் ஒன்றியத்தினூடாக இவ்வரியவாய்ப்பு இப்பாடசாலைக்கு கிட்டியது. ஏழைமக்கள்வாழும் ஒருஇடத்துக்கு நகரப்பாடசாலைகளில்கூட கிடைக்காத இவ்வகுப்பறை மிகவும் அனுகூலமாக இம் மாணவர் கல்விக்குதவும் இச்செயற்பாட்டை வழங்கி உதவிய யாவரும் பாராட்டுக்குரிய வர்களாவர்.

தரம் III வகையை சார்ந்த பாடசாலையாக இருக்கும் இப்பாடசாலை இவ் அதிபர் காலத்தில் தரம்IIக்கு உயர்வு பெறும்போது கனிஷ்ட இடைநிலை வகுப்புக் களையும் ஆரம்பித்து நடத்தக்கூடியதாகவிருக்கும் காரணம் சிலமாணவர்கள் இப் பாடசாலைக் கல்விமுடிந்ததும் அருகிலுள்ள உயர்பாடசாலைகளுக்கு செல்ல வழியின்றி இடைவிலகல் ஏற்படுவதையும் அவதானிக்கமுடிகின்றது. அத்துடன் அவர்கள் தாம்பயின்ற பாடசாலையில் பயிலும்போது மேலும்துலங்கல் ஏற்படஇடமுண்டு எனவே இப்பதினைந்தாவது படிகவிழாவில் இப்பாடசாலைக்கு கிடைக்கும் உயர்வாக அமையின் பலராலும் வரவேற்கப்படகூடிய ஒருநிர்வாக செயலாக அமையும் என்பதில் ஐயமில்லை.

ஒன்றரை தசாப்தங்களை கடந்து அரைத்தலைமுறையை நிறைவு செய்துள்ள இவ்வித்தியாலயம் சமூகநோக்கில் மிகப்பெரும் சாதனையை நிலைநாட்டியுள்ளது. என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. நகர்ப்புறப்பாடசாலைகள் பலவற்றில் பங்குதாரர்களுக்கும் பயனாளிகளுக்கும் எந்த வகையான வகைகூறல் அற்ற நிலையில் அரசகல்வி இயந்திரசெயற்பாடுபோல் இயங்குகின்ற நிலைமைகள் பரக்கக் காணப்படுகிறது. ஆனால் இவ்வித்தியாலயத்தில் அதிபர் ஆசிரியர்கள் தங்கள் சேவையினூடாக சமூகத்திற்கான வகைகூறலில் சிறப்பு பெற்றுள்ளதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. அன்பு, பரிவு, அறிவூட்டல் எனும் செயற்பாட்டினூடாக இவ் வகைகூறலை காண்பித்து வருந்தன்மை இவ்வித்தியாலயத்திற்கு மெருகூட்டும் செயற்பாடாக அமைகின்றது. இப்பாடசாலையில் ஆரம்பக்கல்விகற்றமாணவர்கள் பல்கலைக்கழகங்களிலும் கல்வியற்கல்லூரிகளிலும் கற்று வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

இப்பாடசாலை இந்தவகையில் உயர்சிறப்புப் பெற்றுவர தன்அயராத உழைப்பை வழங்கிவரும் அதிபர் திருமதி லக்ஷ்சாந்தி கோபாலராசா அவர்கள் மக்களாலும் கல்வி ப்புலத்தாலும் போற்றுதற்குரியவராவர் இணைந்த ஆசிரியர் குழாத்தினரும் இச் சிறப்பை பெறுகின்றனர். மேலும் இவ்வித்தியாலயம் உயர்தரத்தினைப்பெற்று மேலோங்க இந்நாளில் எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு.கோ.செல்வராசா
ஓய்வுநிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர்.
(கல்வி முகாமைத்துவம்)
கிளிநொச்சி கல்விவலயம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மிளிரும் கல்விச்சாலைக்கு மகுடஞ் சூட்டும் படிகவிழா

"அன்னயாவினும் புண்ணியங்கோடி" என்ற மகாகவி சுப்பிரமணியபாரதியின் கூற்றுக்கு இலக்கணமாக மாயவனூரின் ஒளிக்கீற்றாகத் தொடங்கிய மழலைகள்பள்ளி இன்று பதினைந் தாவது அகவையில் கால்பதித்திருப்பது மகிழ்வைத் தருகின்றது. போரும் வாழ்வுமான சூழலில் பிள்ளைகளின் அறிவுப்பசியைப் போக்க எண்ணியபோது இவ்விடத்தில் தொடக்கப்பள்ளி ஒன்றின் தேவை அனைவராலும் உணரப்பெற்று இன்று மாயவனூர் வித்தியாலயம் என்றசிறப்பினைத் தனதாக்கி நிற்கின்றது.

அடிப்படை வசதிகள் இன்றித் தற்காலிகக் கீற்றுக்கொட்ட கையில் தொடங்கி இன்று திறன்வகுப்பறை கூடங்களைக் கொண்டு நவீன உலகை வெற்றி கொள்ளத்தக்கவகையில் செயற்படுவது பாராட்டுக்குரியதாகும். இந்நிலை மாற்றத்தினை மேம்படுத்தும் அதிபர், ஆசிரியர், பெற்றோர் நலன்விரும்பிகளைப் பாராட்டுகின்றேன்.

திரு.சி.கணேசலிங்கம்
உதிவிக் கல்விப்பணிப்பாளர்,
(ECD).


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# படிகவிழாக்காணும் பாடசாலைக்கு வாழ்த்துக்கள்

1983ஆம் ஆண்டு நாட்டின் தென்பகுதியில் ஏற்பட்ட வன்முறை காரணமாக மலையகப் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் வட்டக்கச்சி சூசையப்பர் தேவாலயத்திலும், வட்டக்கச்சி மத்தியகல்லூரியிலும் முகாம் அமைத்து தங்கியிருந்த காலத்தில், காடாக இருந்த மாயவனூர் மண்ணை கழனியாக்கி அங்கு குடியேறினார்கள்.

அக்காலகட்டத்தில் மாயவனூர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவராக இருந்த திருவாளர் மாரிமுத்து இராசரத்தினம் அவர்களின் பெருமுயற்சியாலும், இக்கிராமத்தில் ஒருபள்ளி அமையவேண்டுமென்ற அவ்வூர்மக்களது பேரவாவினாலும் 1992ஆம் ஆண்டுகளில் கிளிநொச்சி மாவட்ட கல்விப் பணிப்பாளராக இருந்த திருவாளர் கந்தசாமி அவர்களின் கட்டளைக்கமைவாக வட்டக்கச்சி கொத்தணி அதிபராக இருந்த முன்னாள் வடக்குமாகாணகல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர்விவகாரஅமைச்சர் திருவாளர் தம்பிராசா குருகுலராஜா ஆகியோரோடு நானும் இணைந்து பாடசாலைக்கென ஒதுக்கப்பட்ட காணி ஐந்து ஏக்கர் விஸ்தீரணம் கொண்டதா என்பதை உறுதிப்படுத்தி 1992ஆம் ஆண்டு காலப் பகுதியிலே இப்படசாலையை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருந்தோம்.

தொடர்ந்துவந்த நாட்டின் இடப்பெயர்வுகள் காரணமாக கிளி/ திருவையாறு மகாவித்தியாலயம் தற்காலிகமாக அவ்விடத்தில் இயங்கியது. அதன் தொடர்ச்சியாக 2003ஆம் ஆண்டு கிளிநொச்சி மாவட்டத்தின் வட்டக்கச்சி மாயவனூர்க் கிராமத்தில் அவ்ஊரின் பெயர் சொல்லும் வகையில் மிகக் குறைந்த மாணவர்களுடன் உருவாக்கப்பட்ட கிளி/ மாயவனூர் வித்தியாலயம் இன்று நூற்றுக்கும் அதிகமான மாணவர்களைக் கொண்டு கல்விக்கனி கொடுக்கும் பெருவிருட்சமாக எதிர்கால சந்ததியினரை வலுப்படுத்தியும், வழிப்படுத்தியும் வருகின்றமை வரலாற்றில் பதிவிடத்தக்கது.

ஆரம்பித்தகாலம் முதலே பல்வேறு இடர்களுக்கும், இன்னல்களுக்கும் முகம்கொடுத்த போதும் மெல்ல மெல்ல மீண்டெழுந்து பரீட்சைப் பெறுபேறுகளிலும், இணைபாடவிதான செயற்பாடுகளிலும் தனது இயல்தகைமைக்கேற்ற சாதனைகளை நிலைநாட்டி வருவது இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு இன்னும் வலுச்சேர்க்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர், ஆசிரியர்கள், உதவி ஆசிரியர்கள்



இடமிருந்து வலம்

செல்வி.ம.பிரவீனா ,திருமதி.உ.மாதவரூபன்,செல்வி.ஐ.நிர்மலா,திருமதி.ச.மதனறாஸ்,திருமதி.ல.கோபாலராசா,
திரு.பொ.சுகந்தன்,திருமதி.கு.கங்காதரன்,செல்வி.பா.மேரி கோல்டினி,திருமதி.ட.மங்களேஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையின் பல்துறைசார் வளர்ச்சி, எதிர்கொண்ட சவால்கள், நிகழ்த்திக் காட்டிய சாதனைகள் என்பவற்றோடு மாணவர்களின் அறிவுத்திறன், ஆளுமைகள் மற்றும் ஆற்றல்கள் என்பவற்றை எடை போட்டுப் பார்க்கும் முதனிலை நிகழ்வே பாடசாலை ஒன்றின் ஆண்டுவிழா என்றால் அது மிகையாகாது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பண்பாட்டோடும் ஒழுக்க விழுமியங்களோடும் ஒன்றித்திருக்கும் வட்டக்கச்சியின் மாயவனூர் என்னும் குக்கிராமத்தில் வாழும் மக்கள், தம்பிள்ளைகளின் எதிர்காலம் தொடர்பில் கொண்டுள்ள ஏக்கங்களை குறைக்கும் வகையில் தொடர்ச்சியாக தனது கல்விப்பணியை ஆற்றிவரும் இப்பாடசாலை இன்று பதினைந்து ஆண்டுகளை கடந்து நிற்பதென்பது காலப்பதிவே யாகும்.

'கல்வியே வாழ்வின் ஒளி' என்பதை தன் இயங்குவிதியாகக் கொண்டு முதல் அதிபர் திருமதி.லக்ஷ்சாந்தி கோபாலராசா அவர்களின் அயராத உழைப்போடு, தன்சார்ந்த சமூகத்திற்கு கனதியான கல்விப்பணியாற்றிவரும் கிளி/மாயவனூர் வித்தியாலயம் வருங்கால சந்ததியின் வளமான வாழ்வுக்கும், அதன்வழி நம்மூருக்கும், மாவட்டத்திற்கும் என்றும் உயிரூட்டி உரமிடும் நிறைகுடமென, காலாதிகாலமாய் கனதியான கல்விப்பணிபுரியவும், அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்களென ஒட்டுமொத்த பாடசாலைச்சமூகத்தின் உழைப்பையும், அர்ப்பணிப்பையும் உரமாக்கி இப்பள்ளியின் பதினைந்தாவது ஆண்டு நிறைவில் அதன் தடங்களைச் சுமந்து வெளியீடு காணும் படிகவிழாமலர் சிறப்புறவும் மனம் நிறைந்து வாழ்த்துகின்றேன்.

சிவஞானம் சிறீதரன்.<br>
பாராளுமன்ற உறுப்பினர்.<br>
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்.<br>
இணைத்தலைவர் - கிளிநொச்சி ஒருங்கிணைப்புக் குழு.<br>
கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கனவுகளை நனவாக்கும் மாயவனூர் வித்தியாலயம்.

எதிர்பார்ப்புகள் நிறைவேறும்போது ஏற்படும் மகிழ்ச்சிக்கு நிகரில்லை. அப்படியான ஒரு எதிர்பார்ப்பும் கனவும் வட்டக்கச்சி மாயவனூர் வித்தியாலயத்தின் வளர்ச்சியில் எனக்கு ஏற்படுகின்றது. 2003ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாடசாலை யுத்தகாலத்திற்குப் பிறகும் அடிப்படைத் தேவைகளையே நிறைவேற்றக் கடினமான சூழலிலிருந்தது. இந்த நிலையில் இந்தப் பாடசாலையின் அதிபரும் ஆசிரியர்களும் பெற்றோர்களும் இணைந்து 2011இல் என்னை அணுகினர். அப்பொழுது மாவட்ட அபிவிருத்திக்குழு, பிரதேசஅபிவிருத்திக்குழு ஆகியவற்றின் பொறுப்பில் இருந்த வாய்ப்பைப் பயன்படுத்தி ஒருநிரந்தரக் கட்டிடத்தை கட்டிமுடித்தோம்.

தொடர்ந்து பாடசாலைக்கான ஏனைய பௌதீக வளங்கள் ஓரளவுக்கு நிரப்பப்பட்டன. அதிபரும் ஆசிரியர்களும் அர்ப்பணிப்போடு ஊக்கமாகப்பாடசாலையை வழிநடத்தினர். அதன் விளைவாக மாணவர்களின் கல்வியும் திறன்விருத்தியும் மேலோங்கியது. இந்தப் பாடசாலையில் ஆரம்பக்கல்வியைக் கற்றவர்களில் பலர் உயர்கல்வி கற்கின்றனர். பாடசாலையில் நவீனகற்பித்தல் சாதனங்களை உள்ளடக்கிய திறன் வகுப்பறைகள் உட்பட பலமுன்னேற்றகரமான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இது மாயவனூரின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் பெரியதொரு வாய்ப்பினை அளிக்கும்.

கல்வி வளர்ச்சியே அனைத்திற்குமான அடிப்படையாகும். இதற்கு ஆதாரமானது சிறந்த கல்விச்செயற்பாடுகளும் சிறப்பான பாடசாலைகளுமாகும். ஒருபிரதேசத்தின் வளர்ச்சியானது அங்குள்ள பாடசாலையின் வளர்ச்சியிலேயே தங்கியிருக்கிறது. இவற்றுக்கமைவாக நல்லனவற்றைச் சாதித்துக் கொண்டிருக்கும் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்களும் ஆசிகளும் உரித்தாகட்டும். மேலும் இந்தப்பாடசாலையை வளர்த்தெடுப்பதற்கு நாம் அனைவரும் ஒன்றுகூடி உழைப்போம். ஒருங்கிணைந்து திட்டமிட்டு உழைத்தால் உயர்வினைப் பெறமுடியும்.

திரு.முருகேசு சந்திரகுமார்
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# படிகவிழா வாழ்த்துச் செய்தி

''எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்'' என்பார்கள். அவ்வகையில் பாடசாலைகள் அனைத்துமே ஆலயங்களாகப் போற்றப்படுகின்றன. கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள பாடசாலைகளில் ஒன்றாக மிளிர்கின்ற மாயவனூர் வித்தியாலயமும் ஒரு ஆலயமே.

15 ஆவது வருடத்தில் தடம்பதிக்கும் இப்பாடசாலை குறுகிய காலத்தில் படிப்படியாக வளர்ச்சி அடைந்து வருவது பாராட்டத்தக்க விடயமாகும். பாடசாலைப் பங்குதாரர்களில் ஒருவராக இருந்த என்னை பாடசாலைச்சுற்றுமதில் அடிக்கல் நாட்டுவிழாவிற்கு அழைத்து என்னை அடிக்கல் நாட்டவைத்ததை நினைவுகூர விரும்புகின்றேன்.

மாறிவரும் உலகின் சவாலுகளுக்கேற்ப திறன் வகுப்பறைகளைக் கொண்ட இப்பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சியிலும், இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் ஒழுக்க விழுமியங்களிலும் சிறந்து விளங்குகின்றது.

இப்பாடசாலையில் ஆரம்பக்கல்வியை கற்ற மாணவர்கள் உயர்கல்வியைக் கற்பது இப்பாடசாலையின் அடித்தள அறுவடையே என்று கூறினால் மிகையாகாது. இப்பாடசாலை வளர்ச்சிக்கு அயராது பாடுபடும் அதிபர், ஆசிரியர்களை பாராட்டுவதோடு படிகவிழா சிறப்பாக கொண்டாடும் மாணவச் செல்வங்களுக்கும் பெற்றோர்களுக்கும் எனது உளமார்ந்த படிகவிழா வாழ்த்துக்கள்.

திரு.வை.தவநாதன்
முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிபரின் வாழ்த்துச் செய்தி

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேசத்தில் மாயவனூர் கிராமத்தின் குணதிசை எல்லையிலிருந்து அருள் பாலித்துக் கொண்டிருக்கும் திருக்குழல்நன்மாதுமை சமேத கணபதீஸ்வர சிவனாலயத்திற்கு அருகாமையில் பசுமை நிறைந்த மரங்கள் புடைசூழவுள்ள இயற்கைச் சூழலில் ஆரம்பக் கல்விக்கான அடித்தளத்தை மிகவும் உறுதியான முறையில் வழங்கிக் கொண்டிருக்கும் கிளிநொச்சி மாயவனூர் வித்தியாலயத்தின் பதினைந்தாவது ஆண்டு நிறைவையிட்டு படிகவிழா நிகழ்விற்கு இவ்வித்தியாலய முதல் முதல்வராக இருந்து வரலாற்றுப் பதிவுகள் தாங்கிய இக்கன்னி இதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமிதமடைகிறேன்.

ஒன்று ஒன்று இரண்டாயிரத்துமூன்றாம்(01.01.2003)ஆண்டு இப்பாடசாலை புதிதாக ஆரம்பிக்கப்பட்டபோது நான் இப்பாடசாலைக்கு அதிபராக நியமனம் பெற்று வந்தேன். ஆரம்ப காலத்தில் வெறும் கீற்றுக்கொட்டகையுடன் ஆரம்பித்த இப்பாடசாலை இடப்பெயர்வின் பின் மீள்குடியேற்றத்துடன் 2012இல் நிரந்தர கட்டடம் அமைக்கப்பட்டு கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை திறம்பட நிகழ்த்தி வருகின்றது. இன்று வரை இப்பாடசாலையின் முன்னேற்றத்திற்கு என்னுடன் பயணிக்கும் கல்வி அதிகாரிகள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், புலம்பெயர் உறவுகள், நலன்விரும்பிகள், பாடசாலைச் சமூகம், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் தோள்கொடுத்து பல சிரமங்கள் இன்னல்களை எதிர் கொண்டு உழைத்து வருகின்றமையை நினைத்து மனம் மகிழ்கின்றேன்.

இன்று இப்பாடசாலைக்கும் சமூகத்திற்கும் இடையே சிறந்த நல்லுறவு காணப்பட்டு வருகின்றது. புலம்பெயர் உறவுகளின் முயற்சியால் மாற்றமடைந்து வருகின்ற உலக ஓட்டத்திற்கேற்ப நவீன கற்பித்தல் சாதனங்களை பெற்றுள்ளது. எமது பாடசாலை மாணவர்கள் தரம் 05 வரை கல்வி கற்று வேறு பாடசாலைகளில் உயர்கல்வியினைப் பயின்று பல்கலைக்கழகத்திலும் கல்வியியற் கல்லூரியிலும் கல்வி பயில்வது இப்பாடசாலைக்கு பெருமை சேர்க்கின்றது. அத்துடன் எமது மாணவர்கள் இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் சிறப்பாக வெற்றி பெறுவதுடன் விசேட கல்வித் தேவையுள்ள மாணவர்கள் கோட்ட வலயமட்ட போட்டிகளில் பங்குகொண்டு வெற்றி பெற்றுள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படிகவிழா மலரினை வெளியிடுவதற்கு என்னுடன் துணைநின்று செயற்படும் மலராசிரியர், மலர்க்குழுவினர், விழாக்குழுவினர், மாணவர்கள், வாழ்த்துச்செய்தி, ஆசிச்செய்தி தந்தருளிய பெரியோர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், புத்தகப் பிரதியாக்கத்திற்கு அனுசரனை வழங்கியவர்கள், நலன்விரும்பிகள், புலம்பெயர் உறவுகள் மற்றும் பல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் என் நன்றிகள் உரித்தாகட்டும்.

படிகவிழாக் காணும் இவ்வித்தியலாயம் பல வழிகளிலும் மென்மேலும் வளர்ச்சியடைந்து பல சாதனைகள் படைத்து அதன் பணி சிறக்க என்றென்றும் எல்லாம்வல்ல இறையருள் துணைபுரியவேண்டி வாழ்த்துகிறேன்.

அதிபர்
திருமதி.ல.கோபாலராசா
S.L.P.S.2II.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதழாசிரியரின் பேனாவில் இருந்து

இலங்கை திருநாட்டின் வடபால் ஓங்கும் மருதநிலத்தில் கிளிநொச்சி மாவட்டத்தின் கிழக்குப் பகுதியில் மாயக்கண்ணன் தவழ்கின்ற மாயவனூர் கிராமத்தில் கல்விக் கதிரை வீசுகின்ற ஒரு பாடசாலையாக கிளி/மாயவனூர் வித்தியாலயம் விளங்குகின்றது.

இப்பாடசாலையானது குறுகிய காலத்தில் ஆரம்பிக்கப் பட்டாலும் பல்வேறு தடைகள், இன்னல்கள் மத்தியிலும் துரித கதியில் வளர்ச்சி அடைந்து நவீன கற்பித்தல் கற்றல் நுட்ப முறைகளுடன் மாணவர்களின் வளர்ச்சிக்கு அயராது பாடுபட்டு வரும் இப்பாடசாலையானது தான் நடந்து வந்த பாதைப் பதிவினை எழுத்து மூலம் ஆவணப்படுத்துவதற்கு எடுத்த முயற்சிக்கு நானும் ஒரு பங்காளியாக இருந்து வருகின்றேன் என்பது பெருமைக்குரிய விடயமாக அமைகின்றது.

ஆரம்பகாலத்தில் இருந்து இவ்வித்தியாலய வளர்ச்சிக்கு பாடுபட்டு வருகின்ற வித்தியாலய முதல்வர், அவருடன் பயணித்த ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழையமாணவர்கள், நலன் விரும்பிகளின் ஒத்துழைப்புடன் இவ்வித்தியாலயமானது படிகவிழா காண்பதில் பேருவகை அடைகின்றேன்.

மேலும் இக்கன்னி இதழுக்கு ஆக்கங்கள் தந்த மாணவ மணிகள், பழையமாணவர்கள், பெற்றோர்கள், பெரியோர்கள், கல்விப்புலம்சார்ந்த உத்தியோகத்தர்கள், ஆசிச்செய்தி, வாழ்த்துச் செய்தி தந்துதவியவர்கட்கும் நன்றியை தெரிவிப்பதோடு தற்போதைய கால ஓட்டத்துக்கு ஏற்ப வெளிவருகின்ற நூலின் மூலம் கிடைக்கக் கூடிய நல்ல விடயங்களை பெருமனதுடன் ஏற்றுக்கொள்ளுமாறு உளமார வேண்டுகின்றேன்.

திருமதி.ச. மதனறாஸ்
ஆசிரியர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்திக் குழு



# மாணவர் மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை வரலாறு

இலங்கைத் திருநாட்டின் வடக்குத் திசையிலே கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவின் கிழக்குப் பகுதியிலே இயற்கை வளங்களால் சூழப்பட்ட பச்சைப்பசேலென்று செந்நெல் விளைகின்ற வட்டக்கச்சி பிரதேசத்தில் மாயவனூர்க் கிராமத்தில் திருக்குழல்நன்மாதுமை சமேதகணபதீஸ்வர சிவனாலயம், ஸ்ரீரங்கநாதப் பெருமானாலயம், அன்னை வேளாங்கன்னி ஆகிய ஆலயங்களால் சூழப்பட்டு மத்திய பகுதியில் பின்தங்கிய கிராமத்தில் அமைந்துள்ள ஆரம்பப் பாடசாலையே கிளிநொச்சி மாயவனூர் வித்தியாலயமாகும்.

இக்கிராமத்தில் வசிக்கின்ற மாணவர்கள் தூரப்பாடசாலைக்குச் சென்று பெரும் சிரமத்தின் மத்தியிலும் கல்வி கற்று வருகின்றமையை கருத்திற் கொண்டு அன்றைய கிராமசேவையாளர், கிராமத்துதலைவர்கள், கல்விஅதிகாரிகள், மக்கள் ஆகியோரின் உள்ளங்களில் மாயவனூர்க் கிராமத்தில் ஒரு பாடசாலை உருவாக வேண்டும் என்ற எண்ணம் உருவாகியது. அதன் பிரகாரம் பாடசாலைக்கான காணி மாயவனூர்ச் சிவனாலயத்திற்கு அருகாமையில் பொதுத்தேவைக்காக ஒதுக்கப்பட்டிருந்த காணியில் ஒருகுழாய்க் கிணறுடன் காணப்பட்ட ஐந்து ஏக்கர் காணி பாடசாலை ஒன்றை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்டது. 1996ம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக பன்னங்கண்டி இந்துதமிழ்க்கலவன் பாடசாலை இக் காணியிலே இயங்கி வந்ததை தொடர்ந்து கிளி/ திருவையாறு மகா வித்தியாலயம் 1997ம் ஆண்டு இக் காணியில் இயங்கி வந்தது. பின் இப்பாடசாலைகள் தமது சொந்த இடங்களில் இயங்க ஆரம்பித்தவுடன் இக் கிராமத்து மாணவர்களின் நலனை கருத்திற் கொண்டு வட்டக்கச்சி மகாவித்தியாலயத்துடன் இணைப்பு பாடசாலையாக தரம் ஒன்று தொடக்கம் தரம் ஐந்து வரை ஆரம்பப்பிரிவு பாடசாலையாக இயங்கி வந்தது.

இக்கிராமத்தில் தனி ஒரு பாடசாலை இயங்க வேண்டும் என்ற அனைவரினதும் கோரிக்கைக்கு அமைவாக மாகாணக் கல்வி செயலாளர் க.சண்முகலிங்கம் அவர்களின் 8/6/5-5 இலக்கம் கொண்ட 14.10.2002 திகதியிடப்பட்ட கடிதத்தின் பிரகாரம் அன்றைய வலயக் கல்விப்பணிப்பாளர் திரு.ப.அரியரத்தினம் அவர்களினால் திருமதி.ல.கோபாலராசா அவர்கள் இப்பாடசாலையின் முதல் அதிபராக நியமிக்கப்பட்டு 01.01.2003 ஆம் ஆண்டு இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு வைபவரீதியாக 03.02.2003ஆம் ஆண்டு வலயக்கல்விபணிமனை சார்பாக அன்றைய தமிழ்ப்பாட ஆசிரிய ஆலோசகர் திரு.சி.கணேசலிங்கம் அவர்களால் ஆரம்பிக்கப் பெற்றது. அக்காலப்பகுதியில் ஆசிரியர்களாக திருமதி.ப.சத்தியநாதன், திருமதி.லீ.நகுலேஸ்வரன், செல்வி.க.சுமதி, உதவி ஆசிரியர்களாக செல்வி.சி.ஜெயந்தினி, செல்வி.க.பிறேமினி ஆகியோர் கடமையாற்றியதுடன் எவ்வித பௌதீக வளங்களும் அதிபர் அலுவலகமும் இல்லாமல் தற்காலிக ஒரு கீற்றுக்கொட்டகையில் நிலத்தில் இருந்து மாணவர்கள் தமது கற்றலை மேற்கொண்டனர். முதன் முதலாக 09.01.2003ம் ஆண்டு தரம் ஒன்றிற்கான புதுமுகவிழாவும் 07.03.2003ம் ஆண்டு இல்லமெய்வல்லுனர் திறனாய்வும் மிகச் சிறப்பாக நடைபெற்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு வலயக்கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடன் கிளி/இராமநாதபுரம் மகாவித்தியாலயத்தில் இருந்து பாலர் மேசைகளும் கதிரைகளும் கொண்டுவரப்பட்டு இரண்டாவது கீற்றுக்கொட்டகையும் அமைக்கப்பெற்று 104 மாணவர்கள் கற்று வந்தனர். அவர்களின் அத்தியாவசிய தேவையை பூர்த்தி செய்யும் முகமாக மலசலகூடம் ஒன்று அமைக்கப்பட்டது. மாணவர்களின் பாவனையில் இருந்த குழாய்க்கிணறு 2007ஆம் ஆண்டு பழுதடைந்ததன் காரணமாக மாணவர்கள் பலத்த சிரமத்தின் மத்தியில் அருகிலிருந்த சிவனாலயத்திலிருந்து தண்ணீர் கொண்டு வந்து பாடசாலைத் தேவை பூர்த்தி செய்யப்பட்டது. பிள்ளைகளின் சிரமத்தை கருத்திற்கொண்டு பெற்றோர்கள் அனைவரும் சேர்ந்து 25முழம் கொண்ட கிணறொன்றை வெட்டினார்கள். அக்கிணற்றிற்கு கரைச்சி பிரதேசசபை செயலர் செல்வி.ப.சுலோஜினி அவர்களின் நிதி ஒதுக்கீட்டினால் கிணறு கட்டப்பட்டது. நிதி நெருக்கடி காரணமாக கிணற்றின் உட்பூச்சு பூசப்படவில்லை. இவ்வாறாக மாணவர்கள் தமது கற்றலை மேற்கொண்டு வந்தனர். 2008ம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக எமதுபாடசாலை வளாகத்தில் இடம் பெயர்ந்த 33 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் வசித்து வந்தனர். அக்காலப் பகுதியில் இக் குடும்பங்களின் பிள்ளைகளையும் சேர்த்து முந்நூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்றதுடன் மூன்று அதிபர்களும் ஆறு ஆசிரியர்களும் இணைப்பில் கடமையாற்றினர். இவ்வாறு கற்றல் செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் எமது பாடசாலையும் அனைத்து உடமைகளையும் இழந்து 01.08.2009ஆம் ஆண்டு கிளிகண்ணகிநகர் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் எமது பாடசாலை தற்காலிகமாக இயங்கியது. அதன் பின்னர் 02.08.2009ம் ஆண்டு வவுனியா தொழில்நுட்பக் கல்லூரியிலும் இயங்கியது.

மீண்டும் 26.04.2010ம் ஆண்டு மீள்குடியேற்ற நடவடிக்கையுடன் எமது கிராம மக்களுடன் சொந்த இடத்திற்கு வருகை தந்தபோது எமது பாடசாலையில் ஆசிரியராக கடமையாற்றிய திருமதி.கே.கருணாகரன் அவர்களையும் செல்வி.ஜெயக்குமார் தர்சிகா என்ற மாணவியையும் இழந்ததோடு நாம் இங்கு வருகை தந்தபோது எவ்வித பௌதீக வளங்களும் உடைமைகளும் காணப்படவில்லை. இதன் காரணமாக 26.04.2010ம் ஆண்டு எமது பாடசாலைக்கு அண்மையிலுள்ள சிவனாலயத்தில் பாடசாலையை நடாத்தி வந்தோம். பின்பு பெற்றோர்கள், கிராமசேவையாளர் திரு.ப.ரூபசிங்கம் அவர்களும் இணைந்து பாடசாலைக் காணியை சிரமதானம் செய்து மரநிழலில் மாணவர்கள் கல்விகற்க ஏற்பாடு செய்யப்பட்டது. அதன்பின் தற்காலிக கொட்டகைகள் அமைக்கப்பட்டு வகுப்புக்கள் நடத்தப்பட்டன.

இக்கொட்டகைகளை புனரமைப்புச் செய்வதற்காக கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், மாவை சேனாதிராசா, சரவணபவான் ஆகியோரால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வகுப்புக்கள் புனரமைப்புச் செய்யப்பட்டு கற்றல் செயற்பாடுகள் நடைபெற்று வந்தன.

இவ்வாறான சூழ்நிலையில் மாணவர்களுக்கு நிரந்தரக் கட்டடம் இல்லாதது பெரும் குறையாகக் காணப்பட்டது. இதனை நிவர்த்தி செய்யும் முகமாக அன்றைய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலயக்கல்விப்பணிப்பாளர் திரு.த.குருகுலராஜா அவர்களின் காலத்தில் கட்டடத்திற்கான நிதிஒதுக்கீடு செய்யப்பட்டு. கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் அவர்களின் "என்றிப்" திட்டம் மூலம் நிரந்தர கட்டடம் கிடைக்கப் பெற்றது. 19.08.2011 அன்று 120 x 27 அளவு கொண்ட முதலாவது நிரந்தர கட்டடத்திற்கான அடிக்கல்லை கௌரவ பாராளுமன்றஉறுப்பினர் திரு.மு.சந்திரகுமார் அவர்களால் நாட்டப்பெற்று முன்னாள் வலயக்கல்விப்பணிப்பாளர் திரு.க.முருகவேல் அவர்களின் காலத்தில் கட்டடம் கட்டப்பெற்றது. பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் கட்டப்பெற்று 12.01.2012 அன்று கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திரு.மு.சந்திரகுமார் அவர்களால் திறந்து வைக்கப் பெற்றது. மீதிப்பணத்தில் பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தினால் நீர்த்தாங்கி அமைக்கப் பெற்றதுடன் உலக உணவுத்திட்டத்தின் நிதி மூலம் சமையல் கூடமும் அமைக்கப் பெற்றது.

இதனைத் தொடர்ந்து "நெக்கோட்" திட்டத்தின் மூலமும் 120 x 27 அடி நீளம் கொண்ட இரண்டாவது கட்டட்மும் "இந்தியன்" உதவித்திட்டத்தின் மூலமும் 60 x 25 அடி நீளம் கொண்ட மூன்றாவது கட்டடமும் கட்டப்பட்டதுடன் ஐயாயிரம் ஊட்டப்பாடசாலை அபிவிருத்தி வேலைத் திட்டத்தின்கீழ் 280 அடி நீளமான மதிலும் நுழைவாயிலும் அமைக்கப்பெற்று 04.07.2013 அன்று கௌர்வ பாராளுமன்றஉறுப்பினர் முருகேசு சந்திரகுமார் அவர்களால் திறந்து வைக்கப்பெற்றது.

இப்பாடசாலையின் சுற்று மதிலுக்கான அடிக்கல்லை ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் திரு.வைத்தியநாதன் தவநாதன் அவர்களால் நாட்டப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

மாணவர்களின் நவீன கற்றல் திறனை ஊக்குவிக்கும் முகமாக 2013ம் ஆண்டு ஐந்து கணினித் தொகுதிகளைக் கொண்ட கணினிக் கூடமும் பல்லூடக எறிக்கையையும் கிளிநொச்சி வலயக்கல்விப்பணிமனையால் வழங்கப்பட்டது. அத்துடன் ஒலிபெருக்கி தேவையையும் பூர்த்திசெய்யும்முகமாக 24.02.2012ஆம் ஆண்டு தர்மலிங்கம் நேசராசா அவர்களினால் ஒலிபெருக்கித் தொகுதி வழங்கப்பட்டதுடன் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் வைத்தியநாதன் தவநாதன் அவர்களால் நீர்ப்பம்பியும் வழங்கப்பட்டது. இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு பதினொரு வருடத்தில் 2014ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் செல்வன் குணலிங்கம் அருள்வேந்தன் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் 162 புள்ளிகள் பெற்று முதன் முறையாக வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார். இம் மாணவனது சாதனை எமது பாடசாலை வரலாற்றிலே பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டும். இவ்வெற்றிக்கு உறுதுணையாக இருந்த திருமதி.றேமன் தவச்செல்வி மரியதாஸ் ஆசிரியர் அவர்கள் பாராட்டுக்குரியவர். தொடர்ந்து 2015ம் ஆண்டு செல்வி கோவிந்தராஜன் நிஷ்விகா 164 புள்ளிகளைப் பெற்றார். இவ்வெற்றிக்கு உறுதுணையாக இருந்தவர் திரு.பொ.சுகந்தன் ஆசிரியராவர்.

மாறிவரும் உலகின் சவால்களை எதிர்கொள்கின்ற தேவை மாணவர்களுக்கு காணப்படுகின்றது. இதனை நிவர்த்தி செய்யும் முகமாக நவீன கற்பித்தலுக்காக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லண்டனில் வசித்து வரும் வேலுப்பிள்ளை சிவேசனறாஜ் குடும்பத்தினர் அவரது தாயாரான அமரர் இராஜஇராஜேஸ்வரி வேலுப்பிள்ளையின் நினைவாக மூன்றுலட்சம் ரூபாய் பெறுமதியான முதலாவது திறன் வகுப்பறையினை 23.02.2018 அன்று அமைத்துத் தந்தனர். இதன் பெயர்ப்பலகையினை திரு.அ.பங்கையற்செல்வன் (கிளி/வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம் அதிபர்) அவர்களால் திரைநீக்கம் செய்துவைக்கப் பெற்றதுடன் இவ் திறன்வகுப்பறையினை திரு.அ.அமிர்தலிங்கம் (முன்னாள் கரைச்சிக் கோட்டக்கல்வி அதிகாரி) அவர்களால் திறந்துவைக்கப் பெற்றது.

மேலும் கற்றல் கற்பித்தலை இலகுபடுத்துவதற்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை வைத்திய அதிகாரி இராமநாதன் கிருஸ்ணலிங்கம் அவர்களின் ஏற்பாட்டில் சுவிஸ் தமிழ்மன்றம் "லுட்சேர்ன்" அமைப்பின் மூலம் இரண்டாவது திறன்வகுப்பறையும் அமைக்கப்பெற்றது. கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அவர்களால் திறன்வகுப்பறை பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்துவைக்கப்பெற்றதுடன் வைத்தியகலாநிதி இராமநாதன் கிருஸ்ணலிங்கம் அவர்களால் திறன் வகுப்பறை திறந்துவைக்கப்பெற்றது. பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் பாடசாலையின் நோக்கத்தை அடைவதற்காக கற்பித்தல் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் மாணவர்களை இணைபாட விதானச் செயற்பாடுகளில் கோட்ட, வலய மட்டங்களில் பங்கு பற்றச் செய்து வெற்றியும் பெற்றுள்ளனர். செல்வி.நிலாஜினி நித்தியானந்தம் 2018ஆம் ஆண்டு நடைபெற்ற வலயமட்ட விசேட தேவை உடைய மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் 75m, 100m ஓட்டம், பந்தெறிதல் ஆகிய விளையாட்டுக்களில் 1வது இடங்களைப் பெற்று சிறந்த வீராங்கனையாக தெரிவு செய்யப்பட்டார். தொடர்ந்து உலக உளநல நாள் போட்டி நிகழ்வில் பரதநாட்டிய போட்டியில் மாவட்ட மட்டத்தில் 1ம் இடத்தினை பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார். இவரை பயிற்றுவித்த விசேட கல்வி உதவி ஆசிரியை திருமதி டயந்தினி மங்களேஸ்வரன் அவர்கள் பாராட்டுக்குரியவர்.

எமது பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்ற மாணவர்களான செல்வி. துஷாளினி பரந்தாமன் பல்கலைக் கழகத்திலும் செல்வி. கௌசிகா அலோசியஸ் கல்வியியற் கல்லூரியிலும் கற்று வருவது குறிப்பிடத்தக்கது. எமது பாடசாலையானது கல்வி, கலாசாரம், இணைபாடவிதான செயற்பாடுகள், ஒழுக்க விழுமியங்களுடன் கூடிய சிறந்த ஒரு பிள்ளை நேயப் பாடசாலையாக மிளிர்கின்றது.

| |
|---|
| தெளிவான குறிக்கோளே வெற்றியின் முதலாரம்பம் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம்-01 மாணவர்கள்



## தரம்-02 மாணவர்கள்



## தரம்-03 மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம்-04 மாணவர்கள்



## தரம்-05 மாணவர்கள்



## வகுப்புத் தலைவர்கள்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பாடசாலையில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர் விபரம்.

(1) திருமதி.ப.சத்தியநாதன்.

(2) திருமதி.லீ.நகுலேஸ்வரன்

(3) செல்வி.க.சுமதி

(4) திருமதி.சா.குகநாதன்

(5) திருமதி.வி.ஆனந்தராசா

(6) அமரர் க.கேதீஸ்வரி

(7) திருமதி.றே.மரியதாஸ்

(8) திரு.சி.சத்தியசீலன்

(9) செல்வி.N.திருவாணி

(10) அமரர்.சி.கலாவதி

(11) செல்வி.இ.இரதிதேவி

(12) திருமதி.ஜெ.தச்சினிக்குமார்.

# உதவி ஆசிரியர்கள்

(1) செல்வி.சி.ஜெயந்தினி

(2) செல்வி.க.பிறேமினி

(3) செல்வி.இ.யமினா

(4) திருமதி.அ.ஜெயகலா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழை



பட படவென இலைகள் ஆட
கத்தியது தவளைக் கூட்டம்...
கிட்டச் சென்று எட்டிப் பார்த்தேன்
அதற்குள் வந்தது மழை சட்டென்று

ஓடிச் சென்றேன் உடுப்பு எடுப்பதற்கு
ஒழிந்து கொண்டேன் மழை எதிரே.
வெள்ளி மணிகள் போல விழுந்தது மண்ணிலே
ஒரு பக்கம் இடி இடிக்க

மறு பக்கம் மின்னல் வெட்ட
பறந்தன பற்பல பறவைகள்
கூட்டை நோக்கி விரைந்து வர
வரட்சி அடைந்த பூமித்தாய்

மகிழ்ச்சியோடு இருக்கக் கண்டேன்.
மண் வாசம் மனதைக் கவர
மழைத் துளிகள் மண்ணிலே தவழ
அள்ளிப் பார்க்க ஆசைதான்

ஆனால் அதுவோ முடியவில்லை.
கேட்டது அம்மாவின் குரல்
நான் பதிலளித்தேன் ஆம் என்று
மனதின் ஓரத்தில் சிறு கவலை



இன்று கண்ட மழைக் காட்சியை
நான் எப்போ காண்பேன் என்று
மனதில் ஏங்குகின்றேன்
வினா எனக்குள் விடை தெரியவில்லை....?

செல்வி.ப.கம்சிகா,
தரம் - 03.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழைய புத்தகத்தின் சுயசரிதை

நான் கொழும்பில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டேன். என்னையும் என் தோழர்களையும் ஒரு கடைக்காரன் வாகனத்தில் ஏற்றிச்சென்று கடையில் விற்பனைக்காக வைத்திருந்தான். அதனை ஒரு மாணவன் வாங்கிச் சென்று புது



உறை போட்டு அழகாக என்னை வைத்திருந்தான். அப்படியே எனது நாட்கள் அழகாக கழிந்தன. மிகவும் சந்தோசத்துடன் அவனது கையில் தவழ்ந்தேன். அன்று ஒரு நாள் என்னில் இருந்து இரு பக்கங்களை அவனது சின்னத் தம்பி கழற்றி விட்டான். என்னுடைய அழகும் கெட்டுப் போனது. என்மீது இருக்கும் கவனமும் மெல்ல மெல்ல அவனுக்கு இல்லாமல் போய்விட்டது. என்னை தூக்கி எறிந்து விட்டார்கள். நான் ஒரு அநாதை போல் மூலையில் கிடந்தேன். ஒரு பக்கம் கறையான் என்னை அரிக்க மறுபக்கத்தில் எலியும் என்னை அரித்துக் கொண்டிருந்தது. அதன் பிறகு அவனுடைய அம்மா என்னை குப்பையில் போட்டு விட்டார். இப்பொழுது நான் பயனற்ற பொருளாக காணப்படுகின்றேன்.

செல்வன்.லோ.றொசான்,
தரம் - 05.

## எமது கிராமம்

கிராமங்கள் பல உண்டு என்பது யாவரும் அறிந்ததே. ஆயிரம் ஆயிரம் கிராமங்கள் இருந்தாலும் அவற்றுள் மாயவனூர்க் கிராமம் தனியிடம். எங்கள் கிராமம் விவசாயத்தின் விளைநிலம். நெற்பயிர், தெங்கு, வாழையினங்கள், பழமரங்கள், காய்கறிவகைகள், தானியங்கள், கிழங்கு வகைகள் என்பனவும்



நிறையுணவினைத் தரும் விலங்குகளான கோழி, பசு, ஆடு என்பனவும் ஒவ்வொரு வீடுகளிலும் இருப்பது சகஜமான ஒன்றாகும். வறுமை வரட்சி என்பனவும் கஷ்டம் கவலையும் எமது ஊரை அண்டியதாக யாருக்குமே ஞாபகமில்லை. "நீருக்கு என்றும் குறைவில்லை நிலத்துக்கு என்றும் பயிருண்டு" இதுவே எமது கிராமத்தின் பெருமை எனவும் கூறலாம். காவலுக்கு மாயவனும் அருள் புரிய சிவபிரானும் காலங்காலமாக உள்ள ஓர் ஊர் எம் ஊரே. ஆகவே ஆண்டவனே ஆளும் ஓர் ஊர் இது, எமது மாயவனூர்க் கிராமம் இலங்கையின் வடமாகாணத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ளது. இது ஒரு வளர்ச்சியடைந்துவரும் கிராமம் ஆகும்.

செல்வி.ஸ்ரீ.றெசினா,
தரம் - 04.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது பாடசாலை



எனது பாடசாலை மிகவும் அழகானது .
எனது பாடசாலையின் பெயர் கிளிநொச்சி மாயவனூர் வித்தியாலயம்
எனது அதிபரின் பெயர் திருமதி லக்ஷாந்தி கோபாலராஜா.
எனது வகுப்பாசிரியரின் பெயர் திருமதி.உஷாஜினி மாதவரூபன்.
இங்கே மூன்று கட்டடங்கள் உள்ளது.
நூற்றி ஐந்து மாணவர்கள் இங்கே கல்வி கற்கின்றனர்.
2003ம் ஆண்டு எனது பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.
இங்கே ஏழு ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றார்கள்.
எனது பாடசாலையில் கணினி அறைகளும் திறன் வகுப்பறைகளும் உண்டு.
மொத்தத்தில் எனது பாடசாலை தெய்வம் குடிகொள்ளும் அ

செல்வன்.வி.வேணுஜன்
தரம் :- 03

## எனது வகுப்பறை



எனது வகுப்பு தரம் 3 ஆகும்.
அதில் 23 மாணவர்கள் உள்ளனர்.
அங்கே புத்தகத் தட்டும் அலுமாரியும் உள்ளது.
வகுப்பறைச் சுவர்களில் மாணவர்களின் கைவண்ணங்களிலான அழகிய ஆக்கங்கள் ஆங்காங்கே உள்ளன.
அதை நாம் சுத்தமாக வைத்திருப்போம்.
அது ஓர் செவ்வக வடிவான வகுப்பறை
அங்கே மாணவர்களின் சுய விபரம் அடங்கிய அட்டவணையும் சுவரில் காட்சியளிக்கின்றது.
எனது வகுப்பறை மிகவும் அழகானது.
நான் எனது வகுப்பறையை நேசிக்கின்றேன்.

செல்வன் சி.டினோஷன்.
தரம் - 03




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதை

### நரியின் கதை

ஒரு அடர்ந்த காட்டில் ஒரு நரி பசியால் வாடி அங்கும் இங்குமாக இரை தேடி அலைந்து திரிந்தது. இறுதியில் ஒரு இடத்திலும் அதற்கு உண்பதற்கு இரை கிடைக்கவில்லை. ஆதலால் அது மீண்டும் மீண்டும் சுற்றி அலைந்து திரிந்தது. அப்போது ஒரு வழியால் செல்லும் போது மிகவும் ஆழமான பெரிய குழியொன்றில் விழுந்தது. அப்போது தப்பிக்க ஒரு மார்க்கத்தை கண்டுபிடித்தது. அந்த வேளையில் அவ் வழியே சிங்கம் ஒன்று வருவதை கண்டது. நரி சிங்கத்தை பார்த்தபடியே நின்றது.

அப்போது சிங்கம் நரியைக் பார்த்து ஏன் இங்கு இந்த குழியில் கிடக்கிறாய்? என்று சிங்கம் கேட்டது. அதற்கு நரி கூறியது யாதெனில் நாளை சுனாமி



வரப்போவதாக அறிந்தேன் ஆதலால் தான் இங்கு வந்து இருக்கின்றேன் என்று பொய்யைக் கூறியது. அத்துடன் நரி இன்னொரு விடயமும் கூறியது நீ இங்கு இந்த குழிக்குள் வந்தால் உனக்கும் எந்த ஆபத்தும் வராது என்றது. உடனே சிங்கம் குழிக்குள்ளே வந்தது. பின்னர் அவ்வழியாக வந்த புலியிடமும் சிங்கமும் நரியும் நாளை சுனாமி வருவதாக கூறியது.

உடனே புலியும் குழிக்குள்ளே வந்தது. இவ்வாறு பல விலங்குகளை பொய் சொல்லி குழிக்குள்ளே அழைத்தது. இறுதியாக அவ்வழியே யானை ஒன்று வந்தது. அதற்கும் நரி நாளை சுனாமி வருவதாக கூறியது. நீ இக்குழியினுள் வந்தால் எந்த ஆபத்தும் நெருங்காது என்றது. இவ்வாறு நரி கூறியதைக் கேட்டவுடன் யானையும் குழிக்குள்ளே மெல்ல மெல்லமாக வந்தது. அப்போது நரி யானையின் தும்பிக்கையின் மேல் ஏறி மேலே வந்து சேரந்தது. வெளியேவந்த நரி கூறியது நீங்கள் எல்லாம் மூடர்கள். சுனாமி வருவதாக நான் பொய்தான் கூறினேன். அவ்வாறு சுனாமி வந்தாலும் நீங்கள் தான் அழிவடைவீர்கள் என்று கூறியதுடன் நான் வெளியில் வருவதற்கே இவ்வாறு உங்களை குழியினுள் வரச் சொன்னேன் என்று கூறி அவ்விடம் விட்டு அகன்றது.

செல்வி. சி.நிலவுமதி
தரம் :- 05.

மனிதன் வெற்றியில் கற்பது சொற்பம்
தோல்வியில் கற்பது அதிகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாவரங்கள்

| தாவரம் | பூக்கும் காலம் |
|---|---|
| முள் முருங்கை | சித்திரை |
| முருங்கை | சித்திரை |
| மா | மாசி, ஆடி |
| மரமுந்திரிகை | பங்குனி |
| றம்புட்டான் | பங்குனி |
| பலா | மாசி |
| பாலை | பங்குனி |
| கார்த்திகைப் பூ | கார்த்திகை |
| இறப்பர் | தை |
| கொன்றைப் பூ | ஆவணி |
| வாகைப் பூ | ஆனி |
| தேக்கு | ஆடி |
| நாவல் | ஆடி |
| அன்னமுன்னா | பங்குனி |
| இலுப்பை | ஆவணி |
| குறிஞ்சி | 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை |
| வேம்பு | சித்திரை |

செல்வி பா.விண்ணிலா
தரம் - 5

# உயிரியல் உண்மைகள்

01. தும்பிச் சிட்டு (Humming Bird) எனும் பறவை மாத்திரமே பின்னோக்கி பறக்கக் கூடியது.
02. பச்சோந்தியின் நாக்கானது அதன் உடலை விட இரு மடங்கு நீளமானது.
03. ஒட்டகப் பாலானது பசுப்பாலைவிட பத்து மடங்கு இரும்புச்சத்து கொண்டது.
04. கண்களை திறந்து கொண்டு எம்மால் ஒருபோதும் தும்ம முடியாது.
05. உடலில் வியர்க்காத பகுதி உண்டு.
06. உடலில் மிகப் பெரிய சுரப்பி ஈரல்.
07. விதை இல்லாத பழம் அன்னாசி.
08. பல ஆண்டுகள் ஆனாலும் கெடாத உணவு தேன்.
09. முதலையின் நாக்கானது அதன் வாயின் கூரையுடன் ஒட்டிக் காணப்படுகின்றது.
10. நோய் எதிர்ப்பு சக்தி உள்ள விற்றமின்C ஆகும்.

செல்வி.ம.கபிலா.
தரம் :- 04


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எறும்புகள் பற்றிய தகவல்கள்

* பூமியில் உள்ள மொத்த எறும்புகளின் எண்ணிக்கை மனித எண்ணிக்கைக்குச் சமமாகும்.
* சில எறும்புகள் சொந்த இனப்பெருக்கம் செய்வன.
* வட அமெரிக்காவில் நெருப்பு எறும்புகளால் சுமார் 5 மில்லியன் பெறுமதியான உடமைகள் சேதமாகின்றன.
* எறும்புகள் தமக்குத் தேவையானதை தாமே உற்பத்தி செய்யக் கூடியன.
* எறும்புகளில் குறிப்பிடத்தக்க பரிமாணம் 130 மில்லியன் வருடங்களாகும்.
* சில எறும்புகள் நீரினுள் நீந்தக் கூடியன.
* 24 மணி நேரம் நீருக்குள்ளேயே உயிருடன் வாழும் தகுதி உடையவை.
* எறும்புகளில் 03 அங்குலம் உள்ள எறும்புகளும் காணப்படுகின்றன.




செல்வி.இ.அபிஷா.
தரம்:-03

## SOBRIQUETS

| | | |
|---|---|---|
| 1. | Dark contient | :-Africa |
| 2. | Emerald Island | :- Ireland |
| 3. | Forbidden city | :- Tibet |
| 4. | Garden of India | :- Bangalore |
| 5. | Gate way of India | :-Mumbai |
| 6. | Holy Land | :-Palestine |
| 7. | Land of rising sun | :- Japan |
| 8. | Land of mid night sun | :- Norway |
| 9. | Lankd of White elephants | :- Thailand |
| 10. | Land of Kngaroo | :-Australia |
| 11. | Land of rivers | :- Punjab |
| 12. | Land of thousand lakes | :- Finland |
| 13. | Roof of the world | :- Pamirs. |

செல்வி.ந.குயிலரசி
தரம்:-05


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிரிக்க சிந்திக்க சிந்தனைத் துளிகள் சில

சிந்தித்துப் பார் சிகரம் தொடுவாய்.
நம்பிப்பார் நாட்டை ஆளலாம்.

வெற்றியின் படிகள் சோதனைகள்.
அச்சோதனைகள் தான் நாம் செய்ய வேண்டிய சாதனைகள்.

வாழ்க்கை என்பது ஓர் போர்க்களம்
அதை நாம் வாழ்ந்து பார்க்கணும்.

சோகம் என்பது ஒரு தோல்விக்கான முதற்படி
அதை மாற்றுவதில் உள்ளது உன் வாழ்க்கையின் அடிப்படை.

விதியை எண்ணிப் பயப்படாதே
அது உன் கால் தூசிக்கும் சமமன்று.

நன்மை செய்து பார்
நாடே உன் பின்னால்.

வானம் இடி இடிக்க மழை பெய்கின்றது.
ஞானம் பிறக்கப் பிறக்க நாளும் மாறுகிறது.

மகிழ்ச்சி என்பது வாங்க அல்ல பிறருக்கு கொடுக்க .
மண்ணாசை பொன்னாசை உனக்கு வேண்டாம்.

மனிதம் காக்கும் மனது போதும்.
பொறுமை காக்கத்தான் வேண்டும்.
ஆனாலும் பொறுக்க முடியாத வேளையிலல்ல.

கையில் இல்லை மாற்றம்
மாற்றும் மனங்களில்த்தான் இருக்கின்றது.

செல்வன்.இ.நேருஜன்
தரம்-5

ஒரு சிறந்த நண்பனுக்காக உயிரையே தியாகம் செய்வது சுலபம். ஆனால் அந்த சிறந்த நண்பனைத் தேடிக் கண்டு பிடிப்பதே இவ்வுலகில் மிகவும் சிரமம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையில் கடைப்பிடிக்க வேண்டியவை

* தினமும் காலையில் 7.30 மணிக்கு முன் பாடசாலைக்கு வருதல்.
* வகுப்பறையில் அமைதி பேணுதல்
* எப்போதும் சீருடையும் சப்பாத்தும் அணிந்து வருதல்.
* சக மாணவருக்குத் தொந்தரவு செய்யாதிருத்தல்.
* பாடசாலைச் சொத்துக்களை சேதமாக்காதிருத்தல்.
* ஏனையோரின் பொருட்களை எடுக்காதிருத்தல்.
* ஆசிரியர்களின் சொற்படி நடத்தல்.
* கழிவுகளைக் குப்பைக் கூடையில் போடுதல்.
* காலைக் கூட்டம், பாடசாலை விட்டுச் செல்லும் போது வரிசையாகச் செல்லுதல் வேண்டும்.
* கதிரை, மேசைகளைச் சேதப்படுத்தக் கூடாது.
* இடை வேளையின்போது தான் உணவு உண்ணுதல் வேண்டும்.
* சுவரில் தேவையற்று எழுதுதல், தேவையற்ற வார்த்தைகள் பேசுதல் கூடாது.

பா.கேதுஷா
தரம் - 2.

## உங்களுக்குத் தெரியுமா...?

* உன்னை நீ அறிவாய் என்று போதித்த சிந்தனையாளர் சோக்கிரட்டீசுக்கு கிடைத்த பரிசு விசமாகும்.
* 2 லட்சம் பேர் உட்காரக்கூடிய விளையாட்டு அரங்குகள் 2000ம் ஆண்டுகளுக்கு முன்பே இருந்துள்ளன.
* நாட்டின் சுதந்திரத்துக்காக போர் புரிந்த வீராங்கனை ஜோன் ஆப் ஆர்க் தீயில் உயிரோடு எரிக்கப்பட்டாள்.
* இங்கிலாந்தை ஆண்ட மகாராணி முதலாம் எலிசபெத் வாழ்நாள் முழுவதும் கன்னியாகவே வாழ்ந்தாள்.
* ரோம் மன்னர் நீரோ ரோம் நகரம் பற்றி எரிந்தபோது உல்லாசக் கேளிக்கைகளில் ஈடுபட்டிருந்தார்.
* அமெரிக்காவை சுதந்திர நாடாக்கி அதன் முதல் ஜனாதிபதியாக இருந்தவர் ஜான் வாசிங்டன் ஆவார்.
* கடலில் உலகம் சுற்றிய ஜேம்ஸ்கிங் ஆதிவாசிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.
* அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஆபிரகாம் லிங்கன் நாடகம் பார்த்துக் கொண்டு இருக்கும்போது நிறவெறி பிடித்த ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.
* கொடியவர் என்று பெயரெடுத்தாலும் தூய வாழ்க்கை வாழ்ந்தவர் அவுரங்கசீப்.
* மேடைப் பேச்சுக்கு இலக்கணம் வகுத்தவர் பேரறிஞர் அண்ணா ஆவார்.

செல்வி.ச.நிக்சனா
தரம் - 4


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வயிற்றுக்குள் அமிலம்

24 மணி நேரத்தில் நம் வயிறு இரண்டு லீட்டர் ஹைட்ரோக்ளோரிக் அமிலத்தை உற்பத்தி செய்கிறது.

சவரம் செய்யும் ஒரு ப்ளேட்டை போட்டால் அதன் நிறை 37 சதவீதம் காணாமல் போகும் அளவுக்கு இந்த அமில வீரியம் அதிகம். உலோக பொருளால் படர்ந்த துருவை நீக்க ஹைட்ரோக்ளோரிக் அமிலம் பயன்படுகிறது.

மு.குழலினி
தரம்:- 05

## அன்னாசிப்பழம் பற்றிய தகவல்

அன்னாசி பூந்தாழப்பழம் என்பதாகும் அனாஸ் சட்டிவிஸ் ஸ்கல்ட் (Annas Sativis Shult) எனும் தாவரவியல் பெயரைக் கொண்ட அன்னாசிப்பழம் ரோனிலியாசியா குடும்பத்தைச் சேர்ந்ததாகும். தென்னாபிரிக்க நாடான பிரேசிலைப் பூர்வீகமாகக் கொண்டது. இது பழவகையைச் சார்ந்ததல்ல. செதிலாக பாகம் பார்த்தாலே இதை வினயலாம். பிரேசிலில் அன்னாசிப் பழத்திலிருந்து சீனி தயாரிக்கிறார்கள்.

சி.தமிழ்நிலா
தரம்:- 05

## ஆரோக்கியத்துக்கு ஆபத்து

புரோபயாடிக் கலவை கொண்ட சர்க்கரையை ஜீஸில் சேர்த்து குடிப்பதனால் அதிலுள்ள நல்ல சத்துக்களும்கூட உடலுக்கு கிடைக்காமல் போய்விடும். ஜீஸில் 30 கிராமுக்கு மேல் சர்க்கரை சேர்ப்பதை தடுத்துவிடு.

**மொன்க்ஷீட்** :- இம் மலரை 'அக்கோனிட்டம்' என்றும் அழைப்பர். இதன் நிறம் மிகவும் கவர்ச்சிகரமானது. இம்மலரை நுகர்வதால் மரணம் சம்பவிக்கலாம். அத்தோடு பாதுகாப்பில்லாமல் இம்மலரை தொட்டால் குறை இரத்த அழுத்தம், உணர்வற்றுப் போதல் போன்ற பாதிப்புக்கள் ஏற்படும்.

**லிலி ஒ∴ப்த்வெலி**:- இதனை ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் காணலாம். இந்த மலர்ச் செடியின் அனைத்துப் பகுதிகளும் நச்சுத்தன்மை கொண்டவை. இதனை உட்கொண்டவுடன் வாந்தி எடுத்தல், வயிற்றில் தசைப் பிறழ்வு, இதயத் துடிப்பின் வேகம் குறைவடைதல் என்பன ஏற்படும். இறுதியில் மிகுந்த உடல் வேதனையுடன் மரணம் ஏற்படும்.

**இங்ரிஷ்ப்ரும்**:- இம்மலரின் தாயகம் இங்கிலாந்து ஆகும். அனைவரையும் கவரக்கூடிய கடும்மஞ்சள் நிறத்தைக் கொண்ட இம்மலர் வாழைப்பழச் சீப்பைப் போன்று காட்சியளிக்கும். ஆனால் நச்சுத்தன்மையான இரசாயனத்துடன் கூடிய இம்மலரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்கொள்வதால் இதயம் பாதிக்கப்பட்டு மரணமடையும் வாய்ப்பு அதிகம். இவை குறிப்பாக சிறுவர்கள், கர்ப்பிணிப் பெண்கள், இதய நோயாளிகளுக்கு பேராபத்தானவை.

**ஏஞ்சல் ட்ரம்பட்** :- அழகிய மலர். ஆனால் கடும் விஷத்தன்மை கொண்டது. இந்த அழகிய மலர் ஸ்கொபலமின் எனும் பயங்கர நச்சுத் தன்மை நிறைந்த இரசாயனத்தைக் கொண்டது. சிறிதளவு உடலினுள் சென்றாலும் மூச்சுவிட சிரமம் ஏறபடும். அத்துடன் அதிகளவு பாவித்தால் முழுமையாக ஞாபகசக்தி இழக்கக் கூடும்.

**ஒட்மின் ஸ்ரோக்ஸ்** :- இதில் 'கொலகரீன்' எனும் நச்சு இரசாயனம் அடங்கி உள்ளது. அதனால் வாந்தி, வயிற்றோட்டம் ஏற்படலாம். சிறுநீரகங்களுக்கும் கல்லீரலுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். நாளடைவில் இதயநோய் ஏற்பட்டு மரணிக்க நேரிடும்.

செல்வன்.க.புகழரசன்
தரம் - 05

## செல்போன்

தற்போதைய காலகட்டத்தில் செல்∴போன் மூலம் பல்வேறுபட்ட பிரச்சினைகள் உருவாகியுள்ளன. ஆனால் இதுவரைக்கும் இப்பிரச்சினைக்கு எந்த விதத்திலும் தீர்வு கிட்டவில்லை. முதலில் பறவைகள் மூலம் தூதுவிட்ட அவர்கள் தற்போது



உலகையே கைக்குள் வைத்துள்ளார்கள். முன்பு எல்லாம் போன் என்பது Call பண்ண மட்டுமே முடிந்தது. எனினும் தற்போது SMS, Camera, Facebook போன்ற பல விதங்களில் உருவாக்கல்களை கொண்டுள்ளன. இந்த உலகம் முதல் சமூகமயமாகியிருந்தது. ஆனால் இன்று செல்∴போன் மயமாகி உள்ளது. இது மிகவும் கவலைக்கிடமான விடயம். போனை பாவிப்பது மனித உயிரை அழிக்கும்வரை நீண்டுவிட்டது. இவ்வாறான போனைப் பற்றிய தகவல்கள் வருமாறு:-

ஸ்போர்ட் ஹுக்ஹெஸ் ஐ ∴போன் 4 தான் உலகிலேயே விலையுயர்ந்த ∴போன் என்ற பெருமையை பெறுகிறது. இதன் விலை இலங்கை ரூபாவில் 135 கோடிகள். இதுவொரு வைரம் பதித்த போன் ஆகும்.

இக்கால மனிதர்கள் கையில் எமனாய் இருப்பது அதாவது போன் இருப்பதை தடுப்பது நம்மால் முடியாதது.

செல்வி.சு.சங்கவி
தரம் - 05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயற்கைச் சூழல்

இறைவன் எமக்கு தந்த வரங்களுள் எமது தேவைகளை நிறைவேற்றும் ஒரேயொரு அற்புதமானதும் அதிசயிக்கத்தக்கதுமானது இயற்கைச் சூழல். நாம் எதிர்பார்ப்பதை விட எதிர்பார்க்காததையும்விட மிகவும் அதிசயமானது. நாம் வாழ்வதற்கு காரணம் இயற்கைச் சூழலும் சுற்றாடலுமேயாகும். வாழ்க்கையே இயற்கையின் கையில்.

மனிதன் இன்றும் என்றும் வாழ்வதற்கு இயற்கையே காரணம். மரம், செடி, கொடிகளை நாம் பேணி வளர்த்தால் நம் வாழ்க்கை சிறப்பாக அமையும். மனிதன் வாழ்வதும் சாவதும் அவனவன் கையில். சுற்றாடலை பேணி இயற்கையை யாரும் அழிப்பதை தடுப்பது எம் கையிலுள்ளது. வாழ்வை தந்த இயற்கையை வாழவைக்க யாருமில்லை என்பது எமக்கு சங்கடமான ஒரு விடயம். இயற்கையை காத்தால் இனிமை பெறலாம். மகிழ்ச்சி பெறலாம். இயற்கையை அழியாது பாதுகாப்பது நமது கடமை.

எமக்கு கோபம் வந்தாலோ, கவலை வந்தாலோ நாம் இயற்கையை இரசித்தால் போதும் அவை எம்மை விட்டு அகன்றுவிடும். இயற்கை எமக்கொரு அருமருந்தாகவும் மன நிறைவாகவும் இருக்கிறது. இயற்கை தாய் போன்றது. அதை அழியாமல் பாதுகாப்போம்.

இயற்கையை போற்று!
இன்பமாக வாழ்!

செல்வன்.ய.சங்கீதன்,
தரம்: - 05

## பறக்க முடியாத பறவைகள்

விஞ்ஞானப்பெயர்

| | |
|---|---|
| கிவி | - Apterys |
| பென்குயின் | - Sphenis cidae |
| ஆந்தைக்கிளி | - Strigops hobroptilus |
| டக்காஹே | - Notorhis hocnsteteri |
| விக்கா | - Gollirallus austalis |
| காகு | - Rhinochetus jubatus |
| நீ ஆ | - Rhea americana. |

செல்வி.ப.குகேந்தினி,
தரம்: - 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்பு

மனிதன் மனிதனாக வாழ என்னென்ன தேவை எனக்கேட்டால் நாம் கூறும் விடயங்களில் நட்பும் அவசியம். யானை போன்றவர் நட்பு என்றும், நாய் போன்றவர்



நட்பு என்றும் நட்பை இருவகையாக நாலடியார் கூறுகின்றது. யானை போன்றோரது நட்பு விரும்பக் தகாது என்று கூறப்படுகிறது. காரணம் யானை அறிந்தறிந்தும் பழகிய பாகனையே கொல்லுமளவிற்கு நன்றி உணர்வு அற்றது. ஆயினும் நாய் நன்றி மறவாது சில நாள் அன்புடன் தீனியிட்டுக் காத்தவர் தன்மேல் வேலை எறிந்து புண்படுத்திய போதிலும் அந்த வேல் உடம்பில் தைத்துள்ள நிலையிலும் அவரைக் கண்டு வாலாட்டும் அளவிற்கு நன்றியுணர்வு மிகுந்தது. நாய் போன்ற நண்பரும் செய்த நன்றியை நினைத்துப் போற்றி எதிர்பாராமல் நேர்ந்த குற்றத்தையே பொருட்படுத்தாமல் பழைய அன்பையே காட்டுவார். எனவே யானை போன்றோரின் நட்பை விலக்கி நாய் போன்றோரின் நட்பை வளர்த்துக் கொள்ள வேண்டும். மேலும் நட்புப் பற்றி திருவள்ளுவர்

"முக நக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு"

முகத்தில் மாத்திரம் மகிழ்வது நட்பு கொள்வது நட்பல்ல மனதாலும் மகிழ்வது நட்பு கொள்வதே உண்மை நட்பு. மாணவர்களாகிய நாமும் நல்ல நண்பரை தேர்ந்தெடுப்போம்.

செல்வி.அ.அஸ்மிதா.
தரம் :- 04

பேசும் முன் கேளுங்கள். எழுதும் முன் யோசியுங்கள். செலவழிக்கும் முன் சம்பாதியுங்கள்.

நான் மாறும் போது தானும் மாறியும், நான் தலையசைக்கும் போது தானும் தலையையசைக்கும் நண்பன் எனக்குத் தேவையில்லை. அதற்கு என் நிழலே போதும்.

நோயைவிட அச்சமே அதிகம் கொல்லும்.

உண்மை தனியாகச் செல்லும். பொய்க்குத்தான் துணை வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது பாடசாலை

வண்ணப் பட்டாம் பூச்சிகள்
வானில் திரியும் வேளையிலே
எண்ணற் கரிய விந்தைகளை
எடுத்தியம்பும் ஊரிது
அழகு மலர்கள் அருகில் ஆட
ஆனந்தம் பூத்தாவ
இவ்வூரில் உதித்தது ஓர்
அழகிய பாடசாலை.

மாயவனூர் வித்தியாலயம்
எனும் பெயரால்
மாணவர் மனதில் இடம் பிடித்து
அருமையான அதிபரையும்
பெருமையான ஆசிரியர்களையும்
கொண்ட எம் பாடசாலை

சுற்றிவர மதில்களையும்
சூழ்ந்த மரங்களையும்
பற்றிப் படர்ந்த கொடிகளையும்
வாகாய் அமைந்த செடிகளையும்
கண்ட உனக்கு நிகரேது

சிட்டுப் போன்ற சிறுவர்களால்
சிதறாமல் கட்டியணைத்து
சொட்டுச் சொட்டாகக் கல்விதனை
ஊட்டி வளர்த்த பள்ளித்தாய்
தரம் ஐந்து வரை இவள் வகுப்பு
பாடம் கற்பது மாணவர் பொறுப்பு

இங்கு கற்ற மாணவர்கள்
பல்கலைக் கழகம் தெரிவாகி
பாடசாலைக்குப் பெருமை சேர்த்து
பாரில் உயர எப்போதும்
பக்க பலமாய் இருப்பாயே
நற்பிரஜைகளை உருவாக்கி
நாடே போற்றும் வரை
ஊட்டப் பாடசாலையான நீ
ஊட்டும் அறிவை
தடுத்திட இங்கே யார் உண்டு
உன் பணியில் இவ்வூர் உயர்ந்திட
என்றென்றும் என் இனிய வாழ்த்துக்கள்.


பழைய மாணவி.
செல்வி க.மாதுரிகா.

# நுண்ணறிவு


01) முக்கோணிகளின் எண்ணிக்கை காணல்

முக்கோணியில் வெளித்தோற்றத்திற்கு எத்தனை முக்கோணம் காணப்படுகிறதோ அதன் முக்கோண எண்ணைக் கணிப்பதன் மூலம் பெறப்படும்.

eg:



$$= \frac{2 \times 3}{2} = 3$$




$$= \frac{3 \times 4}{2} = 6$$

02) சதுரங்களின் எண்ணிக்கை காணல்


நிரல்களின் எண்ணிகையும் நிரைகளின் எண்ணிகையும் சமனாக இருக்கும் போது எத்தனை நிரை அல்லது நிரல் இருக்கிறதோ அதுவரை உள்ள சதுர எண்களை கூட்டுவதன் மூலம் பெறப்படும்.

eg:



$1 \times 1 = 1$

$2 \times 2 = \frac{4}{5}$



$1 \times 1 = 1$

$2 \times 2 = 4$

$3 \times 3 = \frac{9}{14}$

செல்வன் நா.கரிகரன்
தரம்:- 05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில்களும் பெயர்களும்

| | |
|---|---|
| அரசியல் தூது செல்பவர் | தூதுவர் |
| அறிவியல் வித்தகர் | விஞ்ஞானி |
| ஆடுகளை மேய்ப்பவர் | இடையர் |
| சுவர் கட்டுபவர் | கொத்தனார் |
| மண் பாத்திரங்களை வனைபவர் | குயவன் |
| இரும்பு வேலைகளை செய்பவர் | கொல்லன் |
| சித்திரங்களை வரைபவர் | ஓவியர் |
| வேடிக்கைகள் செய்பவர் | கோமாளி |
| மீன் பிடிப்பவர் | மீனவர் |
| காலணிகள் தைப்பவர் | செம்மார் |
| சிலைகள் செய்பவர் | சிற்பி |
| மரவேலை செய்பவர் | தச்சர் |
| உடைகள் தைப்பவர் | தையற்காரன் |
| முடி அலங்கரிப்பவர் | நாவிதர் |
| உழுது பயிரிடுபவர் | உழவர் |
| நகைகள் செய்பவர் | பொற்கொல்லர் |
| நோயாளியை குணப்படுத்துபவர் | மருத்துவர் |
| நோயாளியை கவனிப்பவர் | தாதி |
| கப்பல் செலுத்துபவர் | மீகாமன் |
| விமானம் செலுத்துபவர் | வலவன் |
| துணி நெய்பவர் | நெசவாளர் |
| யானையை நடத்துபவர் | பாகன் |
| உளவு பார்ப்பவர் | ஒற்றர் |
| பாடம் கற்பிப்பவர் | ஆசிரியர்/ குரு |
| பாம்மை ஆட்டுவிப்பவர் | பிடாரர் |
| கட்டுமானங்களை நிர்மாணிப்பவர் | பொறியியலாளர் |
| இறைச்சி விற்பவர் | கசாப்புக்காரர் |
| தேர் ஓட்டுபவர் | சாரதி/ பாகன் |
| உழைத்து ஊதியம் பெறுபவர் | தொழிலாளி |
| தொழிலுக்கு முதலீடு செய்பவர் | முதலாளி |
| கவிதைகளை எழுதுபவர் | கவிஞர் |
| காவல் புரிபவர் | காவலன் |
| தீர்ப்பு வழங்குபவர் | நீதிபதி. |

செல்வி.யு.தமிழ்நிலா,
தரம் - 05.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையும் ஆசானும்

அன்புக்கு இலக்கணம் வகுத்தோர் யார்?
அன்னையும் ஆசானுமே
பெற்றது அன்னையானாலும் வளர்ப்பது ஆசானாகும்.
பெற்றதாயும், செவிலித்தாயும் - எம்
உற்ற உறவுகளாமே.
அன்னையும் ஆசானும் ஒன்று
இதை அறியாத மாந்தரே மண்ணில் உண்டோ?

அம்மா என்ற மூன்றெழுத்தோடு "ஆசான்"
என்ற மூன்றெழுத்து என்றும் பிரிவதில்லை.
அன்பிலும் சரி அவசரத்திலும் சரி
இன்றும் என்றும் அவை ஒன்றே.
நட்சத்திரத்தின் ஒளியையும் நடுங்க வைக்கும்
இடியும் என்றும் என்றும்நெருங்காது
அன்னையும் ஆசானும் என்னருகில் இருக்கும்போது

வெயிலா, குளிரா எனைத் தீண்டாது
காரணம் இன்பத்துக்கு ஆசிரியர் - என்
இஷ் டத்துக்கு தாயவள்
வாழ்க்கை எனும் போரில் நான் போராட
தன் வாழ்வைத் தந்த தெய்வங்கள் - நீளும்
நாட்கள் நீங்காமல் முயற்சி எனும் சக்தியின் மகாராணிகள்.

செல்வன் கோ.விஜிதரன்
தரம் - 05

# விநாயகப் பெருமான்

01) முதல் வணக்கத்துக்குரியவர் விநாயகர்.
02) இவரது வடிவம் ஓம் எனும் பிரணவ வடிவமாகும்.
03) இவரை மும்முறை குட்டியும், தோப்புக்கரணம் போட்டும் வழிபடுவோம்.
04) இவரது வாகனம் மூஷிகம்.
05) எக்காரியத்தைச் செய்யமுன்பும் விநாயகரை வழிபட்டே செய்தல் வேண்டும்.
06) இவர்க்கு ஐந்து கரமும், பானைபோன்ற வயிறும்,
யானை முகமும் காணப்படுகின்றது.
07) மோதகம், அவல், கடலை, சுண்டல் என்பவற்றைப்
படைத்து இவரை வழிபடுவோம்.



08) வெள்ளெருக்கம் பூ, அறுகம் புல் என்பவற்றால் அர்ச்சிப்போம்.
09) இவரை வழிபட்டு முத்தியடைந்தவராக ஔவையார்,
அகத்தியர் போன்றோர் குறிப்படத்தக்கவர்கள்.
10) விநாயகரை வணங்கினால் வெவ்வினைகள் அகலும்.

செல்வி.மோ.சரணியா
தரம் - 02


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ------------අපේපාසල

## அப்பேபாசல

## எமதுபாடசாலை

1ம அපේ පාසලේ නමකිලී/මායවනූර් විද්‍යාලය.

அப்பேபாசலேநமகிளி/மாயவனூர் வித்யாலய.

எமதுபாடசாலையின் பெயர் கிளி/மாயவனூர் வித்தியாலயம்.

2ம අපේ පාසලකිලිනෙච්චිදිස්ත්‍රික්කයේපිහිටා ඇත.

அப்பேபாசலகிளிநொச்சி டிஸ்திரிக்கேபிகிட்டாஅத்த.

எமதுபாடசாலைகிளிநொச்சிமாவட்டத்தில் அமைந்துள்ளது.

3ம අපේපාසලේවිදුහල්පතිතුමාගේනම කෝපාලරාසාලක්ෂාන්තිමිය.

அப்பேபாசலவிதுகல்பதிதுமாகேநமகோபாலராசாலக்ஷாந்தி

எமதுபாடசாலைஅதிபருடையபெயர்

திருமதி.கோபாலராசாலக்ஷாந்தி.



4ம අපේපාසලේපළවෙනිශ්‍රේණියේ සිට පස්වෙන ˜ ශ්‍රේණියදක්වාඇත.

அப்பேபாசலேபலவெனிசிரேனியசிட்ட

பஸ்வெனிசிரேனியதக்வாஅத்த.

எமதுபாடசாலையில் முதலாம் வகுப்புத் தொடக்கம் ஐந்தாம் வகுப்புவரைகாணப்படுகின்றது.

5ம අපේපාසලේපරීක්ෂණකශාලාවකතිබේ.

அப்பேபாசலேபரிகணக்கசாலாவக் திபே.

எமதுபாடசாலையில் கணினிஅறைஒன்றுஉண்டு.

6ம අපේපාසලේස්මාට්කාමරයතිබේ.

அப்பேபாசலே ஸ்மாட் காமறயதிபே.

எமதுபாடசாலையில் திறன் வகுப்பறைகள் உண்டு.

7ம අපේපාසලහරීමලස්සනයි.

அப்பேபாசலகரிம லஸ்சனாய்

எமதுபாடசாலைமிகவும் அழகானது.

சி. மீரியம்

தரம் :- 05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மா



ஈரைந்து மாதங்கள்
தன் வயிற்றில் சுமந்து
எம்மை பெற்றெடுத்தார் அம்மா
அன்பிற்கு இலக்கணம் அம்மா
தன் உதிரத்தை பாலாக்கி
ஊட்டி வளர்த்தார் அம்மா
நாம் மழலை மொழி பேச
சந்தோசப்படும் முதல் தெய்வம் அம்மா
கனிவான பார்வையுடன்
எம்மை கண்கலங்க விடாமல்
காத்திடும் தெய்வம் அம்மா
நல்ல அறிவுரைகளை நாளும்
எமக்கு சொல்லித்தந்திடும் தோழி அம்மா
நற் பண்புகளை சொல்லித் தந்திடும்
ஆசான் அம்மா.



செல்வன்.லோ.ஸகீரன்
தரம் :- 01

## மாணவர்கள் படிப்பதற்கு சில ஆலோசனைகள்



01) நேர அட்டவணை தயாரித்துப் படிக்க வேண்டும்.
02) படித்தவற்றை மீண்டும் மீண்டும் படிக்க வேண்டும்.
03) விடயங்களை எழுதிப் படிக்க வேண்டும்.
04) சிறு சிறு குறிப்பு எழுதிப் படிக்க வேண்டும்.
05) விளங்கிப் படிக்க வேண்டும்.
06) சந்தேகங்களைத் தெளிவுபடுத்திப் படிக்க வேண்டும்
07) பிறரின் வற்புறுத்தலின் பேரில் படிக்கக் கூடாது.
08) ஒரே வகுப்பைச் சேர்ந்தவர்களுடன் சேர்ந்து படிக்க வேண்டும்.
09) படிக்கின்ற சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும்.
10) மனதில் பிரச்சனையோடு படிக்கத் தொடங்கக் கூடாது.
11) முழுப் பாடத்தையும் உள்ளடக்கிப் படிக்க வேண்டும்.
12) சரியான விடயங்களைத் தேடிப் படிக்க வேண்டும்.
13) ஒரே சமயத்தில் பல பாடங்களைப் படிக்கக் கூடாது.
14) பரீட்சை நெருங்குகிற நேரத்தில் அவசர அவசரமாகப் படிக்கக் கூடாது.
15) உடல் ஆரோக்கியத்தையும் கவனிக்க வேண்டும்.

செல்வி.ச.சாலினி
தரம் :- 04


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்மையை நினை – தீமையை வெறு

அரசன் ஒருவர் மாறுவேடத்தில் காட்டிற்கு வேவு பார்க்கச்சென்றார். தனது ஆட்சியில் கொள்ளை, கடத்தல் நடப்பதாகவும் அதைக் கண்டு பிடித்து கள்வர்களைத் தண்டிக்கும் நோக்கில் சென்றார். காட்டிற்குச் சென்ற அரசனை கொள்ளையர்கள் மறைந்து நின்று தாக்கி அவரை குற்றுயிராய் விட்டுச் சென்றனர். அரசன் உயிருக்குப் போராடிக்கொண்டிருந்தார். அந்த வேளையில் காட்டிற்கு வேட்டையாட வந்த வேடுவன் ஒருவன் யாரோ அடிபட்டு தாக்கப்பட்டு உயிருக்கு போராடுவதைக் கண்டு ஓடிவந்து அரசனைத் தாங்கிக்கொண்டு தன் இடத்திற்குச் சென்று மருந்து கொடுத்து அரசனை உயிர் பிழைக்கச் செய்தான்.

ஆனால் வேடுவன் அரசனை மாறுவேடத்தில் இருந்ததால் இனங்கண்டு கொள்வில்லை. ஆனால் அரசன் அந்த வேடுவனை இனங்கண்டு கொண்டார். பின்பு ஒரு நாள் வழக்கொன்றிற்காக அந்த வேடுவனை அரசனிடம் கொண்டு வந்தனர். அரசன் விசாரித்ததில் அந்த வேடுவன் தன் குடும்ப நிலை காரணமாக திருடி இருப்பதாக அறிந்து கொண்டார். சபையில் இருந்தவர்கள் அந்த வேடுவனுக்கு மரண தண்டனை கொடுக்கும்படி வேண்டினர். ஆனால் அரசனோ "நான் இவனை மன்னித்துவிடுகிறேன்" என்று கூறினார். சபையில் இருந்தவர்கள் சற்றுக் குழம்பினார்கள். பின்பு "நான் காட்டிற்கு வேவு பார்க்கச் சென்றபோது கள்வர்கள் என்னை தாக்கி நான் குற்றயிராய் கிடந்தபோது இந்த வேடுவனே என்னை காப்பாற்றினான். ஓர் உயிரின் பெறுமதி எவ்வளவு என்பதை இவன் எனக்கு காண்பித்தான். இவன் செய்த நன்மையை நான் நினைக்கும்போது இவன் செய்த களவு எனக்கு பெரிதாக தெரியவில்லை" என அரசன் கூறினான்.

எனவே எமது வாழ்விலும் பிறருக்கு எதிராக நாங்கள் சிந்திக்கும்போது அவர்கள் செய்த நன்மையை நினைத்துப் பார்த்தால் எம் உள்ளத்தில் தீமை இல்லாது போய்விடும். ஒருவர் செய்த நன்மையை நினைத்து அவர் செய்த தீமையை மறந்தால் மனித மாண்பு எம்மிடையே குடிகொள்ளும்.

செல்வி.யோ.கயானா.
தரம் - 05.

மனிதன் வெற்றியில் கற்பது சொற்பம்
தோல்வியில் கற்பது அதிகம்.

பிரார்த்தனை செய்யும் எந்த மனிதனும் ஏதேனும்
புதிய விஷயத்தைக் கற்கத் தவறமாட்டான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலைவனக் கப்பல்.



எப்படிப்பட்ட பாலை வனமாக இருப்பினும் சரி ஒட்டகங்கள் வேகமாக நடக்கும், ஓடும். எனவே இவற்றை பாலை வனக் கப்பல் என்று அழைக்கின்றார்கள். இதன் எடையின் பெரும் பகுதி தண்ணீர் தான். கால்வாசி தண்ணீரை இழந்தாலும் கூட மீண்டும் ஒரு பாலைவனப் பயணத்திற்கு இது தயாராகிவிடும். ஒரே சமயத்தில் 25 கலன் தண்ணீரை பத்து நிமிடத்தில் குடித்து வயிற்றை நிரப்பிக் கொள்ளும். வாயிலிருந்து இரத்தம் வழிந்தாலும் கூட முட்புதர்களை இது விரும்பி உண்ணும். இதற்கு உண்ண உணவு கிடைக்காத போது தனது தலைக்குப்பின் முதுகில் உள்ள திமிலில் இருந்துதான் உணவைப் பெறுகின்றது. இது கொழுப்புச் சத்தை சேர்த்து வைத்து தேவையானபோது அதை தண்ணீராக மாற்றிக் கொள்கிறது. இதனால் 17 நாட்கள் வரை தண்ணீர் குடிக்காமல் இருக்க முடியும். இது புத்திசாலியான மிருகம் அல்ல.

செல்வன் அ.ஜிந்துயன்
தரம்:- 04

## சிந்தனைக்கு சில............

உண்மையை விலை கொடுத்து வாங்குங்கள் - ஆனால்
ஒரு போதும் விற்றுவிடாதீர்கள்.

தியாகிகளின் இரத்தத்தை விட - அறிஞரின்
எழுதுகோல் வலிமையானது.

அறிவுரையை ஏற்றுக் கொள்ளுங்கள் - சொல்பவரை விட
நீங்கள் பயன்படக்கூடும்.

மனம் விட்டுப் பேசுங்கள் -
மனதில் பட்டதெல்லாம் பேசாதீர்கள்.

வாயில் இருந்து புறப்பட்ட வார்த்தை
கோடி கொடுத்தாலும் திரும்பப் பெற முடியாது.

செல்வி.செ.காஞ்சனா.

தரம்:- 02


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலுதவிக் குறிப்புக்கள்


## நீரில் மூழ்குதல்

* வாயையும் நாசியையும் பரிசீலித்து நீரிலுள்ள மிதக்கும் அழுக்குகள் நீர்த்தாவரங்கள் படிந்திருப்பின் அவைகளை அகற்றி சுவாசப் பாதையைச் சுத்தப்படுத்தவும்.
* சுவாசிக்காவிடின் ஆரம்பத்தில் ஐந்து முறை செயற்கைச் சுவாசத்தைப் பெற்றுக் கொடுக்கவும்.
* அத்துடன் வெளிமார்பு அழுத்தம் முப்பது முறையும் செயற்கைச் சுவாசம் இரண்டு முறையும் அவர் குணமடையும்வரை செயற்படுத்தவும்.
* நனைந்த உடைகளை அகற்றி விடவும், போர்வையால் சுற்றி வைத்து அவரது உடம்பின் வெப்பத்தைப் பாதுகாக்கவும்.

## பாம்புக்கடி

* நோயாளி குழப்பமடைவதை தவிர்த்து அவரை ஆறுதல்படுத்தவும்.
* தலையையும், விலாப்பகுதியையும் சற்று உயர்த்தி வைத்து சாய்வாக வைக்கவும்.
* கடிவாயை ஓடும் குளிர் நீரில் கழுவவும்
* மிக விரைவில் வைத்திய உதவியைப் பெறவும்.





## மின்சாரம், மின்னல் தாக்குதல்.

* முதலுதவியாளர் தன் பாதுகாப்பை உறுதி செய்யவும்.
* மின்சாரத்தைத் தடை செய்ய முடியுமாயின் பிரதான ஆளி மூலம் தடை செய்யவும்.
* நோயாளியின் சுய நினைவைப் பரிசீலித்து சுவாசப் பாதையைத் திறந்துவிடவும்.
* நோயாளி சுயநினைவில் உள்ளவராயின் எரிகாயத்திற்கும் ஏனைய தாக்கங்களுக்கும் முதலுதவி செய்து வைத்திய உதவியை நாடவும்.

செல்வி.ப.குகேந்தினி.
தரம் - 03

கற்கையில் கல்வி கசப்பு கற்றபின் அதுவே இனிப்பு

கல்வியில்லாச் செல்வம் கற்பில்லா அழகு.

கல்லாதார் செல்வத்திலும் கற்றார் வறுமை நலம்.

கல்லாதவரே கண்ணில்லாதவர்.

கல்வி என்பது தெரியாததை தெரியச் செய்வதன்று
ஒழுக்கத்தை ஒழுகச் செய்வதும் இன்பமளிப்பதுமாகும்

- றஸ்கின் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழைத் தாய்

அழகுத் தேகம்
கலைந்த கூந்தல்
கிழிந்த சேலையிலும்
கடவுளாகத் தோன்றினாள்
என் அன்னை.........

கருவறையில் அலங்காரம்
செய்த சிலையை விட
அழகாக வைத்து
காக்க தாயால் தான் முடியும்.

பலரது இடத்தை
தாயால் வகிக்க முடியும் - ஆனால்
தாயினிடத்தை யாராலும்
வகிக்க முடியாது

தாயின் கருவறையை
பார்த்த பின்பு
ஒரு முடிவுரைக்கு
வந்து விட்டேன்....

இருள் நிறைந்தது
நரகம் மட்டுமல்ல...
சொர்க்கமும்தான்.



செல்வி.ர.வர்ஷனா.
தரம் - 04.

## என் இயேசு

ஆராதனை செய்கின்றேன்
என் இயேசுவுக்கு
எம் பாவம் போக்க உதித்த
மீட்பருக்கு
இரக்கத்தின் தெய்வமே
எம் வாழ்வின் ஒளியான
விடிவெள்ளியே
எனது அப்பாவும் நீரே
என் அம்மாவும் நீரே
என் உயிரும் நீரே
இயேசையா
உம் புகழைப் பாடும்
இச் சிறுபிள்ளைக்கு
உம் மோட்சத்தில் வாழ
வரம் ஒன்று தருவீரா?
உம் மீது நான் கொண்ட
அன்பிற்கு ஈடு இணை இல்லையே
வார்த்தையின் வடிவானவரே
வார்த்தைக்குள் வசிப்பவரே
வற்றாத நதியே - நான்
கற்கின்ற கல்வியே
என்றும் நீர் ஒருவரே
இயேசையா..........

செல்வி.றி.ஜெறோமிகா.
தரம் - 01





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My School

1. My school is Kn/Mayavanoor Vidyalayam
2. It is a Primary Scool.
3. Our school Principal's name is Mrs.L.Gobalarasa.
4. There are about 105 students and eight teachers.
5. There are classes from Grade 1 to Grade 5.
6. There are two smat class rooms in our school.
7. It is a beautiful school.
8. I am proud to be a student there.



V.Thanusiya,
Grade - 04

## சிரிக்க சிந்திக்க சிலேடைகள்

**பாலை வணங்கிய புலவர்**

புலவர் ஒருவர் தம் வீட்டிற்கு வந்தார். அவர் குடிப்பதற்காக குவளையில் பால் கொண்டு வந்தாள் மனைவி. பாலை வாங்கிய புலவர் அதைப் பார்த்துக் கையெடுத்துக் கும்பிட்டார். உங்களுக்கு எப்போது விளையாடுவது என்றே தெரியாது. எதற்காக குடிக்க வேண்டிய பாலைக் கும்பிடுகிறீர்கள் என்று கோபத்துடன் கேட்டாள் மனைவி.

பாற்கடவுள் சீனிவாசன் பள்ளி கொண்டுள்ள காட்சியைப் பார்த்தேன். அதனால் வணங்கினேன் என்றார். அப்பொழுதுதான் மனைவி பாலைக் கவனித்தாள் அதில் எறும்பு மிதந்து கொண்டிருந்தது. தன் கணவரின் குறும்பு அப்பொழுதுதான் அவளுக்குப் புரிந்தது. பாலில் எறும்பு மிதப்பதைத்தான் பாற்கடவுள் சீனிவாசன் (சீனியிலே வாசம் செய்யும் எறும்பு) பள்ளி கொண்டுள்ளான் என்று குறிப்பாகச் சொல்லிய சிலேடையின் நயம் உணர்ந்து மகிழ்ந்தாள். அப்போதுதான் அவரது குறும்புத்தனம் அவளுக்குப் புரிந்தது.

**படித்ததில் பிடித்தது.**

செல்வி.கு.நிஷா.
தரம் - 04


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்னெறிக் கதைகளில் வாசித்ததில் யோசித்தது.

**வருவது போவது இரண்டு**

துறவி ஒருவர் தம் சீடர்களைப் பார்த்து "நான் ஒரு விடுகதை சொல்கிறேன் அதற்கு விடை சொல்லுங்கள்" என்றார்.

"விடுகதையைச் சொல்லுங்கள்" என்று ஆர்வத்துடன் கேட்டார்கள்.

"வருவது போவது இரண்டு. வந்தால் போகாது இரண்டு. போனால் வராது இரண்டு இதுதான் அந்த விடுகதை. யாராவது இவற்றிற்கு விளக்கம் தாருங்கள்" என்றார் அவர்.

சீடன் ஒருவன், "குருவே! வருவது போவது இரண்டு என்பது செல்வமும் வறுமையும். செல்வமோ வறுமையோ யாரிடமும் நிலைத்து நில்லாது மாறி மாறி வந்து கொண்டே இருக்கும்.

வந்தால் போகாது இரண்டு என்பது புகழும் பழியும் புகழோ பழியோ ஒருவரிடம் சேர்ந்துவிட்டால் எப்பொழுதும் நிலைத்து நிற்கும். அவரை விட்டுப் போகாது.

போனால் வராது இரண்டு என்பது மானமும் உயிரும். "ஒருவரை விட்டு நீங்கி விட்டால் பிறகு எப்பொழுதும் சேராது" என்று விளக்கம் தந்தான். துறவி அவனைப் பாராட்டினார்.

செல்வன்.நா.திஷாந்தன்,
தரம் - 04

## பறவைகளின் தகவல்கள்

### ஆந்தை



சிறு விலங்குகளை வேட்டையாடி இவை உண்ணும். இவற்றின் வெளித்தள்ளிய பெரிய கண்களினால் மிகக் குறைந்த வெளிச்சத்திலும் இவற்றினால் பார்க்க முடியும். இவை கூர்மையான செவிப்புலனும் மென்மையான பறக்கும் இறகுகளையும் கொண்டு காணப்படுவதனால் இரையை அணிமிக்கும்வரை அமைதியாகச் சென்று கௌவுகிறது.

### பென்குவின்கள்



இவை கடல் வாழ்க்கைக்கு நன்கு இயல்பாக்கப்பட்டுள்ளதுடன் வெளியில் பறப்பதற்கான ஆற்றலையும் இழந்துள்ளன. ஆனால் இவை நீரினூடாகப் பறக்கின்றன. தம்மை குளிரில் இருந்து பாதுகாப்பதற்காக ஓர் உரோமப் படையினையும் நீர் புகமுடியாத அடர்ந்த இறகுகளையும் கொண்டுள்ளன. பொதுவாக இவை பனிபடர் அந்தாட்டிக்கா கடலில் காணப்படுகின்றன.

செல்வன்.செ.டிலக்ஷன்
தரம் - 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வண்ணத்துப் பூச்சிக்கும் அந்துப் பூச்சிக்குமான வித்தியாசம்.

வண்ணத்துப் பூச்சி, அந்துப் பூச்சிகள் இரண்டுமே பகலிலேயே பறப்பன. இரண்டுக்குமான முக்கிய வேறுபாடு அவற்றின் உணர் கொம்புகளாகும். வண்ணத்துப் பூச்சிகளின் உணர் கொம்புகள் இறக்கை போன்று அமைந்துள்ளன. மேலும் வண்ணத்துப் பூச்சிகள் அமரும் போது அவற்றின் செட்டைகள் பக்கவாட்டில் காணப்படும்.

முட்டையில் இருந்து வெளிவரும் மென்மையான பூச்சியாகும்போது வண்ணத்துப் பூச்சிகளுக்கு தமது உயிரைக் காப்பாற்றுவதற்காக போராடவேண்டிய நிலமை ஏற்படும். சில வண்ணத்துப் பூச்சிகள் இதற்காக சூழலிடம் இணங்கி மாறுவேடம் பூணுகின்றன. இன்னும் சில பூச்சிகள் தடித்த நிறங்களைப் பயன்படுத்தி இரைதேடி வரும் பிராணிகளைப் பயமுறுத்துகின்றன. அவ்வாறு தடித்த நிறங்களுக்கு மாறியிருக்கும்போது இரைதேடி வரும் பிராணிகள் இதனை ஒருவகை நச்சுப் பிராணி என எண்ணி விலகிப் போகின்றன.

### வண்ணாத்திப் பூச்சியின் வாழ்க்கை வட்டம்



செல்வி.அபிஷாயினி.
தரம் - 04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படை உண்மைகள்

✧ கரிய நிறப் பாத்திரத்தினுள் உணவுப் பொருட்கள் மிக விரைவாக ஆறும். கரிய நிறப் பாத்திரங்கள் மிக விரைவாக வெப்பத்தை உறுஞ்சுகின்றன இதனால் மிக விரைவாக ஆறும்.

✧ பெருந்தெருக்களில் இழுக்கப்பட்டிருக்கும் மின் வடல்களில் வெளவால்கள் மின் அதிர்ச்சிக்கு ஆளாகி இறப்பதைக் காணலாம். காகங்கள் அவ்வாறு இறப்ப தில்லை. வெளவால்கள் மின் வடல்களில் தொங்கும்போது ஏக காலத்தில் இரண்டு வடல்களும் தொடுகை அடைய இடமுண்டு. எனவே மூடிய சுற்றொன்று ஆக்கப்படுவதால் வெளவால் மின்னதிர்ச்சிக்கு ஆளாகின்றது. காகம் பொதுவாக ஒரு வடத்தில் மட்டும் அமரும்.

✧ கொதித்தாறிய நீர் சுவையற்றிருத்தல். கொதிக்க வைக்கும்போது நீரில் கரைந்துள்ள சில உப்புக்கள் நீக்கப்படுவதால் சுவையற்றுப் போகின்றது.

✧ முற்றாக நீர் நிரப்பப்பட்டு இறுக்கமாக மூடப்பட்டுள்ள போத்தலிலுள்ள நீரை உறையவிடும்போது போத்தல் வெடித்து. நீரின் களவளவிலும் பார்க்க உறைந்ததும் உருவாகும் கனவளவு அதிகமாகும்.

✧ பகல் வேளையில் கிணற்றில் பாசி மிதத்தல். கிணற்றிலுள்ள பாசி ஒளித் தொகுப்பில் வெளிவிடும் ஒட்சிசன் அதில் ஒட்டியிருக்கும் இதனால் பாசி மிதக்கும்.

✧ நாய்கள் ஓடும்போது நாவை வெளியே தொங்கவிட்டபடி ஓடுவதைக் காணலாம் இதற்குக் காரணம். நாய்க்கு வியர்வை நாவினாலேயே வெளியேறுகின்றது.

✧ கரப்பான் பூச்சி, சிலந்தி போன்றன கண்ணைத் திறந்தபடியே உறங்குகின்றன. இக்குடும்பத்தைச் சேர்ந்த விலங்குகளுக்கு இமைகள் இல்லை.

✧ சில தாவரங்களின் இலைகள் பல நிறங்களைக் கொண்டதாக இருக்கின்றன. அந்தோசயனின் எனப்படும் ஒருவகை நிறப்பொருள் இருத்தலே இந்நிறத்துக்குக் காரணமாகும்.

✧ தளவாடியின் முன் நின்று தலையை வலது பக்கம் அசைத்தால் விம்பம் இடது பக்கம் அசைவதை அவதானித்தல். தளவாடியில் தோன்றும் விம்பம் பக்க நேர்மாறானது என்பதால் பக்கம் மாறி அசைவது போல் தோன்றும்.

✧ கறியுப்புக் கரைசல் மின்னைக் கடத்தும். கறியுப்புக் கரைசல் ஒரு அயன் பிணைப்பாகும்.

செல்வன்.செ.செந்தூரன்.
தரம் - 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெரிந்து கொள்ளுங்கள்

### பலகுரல் பறவை

இது ஒரு அமெரிக்கப் பறவை 'த்ரஷ்' என்ற இசைப் பறவைகளின் குடும்பத்தைச் சேர்ந்தது. இது அழகாகப் பாடும். அது மட்டுமல்ல பல குரல்களில் பாடும்.

### கலர் கலராக முட்டை

எல்லாப் பறவைகளின், ஊர்வனவற்றின் முட்டைகளும் வெண்மையாகவே இருக்கும் ஆனால் 'தினாமோ' என்ற பறவை மட்டும் கலர் கலராக முட்டை இடுகின்றது. இது எல்லாக் கலர்களிலும் முட்டை இடும் தென்னமரிக்காவில் உள்ள ஒரு பறவை.

### தண்ணீர் தண்ணீர்

தண்ணீர் இல்லாது எந்த உயிரினமும் இல்லை. நாம் எல்லோருமே தண்ணீரைத்தான் நம்பி இருக்கின்றோம். ஆனால் நமது உடலில் 60 சதவீதம் தண்ணீரே காணப்படுகின்றது. நாம் உண்ணும் உணவில் 40சதவீத தண்ணீர் நமக்குக் கிடைத்துவிடுகிறது. விஞ்ஞானிகள் மற்றொரு வியப்பான விடயத்தையும் கூறுகிறார்கள். ஒரு எலும்மிச்சைப் பழத்தைப் பிளிந்தால் சாறு வருவதைப்போல ஒரு மனிதனின் உடலைப் பிளிந்தால் 11 கலன் தண்ணீர் கிடைக்குமாம்.

செல்வி.பா.சுவர்ணா
தரம் - 04

## Good Manners.

- Say "Please"
- Say "thanks"
- Apologize
- Smile
- Saying "excuse me"
- Saying "Sorry"
- Share with others
- Treat others kindly
- Speak the truth
- Show respect to elders.
- Be honest.
- Never use foul languages.
- Be polite
- Say "Hello"
- Say "Good Morning" / "Good evening" / "Good afternoon"

M.Piraveen
Grade - 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதாரமான சமநிலையான வாழ்விற்கான வழிகாட்டிகள்.

- தினமும் பல வகையான சுத்தமான உணவை உட்கொள்ளுதல்.
- வித்தியாசமான உணவுக் கூட்டங்களில் இருந்து நுண்ணிய பாரிய சத்துக்களை வழங்கும் வேறுபட்ட உணவை உண்ண வேண்டும்.
- பல்வகையான காய்கறிகள், பழங்கள், வேர்த்தாவரங்கள் தேர்ந்தெடுத்து உண்ண வேண்டும். பல நிற காய்கறிகள், பழங்களில் வேறுபட்ட சத்துக்கள் உண்டு.
- கொழுப்பு, சர்க்கரை, நிறைந்த உணவை குறைந்தளவில் உண்ண வேண்டும்.
- கல்சியம் நிறைந்த உணவுகளான பால் பெருட்களையும், குட்டி மீன்கள், கரும்பச்சை இலைக்கறி வகைகளை தினசரி சாப்பிட வேண்டும்.
- பொதுவாக கொழுப்பு, எண்ணெய் குறைந்த உணவை தேர்ந்தெடுத்து உண்ணலாம். சிவப்பு மாமிசத்தைவிட கொழுப்பு குறைந்த வெண்மாமிச வகையினைப் ( கோழி, பன்றி இறைச்சி) பயன்படுத்தலாம்.
- ஒரு நாளைக்கு அதிக அளவு நீர் அருந்த வேண்டும்
  குழந்தைகள் 1 - 1.5 லீட்டர் பெரியவர்கள் 1.5 - 2 லீட்டர் தண்ணீர் பருக வேண்டும்.
- எப்பொழுதும் சுறுசுறுப்பாக இருத்தல் ( 30- 45 நிமிட நடை, விளையாட்டு)
- உயரத்திற்கேற்ப பருமனை வைத்திருத்தல்.
- உண்ணாமல் இருப்பதை தவிர்த்தல் (முக்கியமாக காலை உணவு) சிறு பங்குகளாக உணவை உட்கொள்ளல்.
- தினமும் பச்சை இலைவகை உணவுகளை சாப்பாட்டில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.
- கண்ட உணவுகளையும், மாச்சத்து சிற்றுண்டிகளையும் உட்கொள்வதை குறைத்துக் கொள்வதோடு வீட்டில் தயாரித்த உணவு வகைகளையே உட்கொள்ள வேண்டும்.

செல்வி.செ.காரத்திகா
தரம்:- 04.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஒரு பங்கு உணவில் சரியாக இருக்க வேண்டிய அளவு

| உணவுப் பொருள் | | அளவு | நிறை (கிட்டத்தட்ட) |
|---|---|---|---|
| 1) | மாப்பொருள் | | |
| | அரிசி | ½ கோப்பை | (45 - 50 g) |
| | பாண் | ½ துண்டு | (25 - 30 g) |
| | நூடில்ஸ் | ½ கோப்பை | (60 - 70 g) |
| | வற்றாளங்கிழங்கு | 01 | (50 - 60 g) |
| | கடலை/கௌபீ/பாசிப்பயறு | ½ கோப்பை | (40 - 50 g) |
| | அப்பம் | 01 | (50 - 60 g) |
| | தேனீர் பணிஸ் | 01 | (50 - 60 g) |
| | மீன் பாண் | 01 | (65 - 75 g) |
| | பால்சோறு | ½ கோப்பை | (60 - 70 g) |
| 2) | காய்கறிகள் | | |
| | கரட் | ½ கோப்பை | (30 - 40 g) |
| | துவரை | ½ கோப்பை | (30 - 40 g) |
| | பயற்றங்காய் | ½ கோப்பை | (30 - 40 g) |
| | அவரை | ½ கோப்பை | (30 - 40 g) |
| | கத்தரிக்காய் | ½ கோப்பை | (30 - 40 g) |
| | வாழைப்பழம் | ½ கோப்பை | (30 - 40 g) |
| | பாகற்காய் | ½ கோப்பை | (45 - 50 g) |
| | கங்குன் இலை | ½ கோப்பை | (20 - 30 g) |
| | பீற்றூட் | ½ கோப்பை | (30 - 40 g) |
| | வெண்டிக்காய் | ½ கோப்பை | (30 - 40 g) |
| | வல்லாரை | ½ கோப்பை | (20 - 30 g) |
| | முருங்கைக்காய் | ½ கோப்பை | (20 - 30 g) |
| | பூசணிக்காய் | ½ கோப்பை | (30 - 40 g) |
| | வாழைக்காய் | ½ கோப்பை | (30 - 40 g) |

### 3) பழவகை

| | | |
|---|---|---|
| அப்பிள் | 01 துண்டு | (100 g) |
| வாழைப்பழம் | 01 | (30 - 40g) |
| பப்பாளி | 01 நடுத்தரத்துண்டு | (100 g) |
| மாம்பழம் | 01 | (100 g) |
| கொய்யாப்பழம் | 01 நடுத்தரத்துண்டு | (40 - 50g) |
| அன்னாசி | 01 துண்டு | (20 - 30g) |
| திராட்சை | 06 - 10 | (80 - 100g) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 04) பால் மற்றும் பாலுணவு உற்பத்தி

| | | |
|---|---|---|
| பசுப்பால் or ஆடைப்பால் | 01 கோப்பை | (140g) |
| பால்மா | 01 மேசைக்கரண்டி | (30 - 40g) |
| பாற்கட்டி( சீஸ்) | 01 துண்டு | (30 - 40g) |
| யோக்கட் | 01 கோப்பை | (40 - 50g) |
| தயிர் | 01 கோப்பை | (40 - 50g) |

## 05. புரதம் நிரம்பிய உணவு

| | | |
|---|---|---|
| மீன் | 01 துண்டு | (30 - 40g) |
| கோழி இறைச்சி | 01 துண்டு | (30 - 40g) |
| நெத்தலி | 6 - 7 | (30 - 50g) |
| பயறு | ½ கோப்பை | (40 - 50g) |
| முட்டை | 01 | (45 - 50g) |
| இறால் | 5 - 6 | (10 - 20g) |
| கருவாடு | 1 துண்டு | (20 - 30g) |
| பருப்பு | ½ கோப்பை | (30 - 40g) |
| சோயா | ½ கோப்பை | (30 - 40g) |
| கௌபி | ½ கோப்பை | (30 - 40g) |
| சோளம் | 1 கோப்பை | (100g) |

06. சிறு அளவுகளில்

| | | |
|---|---|---|
| நிலக்கடலை, மரமுந்திரி, எள் | 01 மேசைக்கரண்டி | (15g) |
| எண்ணெய்வகை, மாயரீன் | 01 மேசைக்கரண்டி | (05g) |
| சீனி | 02 மேசைக்கரண்டி | (10g) |

செல்வி.பி.சமரசி.
தரம் - 05.

## My best friend



1. My best friend is Yanusiya
2. She is tall.
3. She is 10 years old.
4. She studies in Grade four.
5. She is always with me in the school.
6. We play together.
7. She comes to school on foot.
8. She lives at Mayavanoor.
9. Her house is very close to her school.

S.Thanusiya,
Grade - 04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவ மன்றம்



# இந்துமா மன்றம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவரத் தலைவர்கள்



முதலாவது பாண்டு வாத்திய அணியினர்



வருடாந்த திறனாய்வு -2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சை பாராட்டு விழாக்கள்




























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர் சிந்தனை உருவாக்கம்

சிந்தனை நேர்சிந்தனை, எதிர்மறைச்சிந்தனையென இருவகைப்படும். நேர்சிந்தனை எமதும் பிறரது நன்மைத்தனங்களை உறுதிப்படுத்தும் மனோபாங்காகும். எமது உடற்பாங்கான தன்மை, உள்ளம், உணர்வு ஆன்மா போன்றவை சீராக இணையும்போது நேர்ச்சிந்தனை உதயமாகின்றது. நல்ல இதயவெளிப்பாடே நேர்சிந்தனையாகும்.

நாம் எப்படிச்சிந்திக்கின்றோமோ அப்படியே நாம் உள்ளோம். நல்ல எண்ணங்கள், நல்ல உணர்வுகளுக்கு வித்திடுகின்றன. நாங்கள் நல்லவர்கள் அல்ல, அல்லது நீங்கள் நல்லவர்கள் அல்ல, அல்லது எல்லோரும் நல்லவர்கள் அல்ல என்று சிந்தித்தால் அவ்வாறான சிந்தனை எதிர்மறையான சிந்தனையாக அமைகின்றது. தரக்குறைவாய் மற்றவர்களை எடைபோடுதல், பிள்ளைகளை பகிரங்கமாய் மட்டந்தட்டி தண்டித்தல், இம்சைப்படுத்தி நச்சரித்தல், குறைகூறுதல், துன்புறுத்தல், கடினமான வார்த்தைகளை பிரயோகித்தல் போன்றவை எதிர்மறைச்சிந்தனைகளின் விளைவுகளாகும்.

எதிர்மறைச்சிந்தனைகளை முறியடிக்க,

01. எமது மனக்கண்முன் உயர்ந்த சிந்தனைகளை மட்டும் அனுமதிப்போம்.
02. எமது நல்வாழ்விற்கு நிறைவான மகிழ்விற்கு நாமே பொறுப்பானவர்கள் என்பதை ஏற்றுக்கொள்வோம்.
03. எம்மனங்களை நம்பிக்கைக்குரிய நற்சிந்தனைகளால் நிரப்புவோம்.
04. எம்மால் நன்றாக வாழமுடியும் என்று அடிக்கடி மனதில் பதிப்போம்.
05. எமது மனதில் மனோச்சக்தியைத் தெரிந்துகொண்டவர்களாய் விருப்போடு எம்மை நாம் நேசிப்பதை உறுதிப்படுத்துவோம்.
06. எமது மனங்களை உடற்பயிற்சி, தியானம் போன்றவற்றால் பலப்படுத்துவோம்.
07. என்றும் நகைச்சுவை உணர்வோடு பயணிப்போம்.
08. ஆன்மீக தாகம் உடையோராய் பிறர்நலமுடன் வாழ எம்மையே அர்ப்பணிப்போம்.
09. ஆதரவற்ற சிறுவர்களுக்கு, இளையோருக்கு ஆதரவும், வழிகாட்டலும் நல்கி ஆர்வத்தோடு துயர்துடைப்போம்.
10. இறைவனோடு ஒன்றாகி ஏழைகளுக்கு விருந்தளித்து இகமதில் சொர்க்கத்தை அனுபவிப்போம்.
11. சேர்ந்து வாழின் சோர்வு இல்லை, வருத்தமின்றி திருத்தம் இல்லை என்பதை ஏற்றுக்கொண்டு இயற்கையோடு இணைந்து வாழ்வோம்.
12. கற்பவை கற்றபின் நிலையாக நின்றிட ஓயாத அலைகளாய் நன்மையே செய்வோம்.

எனவே கள்ளமில்லா உள்ளமதில் உருவாகும் நேர்சிந்தனைகளை நல்வாழ்விற்கான நல்ல முத்துக்களாய் வித்திட்டு வீறுடன் நடைபயிலுவோம். கடினஉழைப்பும் நுண்ணறிவு கலந்திட நிலைகுலையாக் கல்வியினை நிறைவாக்கி மகிழ்ந்திடுவோம். எளிமையான மாசற்ற வாழ்வினை அணிகலனாக்கி எம்மையே நாம் அழகுபடுத்துவோம்.

கலாநிதி வின்சன் பற்றிக்
அ.ம.தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்களிடத்தில் இரக்கம்

உலகின் ஓர் அடையாளச் சின்னமே உயிர்கள். பல்லுயிர் பெருக்கமும் வாழ்வுமே பூமியின் ஆன்மா. ஒளி, காற்று, மண், நீர் இவற்றின் சமநிலை காரணமாகத்தான் உயிர்கள் தோன்றின. உயிர்களின் சமநிலை குலைந்தால் இயற்கையின் சமநிலை குலைந்து பூமியே அழிந்துவிடும். இதனால் உயிர்கள் எல்லாம் மடிந்து விடும். ஆகவே ஆயிரக் கணக்கான ஆண்டுகளின் பரிணாம வளர்ச்சி முடிந்து புதிய பரிணாம வளர்ச்சி தொடங்கும். எனவே சுற்றுச்சூழலைக் காத்து உயிர்களின் சமநிலையைப் பேணி உலகத்தை காக்க வேண்டும்.

நமது முன்னோர்கள் இயற்கையோடு இணைந்து இயற்கையைப் போற்றி வாழ்ந்துள்ளார்கள். ஆனால் இன்றைய சமுதாயத்தில் இயற்கையைப் பாதுகாப்பது பெரும் சவாலாகவும் கேள்விக் குறியாகவும் உள்ளது. "ஒன்றறிவதுவே உற்றறிவதுவே" என்று உலகத்து உயிர்கள் எலலாவற்றையும் பகுத்துக் காட்டுவார் தொல்காப்பியர்.

"நெல்லும் உயிரன்றே, நீரும் உயிரன்றே" என்று உயிர் அருமை போற்றுகிறது சங்க இலக்கியம், இப்படியாக பண்டைய நூல்களும், பெரியவர்களும், மன்னர்களும் உயிர்களை காத்து உயிர்களிடத்தில் அவ்வளவு அன்பு வைத்து இருக்கிறார்கள்.

இத்தகைய உயிர்களிடத்தில் அன்பு செலுத்தி உயிர்களைக் காத்தவர்களில் மனுநீதி கண்ட சோழன், சிபிச்சக்கரவர்த்தி, பேகன், பாரி போன்ற சில மன்னர்கள் போற்றத்தக்கவர்கள். இதே போன்று இன்னும் எத்தனை பெரியவர்கள் இருக்கிறார்கள்.

மேலும் பண்டைய காலத்தில் ஒவ்வொரு கடவுளர்களின் வாகனங்கள் கூட இதையே வலியுறுத்துகின்றன. தேவேந்திரனுக்கு வெள்ளை யானை, சிவனுக்கு காளை, திருமாலுக்கு கருடன், பசு, முருகனுக்கு மயில், சேவல், காளிக்குச் சிங்கம், ஐயனாருக்கு குதிரை, பிள்ளையாக்கு எலி, ஐயப்பனுக்கு புலி, மீனாட்சிக்கு கிளி, வைரவருக்கு நாய் இவ்வளவு ஏன் சனிக்கும் எமனுக்கும் முறையே காகமும் எருமையும் உள்ளன. இவ்வாறுதான் விலங்குகளும் பறவைகளும் போற்றிப் பாதுகாக்கப்பட்டுள்ளன. கோவில்களில் தலவிருட்சம் இல்லாமல் இருப்பதில்லை. இவையெல்லாம் இயற்கையை நேசிக்கும் பண்பாட்டில் முகிழ்த்தவை எனலாம்.

இவ்வாறு பண்டைத்தமிழர்கள் இயற்கையைப் பாதுகாத்து இயற்கையோடு இசைந்து வாழ்ந்திருக்கிறார்கள். எனவேதான் "பல்லுயிர்களையும் பாங்குடன் ஓம்பும் நல்லுள்ளம் கொண்டவர்கள்." இன்றைக்கு இந்நிலை மாறி ஆசைகள் அளவு கடந்து விட்டதால் இயற்கையைச் சீரழிக்கும் நிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். இந்நிலைமை விரைவில் மாற்றி முன்னோர்கள் வாழ்ந்த நிலையினை உணர்ந்து பசுமரத்தாணி போல் இன்றைய சமுதாயத்தில் பதிந்து நாளைய உலகம் நமக்கானதாக மாற வேண்டும் மாற்றுவோம்.

செல்வி.கோ.நிஷ்விகா

பழைய மாணவி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயற்கைத் தாய்

இசையும் இனிமையும் ஒன்று
இனிமையாக வாழும் இதயமும் ஒன்று
என்றென்றும் வாழும் இயற்கையே
உமது புகழ்தனை சொல்லிட வார்த்தைகள் இல்லை
மல்லிகை பூக்க மானிடம் காக்க
மனிதம் காக்கும் இயற்கைத் தாய்
பொங்கும் நதிகள் போராடும் மீன்கள்
கங்கு கரையின்றி சீறிப்பாயும் கடல்கள்
ஊறும் கிணறும் உணவு தரும் மரமும்
பாடும் குயிலும் பேசும் கிளியும்
என்றும் இருக்கும் இயற்கைக்கே உரியதல்லவா?
இங்கு இருக்கும் மானிடர்க்கு ஏன் இது புரியவில்லை.
செயற்கை இருப்பதா...? இயற்கை அழிவதா...?
பொலித்தீன் பைகள் பறக்க ஓசோன் படை துளையிட
நாற்றம் எங்கும் வெளியிட நாசமாகும் இயற்கை
தாய் என்பவள் காப்பதற்கு மட்டுமே அழிப்பதற்கு அல்ல
அது ஏன் புரியவில்லை உனக்கு...
கவனம் கவனம் காத்திடு இயற்கையை
உலகில் அதிசயங்கள் ஏழென்றால் - அதில்
முதலாவது அதிசயமே நம் இயற்கைத் தாய்
காப்போம் அவளை காலம் உள்ள காலம் வரை.

பழைய மாணவன்
செல்வன். க.மதுரன்

முள் நிறைந்த செடியிலேதான் முழு அழகு வாய்ந்த ரோஜா பூக்கிறது. அதுபோலவே சொல்லொணாத் துன்பங்களுக்கிடையிலே தான் உண்மை பூத்து மலர்கிறது.

குழந்தையும் மலரும் செழிப்புள்ளவை அவற்றை மென்மையாகக் கையாள வேண்டும்.

பலரைச் சில காலமும் சிலரைப் பலகாலமும் ஏமாற்றலாம். ஆனால் எல்லோரையும் எக்காலமும் ஏமாற்ற இயலாது.

முன்னேற்றம் அடைவதற்கு முதலில் தன்னம்பிக்கையும் அடுத்தபடியாக இறைவன் மீது நம்பிக்கையும் வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்கள்......

"கேடில் விழுச்செல்வம் கல்வி
ஒருவர்க்கு மாடல்ல மற்றயவை"

ஆம் ஆழியால் சூழப்பட்ட அகிலத்தில் வாழும் அனைத்து மக்களுக்கும் அழிவற்ற செல்வமாக சிறந்து விளங்குவது கல்விச் செல்வமாம். கல்வி என்னும் கருவூலத்தை எமக்கு வழங்கும் பெருமக்கள் ஆசிரியர்கள் ஆவார்கள். எமது அறியாமை போக்கும் ஆசிரியர்கள் "ஞானவிளக்குகள்" என்றார் சோக்கிரட்டீஸ். "நற் சமூதாயத்தை கட்டியெழுப்பும் தூண் போன்றவர்கள் ஆசிரியர்கள்" என்றார் மகாத்மா காந்தி. ஆசிரியர் ஒருவர் சமூதாயத்தின் தலைவராகவும் ஏணியாகவும் இருந்து வழிகாட்டுகின்றார்.

ஒவ்வொரு வருடமும் ஐப்பசி மாதம் 06ஆம் திகதி எமது நாட்டில் ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகின்றது. "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்ற கூற்றிற்கு இணங்க எமக்கு நல்லறிவு புகட்டி எமை வழி நடத்திச் செல்லும் இக் கண்கண்ட தெய்வங்களை போற்றிப் பணிந்து நடத்தல் வேண்டும்.

சங்க காலத்தில் அரசர்களை விட அரசர்களுக்கு கல்வி புகட்டிய ஆசிரியர்களுக்கே பெரும் மதிப்புக் காணப்பட்டது. ஆசிரியர் என்ற பெயர் எவ்வாறு ஏற்பட்டது என்று நோக்கினால் ஆசு என்றால் குற்றம் என்றும் சிரியர் என்றால் அகற்றும் என்றும் பொருள்படும். அதாவது ஆசிரியர் என்பதன் பொருள் குற்றங்களை களைபவர் என்பதாகும்.

இன்றைய சமுதாயத்தில் ஆசிரியர் பாட அறிவைக் கொடுப்பவராக மட்டுமன்றி மாணவர்களின் பாதுகாப்பைக் கொடுப்பவராகவும் காணப்படுகிறார். அன்று அரசன் எவ்வழி மக்களும் அவ்வழி என்ற நிலையில் இருந்தது. இன்று ஆசிரியர் எவ்வழி மாணவர்களும் அவ்வழி என்ற நிலை காணப்படுகின்றது.

அது மட்டுமன்றி ஆசிரியர்கள் மாணவர்கள் பற்றிய பொறுப்புடையவர்களாகவும் அன்பு செலுத்தும் தாயாகவும் கட்டுப்பாட்டை வளர்க்கும் தந்தையாகவும் செயற்படுகின்றனர். மாணவர்கள் பெற்றோர்கள் கூறும் அறிவுரைகளைக் கேட்பதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.

இன்றைய விஞ்ஞான உலகில் எத்தகை நவீன கற்பித்தற் சாதனங்கள் வந்தாலும் அவற்றால் ஆசிரியர்கள் வழங்கும் அன்பை, பரிவை அரவணைப்பைத் தரமுடியுமா? ஆட்சியை மான்புறச் செய்யும் வழிகாட்டிகளாகவும் விளங்குகின்றனர்.

"தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை" என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க ஆசிரியர்களைப் போற்றிக் கௌரவித்து நடப்போமாக.,

பழைய மாணவி
செல்வி.செ.கபிர்சனா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் வரிவடிவமும் எழுத்துப் பொறிமுறையும்.

தமிழ் வரிவடிவங்கள் பற்றி தமிழ் இலக்கண நூலார் கூறும் பல்வேறு கருத்துக்களையும் கோட்பாடுகளையும் ஆராயும்போது எழுத்துக்களின் வரிவடிவங்கள் பெற்றுவந்த மாற்றத்தினைக் காண முடியும். இன்று எமக்கு கிடைக்கும் தொல் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தின் பாயிரச் செய்யுள் எழுத்துப் பற்றிய குறிப்புக்களைக் கூறுகின்றது.

**"....தமிழ் கூறு நல்லுகந்து**
**வழக்குஞ் செய்யுளு மாயிரு முதலி**
**னெழுந்துஞ் சொல்லும் பொருளுநாடி...."**

அடிகள் எழுத்துப் பற்றிய சிந்தனையைத் தூண்டுகின்றன. தொல்காப்பியரது எழுத்ததிகாரச் சூத்திரங்களில் எழுத்து என்ற சொற்பிரயோகம் நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களிலே அமைந்துள்ளது. ஓசைக்கும் எழுத்துக்கும் உள்ள தொடர்பினை பல சூத்திரங்களிலேயே தொல்காப்பியர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஒற்றெழுத்து, நெட்டெழுத்து, வல்எழுத்து, மெல்எழுத்து, இடையெழுத்து போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவ்வாறு எழுத்துக்களின் அமைப்பு முறையினை விளக்கும் பிரயோகங்களும் காணப்படுகின்றன. அவையாவன ஓரெழுத்தொருமொழி, ஈரெழுத்தொருமொழி 'ஔ'கார இறுவாய், னகர இறுவாய் போன்றவற்றை உதாரணமாகச் சுட்டலாம்.

வரிவடிவங்களை அமைப்பதில் கையாளப்பட்ட ஒழுங்கு முறையினை நோக்கும்போது

I. **"அவற்றுள் அ, இ, உ, எ, ஒ என்று**
**மப்பாலைந்து மோரளபிசைக்கும் குற்றெழுத்தென்ப**

II. **ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்று**
**மப்பாலேழு மீரளபிசைக்கு நெட்டெழுத்தென்ப"**

III. **'ஔ' கார விறுவாய் பன்னீரெழுத்து**
**முயிரென மொழிய**

VI. **'ண க ர விறுவாய்**
**பதினெண்ணெழுத்து மெய்யென மொழிப"**

தொல்காப்பியரது இச்சூத்திரங்கள் எழுத்துக்களது பெயரையும் முறையையும் வரிவடிவத்தையும் உணர்த்துகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிக்கு முதற்காரணமும் அணுத்திரளின் காரியமுமாகிய எழுத்துக்களுக்கு பண்டைக் காலம் தொட்டே வரிவடிவமும் இருந்துள்ளது. எழுத்து என்பது எழுதப்படுவது. அதனால் அதற்கென ஒரு வரி வடிவமும் இருந்தேயாக வேண்டும்.

எழுத்துக்களை மாணவர்கள் எழுத்துப் பொறி முறைக்கேற்ப எழுதப் பழகுவது மிகவும் அவசியமாகும். மொழி பயிற்றுதலின் பிரதான இலக்குகளிலொன்று எழுத்தின் மூலமும் குழந்தை தன்னைத்தானே ஒழங்குபடுத்திக் கொள்ளும் திறனை வளர்ப்பதாகும்.

மொழியின் ஒலி வடிவங்கள் வரிவடிவங்களாக அமைக்கப்படுவதையே எழுத்து என்கின்றோம். எழுதுவதற்கான ஆயத்தநிலையில் முன்கை, கைவிரல், மணிக்கட்டு போன்ற உறுப்புக்களை ஒருங்கிணைத்துப் பயன்படுத்தவும் தசைநார்களை முறையாக இயக்கவும் குழந்தைகளுக்குப் பயிற்சியளிக்க வேண்டும். இதைவிட எழுத்து முன் பயிற்சியான கோடுகள், வட்டங்கள், வளைவான கோடுகள், வட்டங்களை கோடிட்டு இணைத்தல் போன்ற பயிற்சிகளில் ஈடுபடுத்துவதன் மூலம் எழுத்துப் பொறி முறையுடன் குழந்தை எழுதுவதற்கு தன்னைத் தயார் படுத்திக் கொள்கிறது.

பிள்ளைகளுக்கு எழுத்துக்களை அவர்களுக்குத் தெரிந்த சொற்களில் இருந்து அறிமுகப்படுத்த வேண்டும். பிள்ளை ஐந்து வயதை அடையும்போது மொழியின் அடிப்படை ஒலியமைப்பு மற்றும் இலக்கண அமைப்போடும் பேசும் நிலையில் இருப்பார்கள். எனவே பாடப் புத்தகத்தில் தெரிந்த பொருளின் வடிவமும் அதன் பெயரும் முதலில் கொடுக்க வேண்டும். பின்னர் அதன் பெயரை ஒலிகளாகப் பிரிக்க வேண்டும். அப்போதுதான் ஒலிகளுக்கான வரிவடிவத்தினை எளிதில் மாணவர்கள் அறிந்து கொள்ள முடியும்.

எழுத்துக்களை அறிமுகம் செய்யும்போது முதலில் மெய் எழுத்துக்களையும் பின்னர் உயிர் எழுத்துக்களையும் எளிமையான வடிவத்திலிருந்து தொடங்கி அறிமுகப்படுத்தலாம். மெய் எழுத்துக்களில் எளிமையான மற்றும் வலமாகச் செல்லும் எழுத்துக்களை முதலில் அறிமுகப்படுத்த வேண்டும்.

எழுத்துப் பொறிமுறையுடன் எழுத்துக்களை எழுதும் முறையை பின்வருமாறு நோக்கலாம்.

(1) இடப்பக்கம் தொடங்கி இடமாகச் செல்பவை

உதாரணம் :- ட, ப, ம, ய, ழ

(2) இடப்பக்கம் கீழ்ப்பகுதியில் தொடங்கும் எழுத்துக்கள்

2.1 இடப்பக்கம் கீழ்ப்பகுதியில் தொடங்கும் எழுத்துக்கள்

உதாரணம் :-ா, ஈ, ர, ந, ஙு, ற

2.2 இடப்பக்கம் நடுவில் தொடங்கும் எழுத்துக்கள்

உதாரணம் :- க, ச, த

(3) சுழியுடன் தொடங்கும் எழுத்துக்கள்

3.1 இடப்பக்கம் கீழ்ப்பகுதியில் தொடங்குபவை

உதாரணம் :- ள, ன, ண, வ, ல, எ, ஏ, ஞ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.2 இடப்பக்கம் மேல் பகுதியில் தொடங்குபவை

உதாரணம் :- ஐ, ஒ, ஓ, ஔ

3.3 மேற்பகுதியில் நடுவில் தொடங்குபவை

உதாரணம் :- அ, ஆ, இ

(4) புள்ளி கொண்டு முடியும் மெய் எழுத்துக்கள்

உதாரணம் :- க் தொடக்கம் ன் வரை.

இவ்வாறாக தமிழ் நெடுங்கணக்கு எழுத்துக்கள் எழுத்துப் பொறிமுறைக்கேற்ப வகைப்படுத்தப்படுகின்றன. மாணவர்கள் எழுத்துக்களை மேற்கூறியவாறு எழுத்துப் பொறிமுறைக்கேற்ப சரியான வடிவம், திசைமுகம், அளவு என்பனவற்றை அனுசரித்து எழுதப் பழகுதல் அவசியமாகும்.

எனவே எழுத்து ஒரு மொழியின் அடிப்படைக் கூறு ஆகும். மொழிக்கு நிலைபேறு அளிப்பது எழுத்தாகும். ஒலி வடிவத்திற்கு வரிவடிவம் கொடுப்பது எழுத்தாகும் எனப்படுவதால் எழுத்து எனப் பெயர் பெற்றது. இவ்வாறான சிறப்புக்களை உடைய தமிழ் எழுத்துக்களை எழுத்துப் பொறி முறைக்கேற்ப எழுதுவதும் எழுத வழிப்படுத்துவதும் அனைவரினதும் கடமையாகும்.

அதிபர்.
திருமதி.ல.கோபாலராசா

# Who Will Cry When You die?

## அதாவது நீங்கள் இறந்தபின் யார் அழப்போகிறார்கள்?

நீ பிறந்த போது நீ அழுதாய் உலகம் சிரித்தது. நீ இறக்கும் போது பலர் அழுதால்தான் உன் ஆத்மா சாந்தியடையும். இங்கு கூறப்படும் அற்புதக் கருத்துக்களை வாசியுங்கள்.

* தனக்கு வேண்டியதை கேட்பவன் சில நிமிடங்களில் முட்டாளாய்த் தெரிவான். தனக்கு வேண்டியதை கேட்காதவன் வாழ்நாள் முழுவதும் முட்டாளாய் இருக்க நேரிடும்.
* உனது வாழ்க்கையில் நீ சந்திக்கும் ஒவ்வொரு நபரும் உனக்கு ஏதோ ஒன்றை சொல்லித் தருகின்றனர். எனவே நீ சந்திக்கும் எல்லோரிடமும் கருணையுடன் இரு.
* உனக்கு எந்த விடயத்தில் திறமை உள்ளதோ அதிலேயே கவனத்தையும், நேரத்தையும் அதிகம் செலுத்துங்கள். தேவையற்ற விடயங்களில் நேரத்தை செலவளிக்காதீர்கள்.
* அடிக்கடி கவலைப்படாதீர்கள், தேவையெனில் கவலைப்படுவதற்கென ஒவ்வாரு நாளும் மாலை நேரம் 30 நிமிடங்கள் ஒதுக்குங்கள். அந்த நேரம் அனைத்து கவலையையும் பற்றி சிந்தியுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* அதிகாலையில் எழப்பழகுங்கள் வாழ்வில் வென்ற பலரும் அதிகாலையில் எழுபவர்களே.
* தினமும் நிறைய சிரிக்கப் பழகுங்கள். அது நல்ல ஆரோக்கியத்தையும், நல்ல நண்பர்களையும் பெற்றுத்தரும்.
* நிறைய நல்ல புத்தகங்களை வாசியுங்கள். எங்கு சென்றாலும் பயணம் செய்யும் போதும் ஒரு புத்தகத்துடன் செல்லுங்கள். காத்திருக்கும் நேரத்தில் வாசியுங்கள்.
* உங்கள் பிரச்சினைகளை ஒரு நாளில் பட்டியல் இடுங்கள். இவ்வாறு பட்டியல் இடும்போது உங்கள் மனப்பாரம் கணிசமாக குறையும். அதற்கான தீர்வுகளும் அதன் மூலம் கிடைக்க வாய்ப்புண்டு.
* உங்கள் குழந்தைகளே உங்களுக்கு கிடைத்த மிகச் சிறந்த பரிசு. அவர்களுக்கு நீங்கள் தரக்கூடிய சிறந்த பரிசு அவர்களுடன் நீங்கள் செலவிடும் நேரமே.
* எந்தவொரு புதுப்பழக்கமும் உங்களுக்குள் முழுதும் உள்வாங்கி அது உங்கள் வாடிக்கையாக மாற 21 நாட்களாவது ஆகும். ஆகவே தேவையான விடயங்களை திரும்பத் திரும்ப செய்யுங்கள்.
* தினமும் நல்ல இசையைக் கேளுங்கள். துள்ளலான நம்பிக்கையை தரும் இசை புன்னகையையும் உற்சாகத்தையும் தரும்.
* புது மனிதரிடம் தயங்காது பேசுங்கள். அவர்களிடம் இருந்தும் கூட உங்களுக்கு நல்ல சிந்தனையும் நல்ல நட்பும் கிடைக்கலாம்.
* பணம் உள்ளவர் பணக்காரர் அல்ல. 03 சிறந்த நண்பர்களாவது கொண்டவனே பணக்காரன்.
* எதிலும் தனித்துவமாக இருங்கள். பிறர் செய்வதையே வித்தியாசமாக நேர்த்தியாக செய்யுங்கள்.
* நீங்கள் எவ்வளவு வெற்றியடைந்தாலும் எளிமையான மனிதராய் இருங்கள். வெற்றிகரமான பல மனிதர்களும் எளிமையானவர்களே.
* ஆணவம் ஆயுளைக் குறைக்கும்.

இந்தக் கருத்துக்களை தீர்மானமாக எடுத்துக் கொண்டால் உங்கள் வாழ்க்கையில் வெற்றி நிச்சயம்.

உசாத்துணை:- றொபின் சர்மா எழுதிய புத்தகம்.

செல்வி ம.பிரவீனா,
உதவி ஆசிரியர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயனுள்ள மனிதனாக உருவாக

இன்று மாணவ சமுதாயம் பல்வேறு சவால்களை எதிர்நோக்குகின்றது. அவற்றுள் முக்கியமானது உலகளாவிய ரீதியில் வளர்ச்சி கண்டுள்ள தகவல் தொழில் நுட்பம் ஒருபுறம் அத்துடன் கட்டுப்பாடு தன்னம்பிக்கையற்ற மாணவ சமுதாயம் மூலம் உருவாகியுள்ள ஒழுக்கக் கேடான நிலை. இவற்றிலிருந்து மாணவர்கள் விடுபட ஒழுக்கத்தின் ஊடாக தமது ஆளுமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். ஆளுமை என்பது ஒருவருடைய உடல், மனம், அறிவு, ஆன்மா என்னும் நான்கினையும் உள்ளடக்கியதாகும்.

மாணவ சமுதாயம் ஒழுக்கத்துடன் கூடிய ஆளுமையை வளர்த்துக் கொள்ள மேற்கூறிய நான்கு பரிமாணங்களையும் உள்டக்கிப் பூரணமான முயற்சியில் ஈடபட வேண்டும். முதலாவதாக உடலினை எடுத்து நோக்கின் இது மனிதனுக்கு இயற்கையாகக் கடவுளால் அளிக்கப்பட்ட ஒரு வரமாகும். இது வலிமையும், ஆரோக்கியமும் உடையதாக இருந்தால்த்தான் யாவற்றிலும் வெற்றியடைய முடியும். அதன் மூலம் ஆன்மீக வாழ்வை கடைப்பிடிக்கவும் முடியும்.

இவ்வுடலும் மனமும் தொடர்பு கொண்டிருப்பதால் ஆரோக்கியமற்ற உடல் ஒருவனுக்கு மனச்சோர்வையும், கவலையையும் ஏற்படுத்துகிறது. இதனால் மாணவ சமுதாயம் தனது குறிக்கோளை அடைய முடியாத பரிதாப நிலைக்கு உள்ளாகின்றனார். வலிமையான உடலைப் பெற்றவர்கள் மன மகிழ்வுடனும் ஆர்வத்துடனும் பதட்டம் இன்றியும் தமது கடமைகளைச் சரிவர ஆற்றுகிறார்கள். எமது உடல் உணவாலேயே நிலைத்து நிற்கின்றது. சத்தான, தூய்மையான உணவை உரிய வேளைகளில் அளவுடன் உண்டு, உடற்பயிற்சி, யோகாசனப் பயிற்சிகளில் ஈடுபட்டால் உடல் வலிமை பெறும்.

அதனால் எமக்கு எதையாவது விளங்கிக் கொள்ளும் சிந்திக்கும் ஆற்றல் உருவாகும். எனவே மாணவர்களாகிய நீங்கள் சத்தான உணவு, புலனடக்கம், ஓய்வு மூலம் உடல் வலிமை பெற்று ஆளுமையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

நவீன விஞ்ஞானக் கண்டு பிடிப்புக்களின் தொழில்நுட்ப வளர்ச்சி மூலம் மனிதன் அதிக உடல் உழைப்பின்றி வாழ்வதால் நவீன நோய்களும் அவனைப் பிடிப்பதை கண்ணூடே காண முடிகின்றது. அதேவேளை அளவுக்கு மீறிய உடலுழைப்பும் வேண்டாத போதைப் பொருள் பாவனையும் உடல் வலிமையைப் பாதிக்கும். எனவே அளவான உடல் உழைப்பும், ஓய்வும் உடலாரோக்கியத்துக்கு உகந்ததாகும்.

அடுத்து மனதை நோக்கின் மனம் எமது உணர்வுகள், எண்ணங்கள் சிந்தனைகள் என்பவற்றை உள்ளடக்கியதாகும். அது பதட்டமின்றியும் பண்பட்டதாகவும் யாவற்றுக்கும் கட்டுப்பட்டதாகவும் இருக்கும்போது தான் ஆளுமை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சியடைகின்றது. எதிர்மறை எண்ணங்கள் தீய சிந்தனைகள், பய உணர்வுகள், பதகளிப்பு என்பன மனதைப் பலவீனமடையச் செய்து தீய நடத்தைக்கும் மனிதனை இட்டுச் செல்வதால் மனதை ஒருமுகப்படுத்த வேண்டும்.

தனது திறனுக்கு அப்பாற்பட்டதைப்பற்றிச் சிந்திப்பதும், தோல்விகளைக் கண்டு ஏங்குவதும், தன்னம்பிக்கையின்மையும் மனித மனத்தைப் பலவீனப்படுத்தும். இதனை சுவாமி விவேகானந்தர் கூறும்போது "பலவீனத்துக்குப் பரிகாரம் பலவீனத்தை நினைத்து ஏங்குவதால் பயனில்லை" மாறாக வலிமை பற்றிச் சிந்திப்பதே ஆகும்.

தற்காலத்தில் மாணவர்களுக்கு ஆசிரியர்களின் சிறு கண்டிப்பு அல்லது சிறு விடயங்கள் கூட அவர்களது மன வலிமையைக் குழப்புவதாகக் காணப்படுகிறது. காரணம் அவர்களது மனம் பண்படுத்தப்படவில்லை. அத்துடன் தார்மீகமான சிந்தனாசக்தி அவர்களிடம் வளர்க்கப்படவில்லை. இவர்களிடையே காணப்படுகின்ற தற்கொலைகள், தீய செயல்கள், கொலைகள், வன்முறைகள், என்பவற்றுக்குக் காரணம் வலிமையற்ற மனமே. இதிலிருந்து நாம் மீண்டெழ மனதை வலிமை பெறச் செய்ய வேண்டும். இதற்கு நல்ல சிந்தனை ஆற்றல் வேண்டும்.

மாணவர்களில் அளவற்ற ஆற்றல்கள் புதைந்துள்ளன. அதனை ஆக்கபூர்வமாக்க வாசிப்புப் பழக்கங்களை மேற்கொள்ள வேண்டும். நல்ல பண்பட்ட மனிதர்களுடன் நட்புறவை வைத்துக் கொள்ள வேண்டும். சிறுவயதில் இருந்தே நீதிநூல்கள், சமய நூல்கள், சமயப் பெரியார்களின் உபதேசங்கள் போன்றவற்றை வாசித்தல் வேண்டும். அவற்றைச் செயற்படுத்த வேண்டும். இவற்றை விடுத்து தீய சினேகிதம், தரக்குறைவான நாவல்கள், திரைப்படங்கள், தீய உணர்வை ஏற்படுத்துகின்றன. இவற்றிற்கு அடிமையாகும் மாணவர்கள் மனப் பலவீனத்துக்கும் சிக்கல்களுக்கும் உள்ளாகின்றார்கள். இதன் மூலம் கல்வியிலும் பாரியதொரு இடைவெளி எதிர்நோக்கப்படுகின்றது. இவற்றைத் தவிர்த்து நல்ல நட்பு, தினசரி தியானப் பயிற்சி மூலம் ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி வீறுநடை போடலாம்.

அடுத்து அறிவு என்பது மனதில் உள்ள ஆற்றல்களை வெளிப்படுத்துவதுதான் அறிவு. ஒவ்வொரு மனிதரையும் எடுத்து நோக்கின் அவர்களிடம் அறிவு என்னும் ஆற்றல் இருப்பினும் அவ்வறிவு பல பேரில் வெளிப்படுவதில்லை. ஒரு சிலரில் தான் இவ்வறிவு வெளிப்படுகிறது. எமது மனம் அமைதியற்றது. மனதைவிட அறிவு மேலானது. எனவே மனதைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் அறிவுக்கே உண்டு. அறிவுடன் தொழிற்படும் மற்றைய அம்சம் விவேகம் எனப்படும். இது நல்லதையும் தீயதையும் பிரித்தறியும் ஆற்றல் கொண்டது. எனவே மாணவர்கள் முக்கியமாக விவேகத்தைத் தம்மிடையே வளர்த்துக் கொண்டால் நல்லதொரு சமுதாயத்தை அவர்களால் உருவாக்க முடியும்.

தற்காலத்தில் உலகையே சுருக்கி கைக்குள் கொண்டு வந்து விட்ட தகவல் தொழில் நுட்பம் மூலம் மனிதனின் சிந்தனாசக்தி இல்லாததாகி மனித மூளை வெற்றிடமாகி விடுகின்றது. இதனால் மனிதனின் ஆழ்ந்த சிந்தனை படைப்பாற்றல்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருகி வருகின்றன. இந்தத் தகவல்த் தொழில் நுட்பத்தின் மூலம் நல்லவையும், தீயவையும் மனிதனைச் சென்றடைய வாய்ப்புள்ளது. எனவே நிதமும் மாறிக் கொண்டிருக்கும் இன்றைய உலகில் நல்லவற்றைப் பின்பற்றக் கூடிய அறிவாற்றலை வளர்க்க வேண்டியது அவசியமாகின்றது. அதற்கு நேர்மையாக செயற்பட வைக்கும் ஆற்றல் மிக்க அறிவு எமக்குத் தேவைப்படுகின்றது.

பகவத் கீதையில் பகவான் கூறுகிறார் "புலன்களும் மனமும் ஆசையின் இருப்பிடம், ஆசை உண்மை அறிவை மறைத்து மனிதனை மயக்குகிறது. எனவே முதலில் மனதைக் கட்டுப்படுத்தி அறிவையும் விவேகத்தையும் அழிப்பதாகிய பாவத்தின் வடிவமாகிய இந்த ஆசையை உறுதியாக வென்றுவிடு" எனவே அறிவு அழிவதற்குக் காரணம் ஆசையே, இதனை வென்று அறிவாற்றலை வளர்த்தால் ஆத்ம ஞானம் பிரகாசிக்கும். எமது உடலிலும் மேலானது மனம், மனதிலும் மேலானது அறிவு, இந்த அறிவிலும் மேலானது ஆன்மா. இவ் ஆன்மா ஆத்ம ஞானம் பெறும்போது அதன் ஆளுமையில் மிக உயர்ந்த ஆற்றல்கள் அனைத்தும் வெளிப்பட ஆரம்பிக்கும். இதனால் தன்னலமற்ற அன்பு உருவாகும். இதனால் மனிதன் தன்னை உயர்த்திக் கொள்ள முடியும்.

எனவே மாணவ சமுதாயம் இன்று எதிர்நோக்கும் பல்வேறு சவால்களில் இருந்து விடுபட்டு எதிர்காலத்தில் நற்பண்புள்ள ஒழுக்கமான சமுதாயத்தை உருவாக்க ஆளுமையின் இந்த நான்கு பரிமாணங்களாகிய உடல், மனம், அறிவு, ஆன்மா என்பவற்றைத் தன்னகத்தே வளர்த்துக் கொள்வது இன்றியமையாததாகும். இதன் மூலம் கீழ்ப்படிவுள்ள மாணவர்கள் தொடக்கம், நீதி, நேர்மை, சுயநலமற்ற, சமத்துவமான உயர்ந்த மனிதர்கள் வரை உருவாக முடியும் என்பதில் ஐயமில்லை.

திருமதி.உ.மாதவரூபன்,
ஆசிரியர்.

மனிதனுடைய உள்ளத்தில் ஏழு நிறங்களல்ல எழுநூறு நிறங்கள் உள்ளன.

பிறரின் வாயை அடைப்பவன் முதலில் தன் வாயை கட்ட வேண்டும்.

செய்த தவறை ஏற்பதே தன்மானத்தில் சிகரமாகும்.

மனிதனின் ஆசை எப்போதும் குறைவதில்லை அது மனத்தின் பசி.

மனிதனை விடக் கவிஞன் உயர்ந்தவன் தெய்வம் சாதிக்காததை கவிஞன் சாதிக்கிறான்.

பிறர் உரிமையைப் பறிப்பது எவ்வாறு குற்றமோ அவ்வாறே நாம் நம் உரிமை பறிபோவதையும் பார்த்துக் கொண்டு பேசாமல் இருப்பதும் பெருங்குற்றமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது பார்வையில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை.

இலங்கை கல்வி வரலாற்றில் மாணவர்களின் பெறுபேறுகளை வெளிக்கொணரக் கூடிய பொது பரீட்சைகளில் க.பொ.த.உயர்தரம், க.பொ.த.சாதாரணதரம், தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைகள் காணப்பட்ட போதிலும் ஏனைய இரண்டு பரீட்சைகளையும் விட தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையின் நோக்கமானது சற்று வித்தியாசமானதாக உள்ளது. அதாவது கிராமங்களில் உள்ள வளப்பற்றாக் குறையான பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களில் திறமையானவர்களை இனங்கண்டு அவர்களை வளமான பாடசாலைக்கு அல்லது விரும்பிய ஒரு பாடசாலைக்கு கல்வி பயில்வதற்கு வாய்ப்பளிப்பதற்காகவும் அவர்களின் கல்விச் செலவுக்கு ஒரு உதவித் தொகை பணத்தினை வழங்குவதற்கும் உருவாக்கப்பட்ட பரீட்சையாகும்.

இப்பரீட்சையில் சித்தியடையும் அரச அலுவலர்களின் பிள்ளைகள் வருமான மட்டம் உயர்வாக உள்ள குடும்பங்களின் பிள்ளைகட்கு இவ் உதவித் தொகையினை வழங்க முடியாது என்பது ஒரு நிபந்தனையாக காணப்படுகிறது. இவ்வாறான நிபந்தனைகட்கு மத்தியிலும் சமகாலத்தில் சித்தியடையும் பிள்ளைகளின் பெரும்பாலானவர்கள் அரச உத்தியேகத்தரின் பிள்ளைகளாகவும் வருமான மட்டம் உயர்வானவர்களின் பிள்ளைகளாகவும் காணப்படுகின்றனர். இவர்கள் பெரும் தொகைப் பணத்தினையும் நேரத்தினையும் செலவு செய்து தங்கள் பிள்ளைகளை சித்தியடைய செய்வதன் மூலம் தமது சமூக அந்தஸ்தினை உயர்வாக காட்டுவதற்கும் முயற்சிக்கின்றனர். இதன் காரணமாக சித்தியடையும் மாணவரக்ளின் ஒரு சில பகுதியினர் வளப்பெருக்கம் உள்ளவர்களாகவே காணப்படுகின்றனர். இதன் காரணமாக பரீட்சையின் நோக்கமானது தடம் மாறிச் செல்லும் போக்கே காணப்படுகின்றது.

சிறுவர்கள் உடல், உள ரீதியாக துன்புறுத்தக்கூடாது என்ற சட்டதிட்டங்கள் அமுலில் உள்ள இக்காலகட்டத்தில் தரம் ஐந்து மாணவர்களை உடல் உளரீதியாக பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடியவாறு அனேகமான மாணவர்கள் சித்தியடைய வைப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகவே காணப்படுகின்றது. தரம் ஐந்து மாணவர்களை அவர்களின் பெற்றோர்கள் சராசரியாக ஒரு மனிதன் உறங்க வேண்டிய நேரத்தைவிட குறைவான நேரங்களில் உறங்க வைப்பதும் ஓய்வு, விளையாட்டு நேரங்களை பயன்படுத்த முடியாமல் தடுப்பதும் சமய கலாச்சார நிகழ்வுகளில் பங்குபற்ற முடியாமல் தடுப்பதும் மாணவர்கட்கு மன உளைச்சலை ஏற்படுத்தக் கூடிய விடயமாக காணப்படுகின்றது. அத்துடன் புள்ளியில் வெட்டுப்புள்ளியைவிட புள்ளி குறைவாக எடுத்த மாணவன் சித்த சுவாதீன நிலையை அடையக் கூடிய வாய்ப்புக்கள் காணப்படுவதோடு பெற்றோர்களும் அந்நிலைமைக்கு ஆளாகின்றனர். அத்துடன் சக மாணவர்களுடன் போட்டித்தன்மை ஏற்படக் கூடிய உணர்வுகளை வெளிக்காட்டி ஒன்றுமே அறியாத பிள்ளைகளின் மனதில் குரோத மனப்பாங்கு உருவாவதற்கு சாதகமான சூழலே உருவாகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகளை பொறுத்தவரை நற்பெயர், தரம் ஒன்று மாணவர்களின் அனுமதி போன்றவற்றில் இப்பரீட்சையானது தாக்கம் செலுத்துகின்றது. தனியார் கல்வி நிலையங்கள், பிரத்தியேக வகுப்புக்கள் போன்றவற்றின் மாணவர் எண்ணிக்கையை தீர்மானிப்பதாகவும் இப்பரீட்சை அமைவதோடு சமூகத்தின் சிற்பிகளாகிய ஆசிரியர்களின் மதிப்பிலும் செல்வாக்கு செலுத்துகின்றது. பெற்றோர்கள் தாம் வேலை புரியும் வேலைத்தளங்கள், அலுவலகங்களிலும் போட்டித் தன்மையை ஏற்படுத்தி அது மாணவர்களிடத்திலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. பரீட்சைப் பெறுபேறு வெளியிடும் நாளானது பரபரப்பு ஏற்படும் நாளாகவே காணப்படுகின்றது. இந்நேரத்தில் மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், உடல் உளரீதியாக பாதிக்கப்படுவதுடன் தற்கொலைகளும் நடந்தேற வாய்ப்புக்கள் உள்ளன. வெட்டுப் புள்ளிக்கு மேல் சித்தியடையும் மாணவர்களைப் பாராட்டுவதும் பதாதைகளை காட்சிப்படுத்துவதும் சித்தியடையாத மாணவர்களை புறம்தள்ளி விடுவதும் மாணவர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்துவதாகவே அமைகின்றது. எனவே மாறிவரும் உலகின் சவால்களை எதிர்நோக்கக் கூடிய உலகிற்கு மாணவர்களை தயார்ப்படுத்துவதும் எந்தப் பரீட்சை எந்த நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டதோ அந்த நோக்கத்தை அடைவதற்கு அனைவரும் கைகோர்த்து மாற்றங்களை ஏற்படுத்தி வளமான சமூகத்தை உருவாக்குவோம்.

திரு.பொ.சுகந்தன்,
ஆசிரியர்.

உலகம்
ஒரு நாடகமேடை
ஒவ்வொருவரும்
தம் பங்கை நடிக்கிறார்கள்.

இவர்கள் ஏன் இப்படி?
என்பதைவிட
இவர்கள் இப்படித்தான்
என எண்ணிக்கொள்.

நல்லவர்களோடு நட்பாயிரு நீயும் நல்லவனாவாய்.

கல்லாதவர் செல்வத்திலும் கற்றவர் வறுமை நலம்.

அநீதி இளைப்பவன் அநீதிக்குட்பட்டவனைவிட
அதிகமாக துன்பம் அனுபவிப்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரீர தண்டனையும் (Corporal Punishment) அதன் எதிர்மறை விளைவுகளும்.

இன்றைய கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின்போது பாடசாலை நிர்வாகத்தினை ஓர் ஒழுங்கான பாதையில் கொண்டு செல்லும் நோக்கிலும் தவிர்க்க முடியாத வகையில் மாணவர் உலகம் தண்டனைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்படுகின்றனர். இத்தண்டனையானது உடல் ரீதியானதாகவோ அல்லது உளரீதியானதாகவோ இருப்பினும் அதன் விளைவுகள் ஒரு பிள்ளையினுடைய வாழ்வில் பல்வேறு எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்துவதாக பல்வேறு உளவியல் வல்லுனர்கள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு அமைப்புக்களால் சுட்டிக் காட்டப்படுகின்றது. எனினும் தண்டனை வழங்கல் செயற்பாடானது பல்வேறு சட்டரீதியான பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க நேரிட்டும் கூட இன்றுவரை ஒரு கருவியாக பாடசாலைகளில் பயன்படுத்தப்படுவது கண்கூடு.

மாணவர்களின் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்காக பல்வேறு விதமான தண்டனைகள் வழங்கப்படுகின்றன. பிரம்பால் அடித்தல் (caning), கிள்ளுதல் (pinching), காதுகளை பிடித்திழுத்தல் (pulling ears), முழந்தாழிடச் செய்தல் (kneeling), காதுகளை முறுக்குதல் (twisting ears) போன்ற சரீர ரீதியான தண்டனைகளுடன் உள ரீதியான தண்டனைகளாக மாணவர்களை நிந்தித்து ஏசுதல் (insulting Language), பயமுறுத்துதல் (scare), ஏளனம் செய்தல் (humiliate) போன்றவற்றைக் குறிப்பிடலாம். இத்தகைய தண்டனைகளுக்கு முகம் கொடுக்கும் வளரிளம் பருவப் பிள்ளைகளின் சுய மதிப்பு (Self -esteem), தன் நம்பிக்கை (Self - confidence) குறைவதுடன் ஏனைய மாணவர்களும் இத்தகைய மாணவர்கள் மீது ஒருவித அடக்கு முறையினை கையாள்வதற்கு முற்படுவதாக அறியப்படுகின்றது. வன்முறையினை (Violence) எதிர்கொண்டு வளர்ந்து வருகின்ற மாணவர் சமுதாயம் எதிர்காலத்தில் நிச்சயமாக தாமும் அதனை ஒரு கருவியாக பயன்படுத்த முனைவதாகவும் ஆராய்ச்சிகள் உறுதிப்படுத்துகின்றன.

ஒரு குழந்தையானது தண்டனைக்கு உட்படும்போது அதன் வலி அல்லது வேதனை அதன் ஆழ் மனதில் (unconscious mind) பதிந்து விடுவதாகவும் அது மாணவர்களின் உணர்ச்சி வெளிப்பாட்டில் (emotion) அதிகம் செல்வாக்கு செலுத்துவதாகவும் அறியப்பட்டுள்ளது.

அவ்வாறாயின் தண்டனைகளே இல்லாத கற்பித்தல் சத்தியமானதா? என்ற கேள்வி சம்பந்தப்பட்ட தரப்பினரிடையே எழுவது தவிர்க்க முடியாத ஒன்றுதான். "அடியைப் போல் அண்ணன் தம்பி உதவமாட்டான்" எனும் பழமொழி எம் மத்தியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வேத வாக்காக பயன்படுத்தப்படுவது மறுப்பதற்கில்லை. எனினும் சிறந்த கற்பித்தல் நுட்பங்கள், கற்பித்தல் முறைகள், நவீன கற்பித்தல் சாதனங்கள் என்பவற்றினை பிரயோகித்தலூடாக தண்டனைகளை இயன்றளவு குறைப்பதற்கு முற்படலாம். உதாரணமாக மாணவர் மத்தியில் வெகுமதிகள் வழங்கல் (reward System) ஒரு சிறந்த ஊக்கியாகும். நன்நடத்தையை வெளிப்படுத்தும் மாணவர்களுக்கு Gold Star வழங்கலாம். அதே வேளை கெட்ட நடத்தைகளை வெளிப்படுத்தும் மாணவர்களுக்கு Black star வழங்குவதனூடாக அவர்களையும் Gold star பெறவேண்டும் என்ற உளத்தூண்டலை ஏற்படுத்தலாம். சிறந்த நடத்தையை வெளிப்படுத்தும் மாணவர்களுக்கு சலுகைகள், விட்டுக் கொடுப்புக்களை வழங்குவதுடன், துர்நடத்தை மாணவர்கள் அனுபவிக்கும் சில சலுகைகளை கட்டுப்படுத்துவதனூடாகவும் தூண்டுதலை ஏற்படுத்தலாம். அத்துடன் அன்பின் மூலம் உலகை ஆளலாம் எனும் முதுமொழிக்கு இணங்க மாணவர்களை அன்பின் வழியாகவும் நன்நடத்தைக்கு வழிவகுக்கலாம்.

The institute for health and social policy at Mc Gill University மேற்கொண்ட உலகளாவிய ஆய்வின் பிரகாரம் மாணவர்களிடையே சண்டையிடும் வீதம் உடல் ரீதியான தண்டனை வழங்க தடைவிதிக்கப்பட்டுள்ள நாடுகளில் மிகக் குறைவான நிலையில் உள்ளதாக ஆய்வில் வெளிக்கொணரப்பட்டுள்ளது. எனவே எமது மாணவச் செல்வங்களின் பொன்னான எதிர்காலத்திற்காக எம்மை அர்ப்பணித்து தண்டனை வழங்குவதில் இருந்து இயன்றளவு விலகி இருப்போமாக..

திருமதி. ச.மதனறாஸ்
ஆசிரியர்.

கல்வி அறிவும்,
சுயமரியாதை எண்ணமும்,
பகுத்தறிவுத் தன்மையுமே
தாழ்ந்து கிடக்கும் மக்களை உயர்த்தும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உட்படுத்தற் கல்வி

## அறிமுகம்

அனவருக்கும் கல்வி என்ற எண்ணக்கரு இன்று அனைவரது மனங்களையும் சென்றடைந்ததுடன் அதன் வளர்ச்சியும் துரிதமடைந்துள்ளது எனலாம். பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் கல்வியறிவு இன்றியமையாதது என்பதை சர்வதேசமும் விசேட கல்வித் தேவையுள்ள பிள்ளைகளின் கல்வியில் அக்கறை கொள்ளும் சமூகமும் ஆர்வத்துடன் செயற்பட்டு வருவதுடன் அனைவருக்கும் கல்வி என்ற எண்ணக் கருவை வெற்றிகொள்ள உறுதுணையாக அமைகின்றது.

## உட்படுத்தல் கல்வி என்றால் என்ன?

அனைவருக்கும் கல்வி என்பதன் தார்ப்பரியம் உட்படுத்தல் கல்வியே. விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட பிள்ளைகளை பொதுவான பாடசாலைகளில் பொதுவான வகுப்புக்களில் உட்படுத்தலானது உலகெங்கிலும் அங்கீகரிக்கப்பட்டுள்ள மனித உரிமைகளின் ஓர் அம்சமாக மாறியுள்ளது. அதாவது விசேட கல்வி தேவை உடைய பிள்ளைகள் தாம் வாழும் சூழலில் உள்ள தம்முடைய சகோதரர்கள் தமது சமவயதுக் குழுவினர் கல்வி கற்கின்ற வகுப்பறையில் கற்பதற்கும் சமவயதுக் குழுவினர் பின்பற்றும் கலைத்திட்டம், மதிப்பீடு, கல்வி உரிமைகள், சலுகைகள் ஆகிய அனைத்தையும் பெறுவதற்கான சூழல் அமைக்கப்படலே உட்படுத்தல் கல்வியாகும். அந்த வகையில் எமது நாடு இயலாமை உடையோர் தொடர்பாகவும் உட்படுத்தல் கல்வி தொடர்பாகவும் காணப்படும் சட்டதிட்டங்களுக்கு இணங்கி கைச்சாத்திட்டுள்ளதுடன் தேசிய கல்விக் கொள்கை பின்வரும் விடயங்களை வலியுறுத்துகின்றது.

* விசேட கல்வித் தேவையுள்ளோரை பொதுச் சமுதாயத்தோடு சமூகமாக்கல்.
* சாதாரண வளர்ச்சிக்கு அவர்களை தயார் செய்தல்.
* உறுதியுடனும், தன்னம்பிக்கையுடனும் வாழ்க்கையில் சவால்களை எதிர்கொள்ளச் செய்தல்.

## உட்படுத்தற் கல்விக்கான வரைவிலக்கணம்

இயலாமையுள்ள பிள்ளைகள் தமது சகோதர சகோதரிகளுடன் அயலவர்களுடன்/ நண்பர்களுடன் தமது வீட்டிற்கு அருகில் உள்ள பாடசாலையில் கல்வி கற்றலாகும்.

தனது சொந்த ஊரில் உள்ள பாடசாலையில் தன் நண்பர்களுடன் ஒன்றாகக் கற்பதோடு பாடசாலைக்கு வெளியேயும் நண்பர்களை உருவாக்கி கொள்ளும் செயற்பாடு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயலாமையுள்ளவர்களுக்கு அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடிய வழிகாட்டல்களையும், மகிழ்ச்சிகரமான அம்சங்களையும் தொழில் மற்றும் கல்வி நடவடிக்கைகளயைும் பூரணமாக பெற்றுக்கொடுப்பது உட்படுத்தற் கல்வியாகும்.

உட்படுத்தற் கல்வி எனப்படுவது பிள்ளைகளிடையே காணப்படும் இயலாமைகள் திறமைகள் என்பவற்றை கவனத்திற் கொண்டு சகல பிள்ளைகளுக்கும் பாடசாலை சமூகத்தில் பங்காளியாக வாய்ப்பளிப்பதோடு இயலாமையுள்ள பிள்ளைகளும் ஏனைய பிள்ளைகளைப் போல் ஆசிரிய குழாமிற்கும் பாடசாலை சமூகத்திற்கும் சொந்தமானவர் என்ற உணர்வு திட்டம் வகுத்தலாகும்.

**உட்படுத்தற் கல்வியின் அவசியம்:-**

- எல்லாக் குழந்தைகளும் ஒன்று சேர்ந்து கற்பதற்கு உரிமை உண்டு.
- இயலாமைகள் கற்றல் சாரந்த பிரச்சினைகள் காரணமாக அவர்களை தனிமைப்படுத்தப்படக்கூடாது.
- விசேட பாடசாலை ஊடாக பிள்ளைகள் தனிமைப்படுத்தப்படல் இரத்து செய்யப்படல் வேண்டும்.
- பிள்ளைகளை கல்வியில் வேறுபடுத்துவது சட்டத்தால் அனுமதிக்கப்படவில்லை.
- பிள்ளைகள் ஒருவரிடமிருந்து உதவியைப் பெற்றுக்கொள்வதற்கு உதவ வேண்டுமே தவிர ஒருவரிடம் இருந்து மற்றொருவரைப் பாதுகாப்பது தேவையற்றதாகும்.

**உட்படுத்தல் கல்வியை நடைமுறைப்படுத்துவதற்கு பொறுப்பானவர்கள்**

பாடசாலை அதிபர்
வகுப்பாசிரியர்கள்
பெற்றோர்
விசேட கல்வி ஆசிரியர்
விசேட கல்வி உதவிப் பணிப்பாளர்
ஆரம்பக்கல்வி உதவிப் பணிப்பாளர்
வலயக் கல்வி பணிப்பாளர்.

**உட்படுத்தற் கல்வியை நடைமுறைப்படுத்துவதில் காணப்படும் பிரச்சினைகள்**

இயலாமையுள்ள பிள்ளைகளுக்கு பாடசாலைக் கல்வியைப் பெற்றுக் கொடுக்க முடியாமை.

பாடசாலை அனுமதி மறுக்கப்படல்.

சமூக நடவடிக்கைகளில் இருந்து ஒதுக்கி நிறுவனமயப்படுத்தல்.
சமூகத்தால் நிராகரிக்கப்படல்.
வேலை வாய்ப்பின்னை.
நிரந்தரமாக பிறரில் தங்கி வாழ நேரிடல்.

திருமதி.ட.மங்களேஸ்வரன்.
விசேட கல்வி.
உதவி ஆசிரியர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருஷ்ண பக்தி
## "ஓம் ஸ்ரீராம ஜெயம்"

மனித வாழ்வு, மனம் போனபடி வாழ்வதற்காக அல்ல. இறைவனை அறிவதற்கே, கிருஷ்ணரே இறைவன் அவரை பக்தித் தொண்டின் மூலம் அறிய இயலும். குழப்பமும், சண்டைகளும் நிறைந்த தற்போதைய கலியுகத்தில் பகவான் சைதன்ய மஹா பிரபுவால் கற்பிக்கப்பட்ட பக்தி முறை மிகவும் அதிகார பூர்வமானதாக விளங்குகிறது.

ஸ்ரீகிருஷ்ணரே தனது பக்தரின் வடிவில் ஸ்ரீ சைதன்யராக வந்தார். அவர் தன்னுணர்வை அடைவதற்கான மிக மிக எளிமையான முறையினைக் கற்றுக் கொடுத்தார்.

"ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண
கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே"

என்னும் ஹரே கிருஷ்ண மறை மந்திரத்தை உச்சரிப்பதே அந்த எளிய வழிமுறையாகும்.

கிருஷ்ண உணர்வின் எளிய செயல்களின் மூலம், வயது, ஜாதி, இனம், பால் அல்லது கல்வி போன்றவற்றின் பாதிப்பு ஏதுமின்றி யார் வேண்டுமானாலும் தங்களது வாழ்வை நல்வழிப்படுத்தி, இறைவனுடனான தெய்வீக அன்பை சுலபமாக விருத்தி செய்து கொடூரமான பிறப்பு, இறப்பு சுழற்சியிலிருந்து விடுபட்டு இறைவனின் திருநாட்டிற்குள் நுழையலாம். இந்த அற்புதமான வாய்ப்பினை ஸ்ரீ சைதன்ய மஹா பிரபுவின் ஸங்கீர்த்தன இயக்கமானது உலகம் முழுவதிலும் உள்ள ஒவ்வொருவருக்கும் வழங்கி வருகின்றது. பகவான் சைதன்யர் கூறுகிறார் "ஜீவன்களே விழித்துக் கொள்ளுங்கள்! இன்னும் எவ்வளவு காலம் தான் அறியாமையெனும் பிசாசின் மடியில் உறங்கிக் கொண்டிருப்பீர்கள்! ஜடவுலக வாழ்க்கை என்னும் உங்களது நோய் ஒழிப்பதற்காக நான் உங்களுக்கு ஒரு மருந்தைக் கொண்டு வந்துள்ளேன். பகவானின் திருநாமங்களை உச்சரிப்பதே அந்த மருந்தாகும். இந்த ஹரே கிருஷ்ண மந்திரத்தினை பிரார்த்தனையுடன் ஏற்றுக் கொள்ளுங்கள்" என்றார்.

நாம் இந்த உடல்களல்ல, ஆன்மீக ஆத்மாக்கள். இந்த உடல் தற்காலிகமானது, ஆனால் ஒவ்வோர் உடலினுள்ளும் வசிக்கும் ஜீவாத்மா நிரந்தரமானது. ஒவ்வோர் ஆத்மாவிற்கும் பரமாத்மாவான முழுமுதற் கடவுள் பகவான் கிருஷ்ணருடன் நித்தியமான, உணர்ச்சி பூர்வமான, ஆனந்தமயமான தொடர்பு உண்டு. நமது உண்மையான வாழ்க்கை இந்த ஜடவுலகில் இல்லை. மாறாக கிருஷ்ணருடன் ஆன்மீக உலகிலேயே உள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருஷ்ணர் ஆன்மீக உலகத்தில் நேரடியாக வீற்றுள்ளார். அங்கு அவர் எண்ணற்ற அன்புத் தொண்டர்களால் சூழப்பட்டிருக்கிறார். அவர்கள் அனைவரும் கிருஷ்ணரைத் திருப்திப்படுத்துவதை மட்டுமே நோக்கமாகக் கொண்ட பக்குவமான தூய பக்தர்கள் ஜட ஆசைகள், காமம், பேராசை, மற்றும் பொறாமையிலிருந்து அவர்கள் முழுவதுமாக விடுபட்டவர்கள்.

ஆன்மீக உலகிலுள்ள நிலம், மரங்கள், இல்லங்கள், நீர் என அனைத்தும் உணர்வும் ஆனந்தமும் உடையவை. அங்கே துன்பம் என்பது கிடையாது. மகிழ்ச்சி மட்டுமே உண்டு. மகிழ்ச்சி இந்த ஜடவுலகின் பொய்யான இன்பத்தைப் போன்றதல்ல. அது கிருஷ்ணருடனான தொடர்பினால் ஏற்படும் அர்த்தமுள்ள ஆன்மீகப் பேரானந்தம்.

கிருஷ்ணர் தனது பக்தர்களுடன் பல்வேறு விதமான கலைகளை நித்தியமாகப் புரிகிறார். அங்குள்ள வாழ்க்கை முழுமுதற் கடவுளுடன் பாடி, ஆடி, விளையாடி உண்டு மகிழும் ஒரு நித்திய திருவிழா.

மூடத்தனத்தினால் கிருஷ்ணருடன் பகை கொண்ட ஆத்மாக்கள் ஜடவுலகில் வைக்கப்படுகின்றனர். இவ்வுலகம் தண்டனை கொடுத்து சீர் திருத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட சிறைச்சாலையைப் போன்றதாகும். இங்குள்ள கட்டுண்ட ஆத்மாக்கள் 84,00000 வகையான உயிரினங்களில் பிறப்பு இறப்பு என்னும் சுழற்சியினால் துன்புறுகின்றனர். மாயையினால் தாக்கப்பட்டு அகங்காரத்தால் மூடர்களாகிய அவர்கள் மலமுண்ணும் பன்றியின் உடலில் உள்ள போது கூட மகிழ்ச்சியாக இருப்பதாக நினைத்துக் கொள்கிறார்கள். இவ்வுலகிலுள்ள மிகவுயர்ந்த லோகத்திலிருந்து மிகத்தாழ்ந்த லோகம் வரை அனைத்தும் துன்பப் பெருங்கடலாகவே விளங்குகின்றது.

ஜடவுலகத்தில் நாம் அழிந்து போவதை கிருஷ்ணர் விரும்பாததால் அவருடன் வந்து ஆன்மீக உலகத்தில் நித்தியமாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்ந்திடுமாறு அவர் நம்மை அழைக்கிறார். அறிவாளிகளாக இருப்போர் கிருஷ்ணர் பகவத் கீதையில் கூறுவதை உள்ளது உள்ளபடி கேட்டு, பிறப்பு இறப்புத் தொடர்ச்சியிலிருந்து விடுபடுவதற்குத் தீர்வு காண விளைவார்கள். அவர்கள் உறங்கிய நிலையிலுள்ள தங்களது கிருஷ்ண உணர்வைத் தட்டி எழுப்ப, பக்தித் தொண்டை மேற்கொண்டு மீண்டும் இறைவனை அடைவார்கள்.

தற்போதைய கலி யுகத்தில், கிருஷ்ண உணர்வானது கிருஷ்ணராலேயே தனது மிக மிக கருணை வாய்ந்த அவதாரமான ஸ்ரீசைதன்ய மஹாபிரபுவின் மூலம் கற்பிக்கப்பட்டது. இறைவனின் திருநாமங்களை பலரும் ஒன்றாக இணைந்து கீர்த்தனம் செய்யக் கூடிய சங்கீர்த்தனம் இறைவனை உணர்வதற்காக மிகவும் எளிமையான மகிழ்ச்சிகரமான வழியாகும். கேவல அனந்த - கண்ட, அதாவது ஆனந்தத்தை மட்டும் கொண்டவழி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருஷ்ண உணர்வானது ஆர்வமற்ற, வறண்ட சடங்குகளைக் கொண்ட மதமன்று. திருநாமத்தைப் பாடுதல், மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆடுதல், கிருஷ்ண பிரசாதம் ஏற்றல், உயர்ந்த பக்தர்களுடன் பழகுதல். முழு முதற் கடவுளுக்கு அவரது விக்ரஹ வடிவில் சேவை புரிதல், விக்ரஹத்தின் கண்கொள்ளா அழகினைப் பார்த்து மகிழ்தல், மிகவுயர்ந்த தத்துவங்களை அறிந்து கொள்ளுதல், கிருஷ்ணருடைய திறன்களையும் லீலைகளையும் கேட்டல் அவரது புகழைப் பிரச்சாரம் செய்தல் என்று பலதரப்பட்ட செயல்களைக் கொண்டதே கிருஷ்ண உணர்வு. ஆன்மீக உலகின் மனோ நிலையே கிருஷ்ண உணர்வு பெருகிக் கொண்டே போகும் மகிழ்ச்சி நிறைந்த இந்த வாழ்வு. இறுதியாக கிருஷ்ணரை நேரில் பார்த்து உரையாடி மகிழும் நிலைக்கு நம்மை அழைத்துச் செல்லும்.

வாழ்வில் பூரணத்துவம் அடைய முயன்று பரிசோதிக்கப்பட்டு நிருபனம் செய்யப்பட்ட முறையே கிருஷ்ண உணர்வு வரலாற்றில் பலர் கிருஷ்ண உணர்வால் தூயவர்களாகி கிருஷ்ணரின் பாத கமலங்களை அடைந்துள்ளனர்.

பகவான் சைதன்யர் தனது ஸங்கீர்த்தன இயக்கத்தில் இணையும்படி நமக்கு அழைப்பு விடுப்பதன் எல்லையற்ற கருணையை ஆன்மீக அறிவில் எழுச்சி பெற்ற நபர்களால் உணர முடியும். அத்தகய நபர்கள் கிருஷ்ண உணர்வை முழு அக்கறையுடன் ஏற்று, இப்பிறவியை (ஜடவுலகில்) தமது இறுதிப் பிறவியாக ஆக்க வேண்டும் என்பதில் உறுதியுடன் இருப்பர்.

சமூக அல்லது தனி மனிதனின் பார்வையில் பார்த்தாலும் கிருஷ்ண உணர்வு அனைவருக்கும் நன்மை தரும் அற்புதமான ஒன்றாகும். பக்தித் தொண்டை பயிற்சி செய்வதால் பக்தர்கள் அனைத்து நற்குணங்களையும் அடைகிறார்கள். அன்பானவர்களாக, சகிப்புத் தன்மை கொண்டவர்களாக, பணிவானவர்களாக, தன்னடக்கம் மிக்கவர்களாக, சாந்தமானவர்களாக அனைவருக்கும் இனியவர்களாக பக்தர்கள் மாறுகின்றனர். பொருளாதாரம், சமூகம், அரசியல், மனோவியல், தத்துவம், மற்றும் மதம் சார்பான அனைத்து பிரச்சனைகளுக்கும் கூட கிருஷ்ண உணர்வு தீர்வளிக்கின்றது. எவ்வாறு தீர்வு கொடுக்கின்றது என்னும் தகவல்கள் ஸ்ரீ பிரபுபாதரின் புத்தகங்களில் மிகவும் அருமையாக விளக்கப்பட்டுள்ளது.
எனவே சிந்தனையுள்ள ஒவ்வொரு மனிதனும் கிருஷ்ண உணர்வை இதயபூர்வமாகவும் ஆத்மார்த்தமாகவும் உடனடியாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

"எல்லாவிதமான தர்மங்களையும் துறந்து, என்னிடம் மட்டுமே சரணடைவாயாக, உன்னை எல்லா பாவ விளைவுகளிலிருந்தும் நான் விடுவிக்கின்றேன், பயப்படாதே" (பகவத்கீதை 18.66) கிருஷ்ணரிடம் முழுமையாக சரணடைவதே உண்மையான தர்மத்தின் குறிக்கோளாகும்.

கிருஷ்ணரைப் பற்றிய தவறான கருத்துக்களைப் பரப்புவோர் பார்ப்பதற்கு நல்லவர்களாகவும் தெய்வீகமானவர்களாகவும் தோன்றலாம். ஆனால் கிருஷ்ணரை முழுமுதற் கடவுளாகவும் எல்லாகாரணங்களுக்கும் மூல காரணமாகவும் ஏற்று,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரிடம் சரணடையுங்கள் என்று அவர்களிடம் கூறினால், அதனை முற்றிலும் மறுக்கின்றனர். அதற்கு நபர்களைப் பற்றி கிருஷ்ணர் பகத் கீதையில் (7.15) குறிப்பிடுவது யாதெனில், "சற்றும் அறிவற்ற மூடர்களும், மனிதரில் கடை நிலையோரும், மாயையால் அறிவு கவரப்பட்டவர்களும் அசுரரின் நாத்திகத் தன்மையை ஏற்றவர்களுமான துஷ்டர்கள் என்னிடம் சரணடைவதில்லை".

போலி ஆன்மீகவாதிகளில் மற்றொரு பிரிவினர் மருத்துவ மனை திறத்தல், பள்ளிகளைத் திறத்தல், ஏழைகளுக்கு உணவளித்தல் போன்ற உலகளாவிய பொது நலத் தொண்டில் ஈடுபடுபவர்கள். ஆனால் அத்தகு பொது நலத்தொண்டுகளில் இறுதி நன்மை ஏதும் இல்லை என்பதை உண்மையான சாதுக்கள் அறிவர். ஏனெனில் ஒருவன் கிருஷ்ண உணர்வின் அறிவொளியைப் பெறாவிடில், பிறப்பு, இறப்பு எனும் கொடூரமான சுழற்சியில் அவன் உளன்று கொண்டே இருக்க வேண்டும். அதனால் ஏற்படும் துன்பங்களை தொடர்ந்து அனுபவிக்க வேண்டும். எனவே ஒரு சாதுவின் உண்மையான பணி மக்களை கிருஷ்ண உணர்விற்குக் கொண்டு வருவதே. யாரெல்லாம் சமுதாயத் தொண்டுகளை ஆன்மீகத் தொண்டுடன் சமப்படுத்துகிறார்களோ, அவர்கள் மற்றவர்களுக்கு நன்மை செய்வதாகக் கூறி உண்மையில் ஏமாற்றி வருகிறார்கள்.

"பௌதீக இலாபத்திற்கான ஆசைகள், தத்துவக் கற்பனைகள் மற்றும் புண்ணிய காரியங்களால் பெறப்படும் நன்மைகளைத் துறந்து முழுமுதற் கடவுளான கிருஷ்ணருக்கு அனுகூலமான விதத்தில் தெய்வீகத் திருத்தொண்டு புரிந்திட வேண்டும். அதுவே தூய பக்தித் தொண்டு என்று அழைக்கப்படுகின்றது."(பக்தி ரஸாம்ருத சிந்து 1.1.11)

கிருஷ்ணரால் சக்தி அளிக்கப்படாமல் மக்களின் மனதில் கிருஷ்ண பக்தியை ஊட்ட எவராலும் இயலாது என்பதை சைதன்ய சரிதாம்ருதம் உறுதி செய்கிறது. சிறந்த வைஷ்ணவ ஆச்சாரியரான ஸ்ரீல பக்திவினோத தாகூர் "அகிலமெங்கும் கிருஷ்ண பக்தியைப் பிரச்சாரம் செய்ய வெகுவிரைவில் ஒரு மஹாபுருஷர் தோன்றுவார்" என்று முன்னுரைத்தார். அந்த மஹாபுருஷர் தெய்வத்திரு அ.ச.பக்தி வேதாந்த சுவாமி பிரபுபாதரே என்பது தெளிவு.

"தூய்மை, பக்தியின் ஆழம் மக்களிடம் கிருஷ்ண பக்தியை கொண்டு செல்வதற்கான திறன் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒருவர் உண்மையான வைஷ்ணவர் என்பதை அறியலாம்" என்று பக்திவினோத தாகூர் மேலும் கூறியுள்ளார். கிருஷ்ணரை மறந்து வாழ்வதே ஜடவுலக வாழ்வின் அடிப்படைக் கொள்கையாக இருப்பதால் வேதப் பண்பாட்டைப் பின்பற்றும் நல்லோர்களில் கூட யாரேனும் ஒருவரை கிருஷ்ணருக்கான தூய பக்தித் தொண்டின் தளத்திற்கு அழைத்து வருதல் கடினம். ஆனால் ஸ்ரீல பிரபுபாதரோ சற்றும் தகுதியற்ற புலனின்பத்தில் மூழ்கிய ஆயிரக்கணக்கான மேற்கத்திய இளைஞர்களுக்கு கிருஷ்ண பக்தியை வழங்கினார். அந்த அளவிற்கு அவர் கிருஷ்ணரால் சக்தியளிக்கப்பட்டிருந்தார். ஸ்ரீல பிரபு பாதரின் ஈடு இணையற்ற உன்னதச் செயலை யாராலும் முழுமையாக அறிந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ள இயலாது. மாமிசம் உண்ணுதல், தகாத பாலுறவு, சூதாட்டம், போதைப் பழக்கம் ஆகியவற்றை நன்கு ஆமோதிக்கும் சமூகத்தில் வளர்ந்த வேதப் பண்பாட்டிலிருந்து முற்றிலும் விலகிய, சாதுவை எவ்வாறு வரவேற்க வேண்டும் என்பது குறித்து எந்த அறிவும் இல்லாத மக்களிடையே ஸ்ரீல பிரபு பாதர் தனியாகச் சென்றார். ஆன்மீக வாழ்க்கைக்கு அறவே தகுதியற்றவர்களாக இருந்தவர்கள் அம்மக்கள்.

அம்மக்களுக்கு மத்தியில் சென்றது மட்டுமின்றி, அவர்களுக்குப் படிப்படியாக பயிற்சி கொடுத்து இன்று அவர்களில் பலரும் கிருஷ்ண பக்தியை மற்றவர்களுக்குப் புகட்ட வல்லவர்களாக, முதல்தர வைஷ்ணவர்களாக பிரச்சாரகர்களாக எங்கும் எவ்விடத்தும் ஏற்றுக் கொள்ளப்படும் அளவிற்கு வழி நடத்தியுள்ளார் ஸ்ரீல பிரபுபாதர்.

தீவிரமான பக்தர்கள் என்றும் ஸ்ரீல பிரபுபாதரை நேர்மையுடன் பின்பற்றுவோர் என்றும் கூறிக்கொள்ள விரும்புவோருக்கு அவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய சில இன்றியமையாத அறிவுரைகளை ஸ்ரீல பிரபுபாதர் அளித்துள்ளார். உதாரணமாக காலை நான்கு மணிக்கு விழித்தல், மங்கள ஆரத்தியில் கலந்து கொள்ளுதல், குறைந்தது 16 மாலைகள் மஹா மந்திரத்தை உச்சரித்தல் நான்கு கட்டுப்பாட்டு விதிகளை சிறிதளவும் பிறழாமல் பின்பற்றுதல் ஆகியவற்றை தீக்ஷை பெற்ற பக்தர்களுக்கு ஸ்ரீல பிரபுபாதர் மிகவும் வலியுறுத்தியுள்ளார்.

ஒவ்வொரு தீவிரமான கிருஷ்ண பக்தரும் ஹரே கிருஷ்ண மஹா மந்திரத்தை ஜபித்தல் அவசியம். நாம் பல பணிகளில் மும்முரமாக இருந்தாலும் ஹரே கிருஷ்ண ஜபம் செய்வதற்காக தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்குதல் அவசியம்.

ஹரியின் திருநாமங்களைச் சொல்வதே கலியுகத்திற்கான யுக தர்மமாகும் யுக தர்மம் என்றால், அந்த குறிப்பிட்ட யுகத்திற்கென்று கொடுக்கப்பட்டுள்ள ஆன்மீக வழிமுறை என்று பொருள். நாம உச்சாடனத்தின் பெருமைகளை எவ்வளவு சொன்னாலும் அது மிகையாகாது. இத் திருநாமங்களை எவ்வளவு இயலுமோ அந்த அளவிற்கு ஒவ்வொருவரும் உச்சரிக்க வேண்டும்.

உச்சரிப்பதில் இரண்டு வகை (1) மிருதங்கங்கள், கரதாளங்களுடன் இணைந்து சப்தமாக உச்சரித்தல். இது கீர்த்தனம் எனப்படுகிறது. (2) மிகவும் மென்மையாகத் தனக்கு மட்டுமே கேட்கக் கூடிய வகையில் உச்சரித்தல். இது ஜபம் எனப்படுகிறது.

"கிருஷ்ணரே, கிருஷ்ணரின் சக்தியே தங்களது திருத்தொண்டில் என்னை ஈடுபடுத்துங்கள்" என்று வேண்டுவதெ இதன் பொருளாகும். ஹரே என்பது கிருஷ்ணரின் அந்தரங்க சக்தியான ஹராவைக் (ஸ்ரீமதி ராதாராணியைக் ) குறிக்கும். இன்பத்தின் உறைவிடமும் எல்லாரையும் கவரக்கூடியவருமான முழுமுதற் கடவுளின் வெவ்வேறு முக்கியமான நாமங்களே கிருஷ்ண மற்றும் ராம நாமங்களாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"துளசி எல்லா விதத்திலும் மங்களகரமானது. துளசியை காண்பதாலும், தொடுவதாலும், துளசியிடம் பிரார்த்தனை செய்வதாலும் துளசியின் முன்பாக நமஸ்கரிப்பதாலும் துளசியைப் பற்றிக் கேட்பதாலும் துளசியை வளர்ப்பதாலும் எங்கும் எப்பொழுதும் மங்களமுண்டாகும். மேற்கூறிய வகையில் துளசியை வழிபடும் எவரும் வைகுண்ட லோகத்தில் நித்யவாஸம் செய்வார்" (ஸ்கந்தபுராணம்)

பக்தித் தொண்டில் துளசியை வழிபடுதல் மிகவும் அவசியம். துளசி கிருஷ்ணருக்கு மிகவும் பிரியமான செடி அவருக்கு அவளது இலைகளும், மொட்டுகளும் மிகவும் பிரியமானவை. எனவே பக்தர்கள் ஒன்று அல்லது இரண்டு துளசிச் செடிகளை இல்லத்தில் வைத்து தினமும் நீர் விட்டு, நமஸ்கரித்து கவனமாகப் பார்த்துக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும். எங்கெல்லாம் துளசி நன்றாக வளர்கிறதோ, பக்தியும் நன்றாக வளர்ச்சி பெறும்.

பிரசாதம் கர்மத்திலிருந்து விடுபட்டது மட்டுமன்றி புனிதப்படுத்துவதும் கூட. ஏனெனில் பிரசாதம் கிருஷ்ண உணர்வின் நெறிகளைப் பின்பற்றும் பக்தர்களால் அன்புடன் தயாரிக்கப்பட்டு கிருஷ்ணருக்கு நைவேத்யம் செய்யப்படுகிறது. கிருஷ்ண பக்தியில் விரைவான முன்னேற்றம் காண உணவு விஷயத்தில் கண்டிப்புடன் இருத்தல் அவசியம். கிருஷ்ண பிரசாதம் மட்டுமே உண்ணும் வகையில் நமது வாழ்வை மாற்றி அமைத்தலே சிறந்த உபாயம்.

"ஓம் ஸ்ரீராம ஜெயம்"

செல்வி.ஐ.நிர்மலா
ஆசிரியர்

கடலில் பெய்யும் மழை பயனற்றது.
பகலில் எரியும் தீபம் பயனற்றது
வசதி உள்ளவனுக்கு கொடுக்கும் பரிசு பயனற்றது
நோய் உள்ளவனுக்கு கொடுக்கும் அறுசுவை உணவு பயனற்றது
அதுபோல் முட்டாளுக்கு கூறும் அறிவுரையும் பயனற்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெசியா ( அபிசேகம் செய்யப்பட்டவர்)

➤ மெசியா தாவீது வழி மரபில் இருந்து வருவார்.
➤ அவரது அரசு முடிவில்லாத அரசு
➤ அந்த அரசு எல்லா தீமைகளில் இருந்தும் விடுதலையைப் பெறும் அரசாகும்.

மெசியா என்ற மனநிலை "மசியான்" என்ற எபிரேய மொழியில் இருந்து எடுக்கப்பட்டதாகும். அதன் பொருள் "அபிஷேகம்" செய்யப்பட்டவராகும். கிரேக்க மொழியில் 'கிறிஸ்டோஸ்'' என்று கூறப்படுவதும் இச் சொல்லே ஆகும். இஸ்ரேயலில் "மசியான்" என்பது எருசலேமின் அரசரையாகும். அக்காலத்தில் அரசர்களை அபிஷேகம் செய்யும்போது யாவேயினால் அபிஷேகம் செய்யப்பட்டவர்கள் என்று அறிமுகப்படுத்தப்பட்டனர்.

## எசாயா 7: 1-17 இம்மானுவேல் அடையாளம்

இப்பகுதிக்கு வரலாற்றுப் பின்னணி உண்டு. கி.மு.734- 732க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் தமஸ்குவின் அரசரான ரெசினும், வட அரசின் அரசரான பெகாவும், அசிரியாவின் பேரரசனான டிக்லத் பிலேசரின் முறையற்ற வரி வசூலிப்பில் இருந்து மக்களை விடுவிப்பதற்கு ஒன்று பட்டாலும் தென்னரசில் உள்ள ஆகாஸ் மன்னனின் உதவியின்றி அவ்வாறு செய்ய முடியாது என்பதை அறிந்த அவரிடம் உதவி கோரினர்.

ஆனால் ஆகாஸ் மன்னன் அவர்களுக்கு உதவி செய்யாது அசீரிய மன்னனுடன் சேர்ந்தான். அப்போது ரெசின், பெமா, டிக்லத் பிலேசர் மன்னர்கள் யூதேயா மன்னனுடன் போர் தொடுத்து ஆகாஸ் மன்னனை தோல்வியுறச் செய்தார்கள். இப்பின்னணியின்படி "இம்மானுவேல்" அடையாளம் பற்றிய எசாயா இறைவாக்கினரது கூற்றுக்கான காரணம், நாத்தானினால் தாவீதுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதியை ஆகாஸ் மன்னனுக்கு நினைவுறுத்தி "சிங்காசனம்" தாவீது வழி மரபினருக்கு உரியது என கூறுவதற்காகவாகும்.

"இதோ கருவுற்று இருக்கும் அந்த இளம் பெண் ஒரு மகவை பெற்றெடுப்பார். அக்குழந்தைக்கு "இம்மானுவேல்" என்ற பெயரிடுவார்" (எசாயா 7:14)

இம்மானுவேல் = இம்மானு + எல்
நம்மோடு + கடவுள்

இந்த இம்மானுவேல் என்ற அடையாளத்தின் வழியாக காட்டப்படுவது யாதெனில் கடவுள் நம்மை விட்டு விலகி போய்விட்டாரா என எண்ணி நம்பிக்கை இழந்த மக்கள் மத்தியில் இறைவன் பிரசன்னமாக இருந்து செயல்படுத்துவதற்கு, மக்களை வெற்றி, மகிழ்ச்சி நோக்கி கொண்டு சென்று சமாதானத்தை அளிக்க வருவார் என்பதை உணர்த்துவதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது விண்ணக அரசு மலருகின்ற or மெசியாவின் வருகையுடன் விண்ணரசு இங்கு மலருவதை உணர்த்துகின்றது. அவ்வாறு மலருவதற்கான சில படிமுறைகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. தீமையை விட்டு நன்மையை தெரிவு செய்யும் செயற்பாடு ஏற்பட வேண்டும் என்றும் அவ்வாறு செய்யும் போது தேனும், பாலும் உண்ணும் சௌபாக்கியம் பெறவும் அதாவது சமாதானத்தின் அரசு மலரச் செய்யவும் முடியும் என கூறப்படுகின்றது.

எதிர்பார்ப்பை இழந்து துயரமுற்று இருந்த மக்களுக்கு இறைவாக்கினர்கள் நற்செய்தி வழியாக வலு ஊட்டுகின்றனர். எமக்கு ஒரு குழந்தை பிறந்துள்ளது. இக்குழந்தை மெசியா அரச மகிமைக்கு உட்படுத்தப்படுவது இதன் கருத்தாய் அமைகின்றது. அக் குழந்தை ஞானத்தில் முழுமை பெற்றதாக காணப்படுவர். அதாவது அவர் மனித உருவெடுத்த இறைஞானம் எனவும் அவருக்கு மனித ஆலோசகர் தேவையில்லை என அவரில் உள்ள இறையூக்க இயல்பு விளக்கப்பட்டுள்ளது. அத்துடன் அவர் வியத்தகு ஆலோசகராகவும், வலிமைமிகு இறைவனாகவும் காணப்படுவார். அவரது காலத்தில் அரசுக்கும் மக்களுக்கும் அமைதி ஏற்படுவதோடு இணக்கமும், மகிழ்ச்சியும் காணப்படும். இவ்வாறு உதயமாகும் அரசில் இறைவனின் ஆவி பொழியப்படும் எனவும் அதனால் ஏற்படும் பிரதிபலன் இறைவனின் படைப்பு, மீட்பு செயற்பாடு ஆகியன தூய ஆவியினால் உயிரூட்டம் பெறும்.

செல்வி. பா.மேரி கோல்டினி
(R.C)
உதவி ஆசிரியர்.

எல்லோரையும் நேசிப்பது சிரமம் ஆனால் அன்பாகப் பழகிக் கொள்ளுங்கள்.

வாழ்க்கை என்பது குறைவான தகவல்களை வைத்துக்கொண்டு சரியான முடிவுக்கு வரும் ஒரு கலை.

நம்மிடம் பெரிய தவறுகள் இல்லை என குறிப்பிடும்போது சிறிய தவறுகள் ஒப்புக் கொள்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் ஒருவர் பெற்றுக் கொள்ளக் கூடிய லீவுகள்

## 01. அரைநாள் லீவு

ஆசிரியர் அரைநாள் லீவு பெறுவதாயின் குறைந்தது பாடசாலை நடைபெறும் வேலை மணித்தியாலங்களின் அரைப்பகுதி அல்லது 2 1/2 மணித்தியாலங்கள் என்பவற்றில் எது கூடியதோ அந்தளவு நேரம் கடமையாற்ற வேண்டும். பாடசாலை தொடங்கும் நேரத்திலிருந்து அரைமணித்தியாலங்களுக்குள் மாதத்திற்கு இரண்டு தடவை தாமதமாக வரலாம். இதற்கு அடுத்ததாக வரும் 3 தாமதங்களுக்கு ஒரு நாள் லீவு வழங்க வேண்டும். பாடசாலை ஆரம்பமாகி 1/2 மணித்தியாலத்திற்குப் பின் வருகை தரும் ஒவ்வொரு சந்தர்ப்பமும் 1/2 நாள் லீவாக கொள்ளப்படும்.

## 02. குறுகியகால லீவு

ஆசிரியர் தனது கடமை நேரத்தினுள் ஒரு மணி நேரம் மாதத்திற்கு இரண்டு தடவை குறுகிய லீவைப் பெறமுடியும்.

## 03. பிணி லீவு

இவ்லீவு வருடத்தில் 20 நாட்கள் பெற்றுக் கொள்ளலாம். தனது நோய் காரணமாக 20 நாட்களுக்கு மேல்லீவில் இருப்பாராயின் மருத்துவம் 170 / ஆயுர் வேதம் 44 இல் மருத்துவ அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

## 04. ஓய்வு லீவு

ஆசிரியர்களை பொறுத்தவரை பாடசாலை விடுமுறை நாட்களை ஓய்வு லீவாகக் கொள்ளப்படும்.

## 05. அமைய லீவு

அமைய லீவு வெறுமனே அமைய ரீதியான விடயங்களுக்கு மட்டும் 21 நாட்களை பெற்றுக்கொள்ள முடியும்.

## 06. விபத்துலீவு

சட்டம், திணைக்கள விதிகளை, ஒழுக்க விதிகளை மாறாது அலுவலகத்திற்கு கடமைக்கு வரும்போது, அலுவலகத்தில் கடமையாற்றும்போது, அலுவலகத்தில் இருந்து வீடு திரும்பும்போது விபத்து ஏற்பட்டிருப்பின் மருத்துவசபையின் சிபாரிசுக்கமைய அமைச்சின் செயலாளரின் அனுமதியுடன் 1 வருடம் முழுச்சம்பளத்துடனும் தேவை ஏற்படின் மீண்டும் மருத்துவசபையின் சிபாரிசுக்கமைய 6 மாதம் அரைச்சம்பளத்துடனும் விபத்து லீவு வழங்க முடியும். இவ் விபத்து உத்தியோகத்தரின் கவனயீனத்தால் இடம்பெறக் கூடாது. வழமையான லீவுக்கு மேலாக இவ்லீவு விசேட லீவாகக் கொள்ளப்படும்.

## 07. விசேட பிணிலீவு

பணியாற்றிக் கொண்டிருக்கும்போது அப்பணியின் காரணமாக நோய்வாய்ப்பட்டால் மருத்துவச் சான்றிதழுக்கு அமைவாக செயலாளரின் அனுமதியுடன் 6 மாதம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுச்சம்பளத்துடனும் மேலும் தேவைப்படின் 6 மாதம் அரைச்சம்பளத்துடனும் விசேட லீவினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

## 08. காலங்கடந்த லீவு

குறித்த லீவு நிறைவடைந்த பின் பின்வரும் காரணங்களுக்காக பயன்படுத்தப்படாதுள்ள அடுத்தடுத்த இரண்டு வருட லீவினை வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடன் பெற்றுக்கொள்ளலாம்.

1. அலுவலரின் சுகவீனம்
2. குடும்ப அங்கத்தவர்களின் சுகவீனம்
3. குடும்ப அங்கத்தவர்களின் இறப்பு
4. மேற்குறித்தவை தொடர்பான சமயச் சடங்குகள்.
5. அலுவலரின் திருமணம்
6. வீட்டிலுள்ள ஒருவரின் தொற்றுநோய்
7. கடமையுடன் சம்பந்தப்படாத வழக்குக்காக நீதிமன்றம் செல்லுதல்.

காலங்கடந்த லீவிற்கு விண்ணப்பிக்கும் போது எந்த இரு ஆண்டுகளில் கழிக்கப்பட வேண்டும் என்பதும் அந்த ஆண்டுகளில் மீதமாக உள்ள லீவுகளின் எண்ணிக்கையையும் இதற்கு முன் இவ் லீவு பெற்றுக்கொண்டால் அது பற்றிய விபரமும் விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும்.

## 09. விசேட லீவுகள்

**தேர்தல்கள்.**

| | | |
|---|---|---|
| I. | சனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கு | - 4 மணித்தியாலங்கள் |
| II. | உள்ளூராட்சிசபைத் தேர்தல் | - 2 மணித்தியாலங்கள் |
| III. | பாராளுமன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்கு | - 4 மணித்தியாலங்கள் |
| IV. | மக்கள் கருத்துக்கணிப்பில் வாக்களிப்பதற்கு | - 4 மணித்தியாலங்கள் |
| V. | மாகாணசபை தேர்தல் | - 2 மணித்தியாலங்கள் |

## நோய்கள்

1. கயரோகம்

4 மாதங்கள் சம்பளத்துடனான லீவை பெற்றபின் 4 வருடங்கள் கடமையாற்றி பின்னர் மீண்டும் 4 மாதங்கள் சம்பளத்துடனான லீவைப் பெற்றுக்கொள்ள முடியும்.

2. குஸ்டரோகம் - 22 மாதங்கள்
3. புற்றுநோய் - 6 மாதங்கள்
4. கருத்தடை சத்திரசிகிச்சை - பெண் 07 நாட்கள்
   ஆண் 03 நாட்கள்

**விசேட சந்தர்ப்பங்கள் முஸ்லீம் ஆசிரியைகளுக்கு மட்டும்**

1. இத்தா அனுட்டித்தல் - 04 மாதங்கள் 10 நாட்கள்
2. விவாகரத்து - 03 மாதங்கள். மேற்குறித்த இரண்டும் விசேட காலங்கடந்த லீவுகளில் சீர் செய்யலாம். மீதியை அரைச்சம்பள லீவாக கணிக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. கடமை லீவு

கடமையின் பொருட்டு பின்வரும் ஆவணங்களை சமர்ப்பித்து வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடன் கடமை லீவை பெற்றுக்கொள்ளலாம்.

1. ஆசிரியரின் கோரிக்கைக் கடிதம்
2. கடமைக்கான அழைப்புக் கடிதம்.
3. மாணவர்களுக்கான செயலட்டை.
4. பதில் கடமை ஒழுங்குகள்
5. வரவுச் சான்றிதழ்

11. பிரசவ லீவு

✧ பெண் ஆசிரியர்கள் ஒவ்வொருவருக்கும் உயிருடனான ஒவ்வொரு குழந்தைப் பிறப்பிற்கும் முதலில் 84 நாட்கள் சம்பளத்துடன் கூடிய லீவை மருத்துவச் சான்றிதழ் அல்லது பிறப்புச் சான்றிதழை சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

✧ குழந்தை பிறந்து 4 வாரங்கள் செல்லமுன் ஆசிரியர் பாடசாலைக்கு சமுகமளிக்க அனுமதிக்கப்படமாட்டார்.

✧ குழந்தை பிறக்கும்போது இறந்து பிறந்தாலோ அல்லது 6 மாதங்கள் செல்லமுன் குழந்தை இறந்தாலோ இறப்புச் சான்றிதழை/ வைத்தியச் சான்றிதழை சமர்ப்பித்து பிறந்த திகதியிலிருந்து 6 வாரங்கள் சம்பளத்துடன் கூடிய லீவினை பெறலாம்.

✧ முழுச்சம்பளத்துடன் கூடிய லீவு நிறைவு பெற்றதும் தொடர்ந்து குழந்தையைப் பராமரிக்க வேண்டிய தேவை ஏற்படின் 84 நாட்கள் அரைச் சம்பளத்துடனும் அதனைத் தொடர்ந்து 84 நாட்கள் சம்பளமற்றதுமான லீவைப் பெறலாம். இவ் லீவினை ஆசிரியர் விரும்பின் குழந்தைக்கு 4 வாரங்கள் நிறைவடைந்த பின் எந்த நேரமும் திணைக்களத் தலைவருக்கு அறிவித்து முடிவுறுத்தலாம்.

✧ கருச்சிதைவுக்கு மருத்துவச் சான்றிதழின் அடிப்படையில் சொந்த லீவில் பெற்றுக்கொள்ளலாம்.

✧ 6 வாரங்கள் கழித்து குழந்தை இறக்குமாயின் இறந்த தேதியல் இருந்து 7 நாட்களுடன் லீவு முடிவுறுத்தப்படும்.

✧ பிரசவத்தின் பொருட்டு பெற்றுக் கொள்ளப்படும் அரைச்சம்பள, சம்பளமற்ற லீவுகள் சம்பள ஏற்றம், ஓய்வூதியக் கணிப்பீடு, பதவியுயர்வு என்பவற்றுக்கு தடையாக அமையாது.

✧ குழந்தையை பிரசவித்த பின்னர் ஆசிரியர் நியமனம் ஒன்றினை பெறும் பெண் ஆசிரியருக்கு கடமையை பொறுப்பேற்ற நாள் வரையான லீவுக் காலத்தை கழித்து மீதமாக உள்ள காலத்திற்கு முழுச்சம்பள, அரைச்சம்பள, சம்பளமற்ற லீவினை அனுமதிக்கலாம்.

தனது மனைவியின் பிள்ளைப் பிரசவத்திற்காக குழந்தை பிறந்த திகதியில் இருந்து 03 மாதங்களுக்குள் 3 நாட்களை தந்தைக்குரிய லீவாக பெறலாம். லீவிற்கு விண்ணப்பிக்கும்போது பிள்ளையின் பிறப்புச் சான்றிதழ்/ மருத்துவச் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.

திருமதி.கு.கங்காதரன்
ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நிகழ்வுகளின் தொகுப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வுகளின் தொகுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை நிகழ்வுகளின் தொகுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பாடசாலையில் ஆரம்ப கல்வி கற்று உயர்கல்விக்கு தெரிவானோர்



செல்வி கௌசிகா அலோசியஸ்
பேராதனை தேசிய கல்வியியல் கல்லூரி
கண்டி



செல்வி துஷாளினி பரந்தாமன்
ஊவா வெல்ல பல்கலைக்கழகம்

தரம்-05 பலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்குமேல் சித்தியடைந்தோர்



செல்வன் குணலிங்கம் அருள்வேந்தன்
புள்ளி-162
2014



செல்வி கோவிந்தராஜன் நிஷ்விகா
புள்ளி-164
2015

புத்தகப்பிரதியாக்கத்திற்கு அனுசரணை வழங்கியவர்கள்



திரு.திருமதி.யோ.திருக்குமார் குடும்பம்
(சுவிஸ்)



செல்வி.செல்வானந்தம் ரஜிந்தினி
(சுவிஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவலைகள்



அமரர்
ஜெ.தர்சிகா (மாணவி)
19.03.2009



அமரர்
க.கேதீஸ்வரி (ஆசிரியை)
10.02.2009



அமரர்
சி.கலாவதி (ஆசிரியை)
09.08.2017




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதுவரை பாடசாலைக்கு அன்பளிப்புச் செய்தோர் விபரம்

01. திரு.உ.தயகுமார் - சப்பாத்து
02. பெற்றோர், நலன்விரும்பிகள் - வெற்றிக்கேடயம்
03. சர்வோதயம், கிளிநொச்சி - வானொலி
04. கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் - நீர்ப்பம்பி
05. திரு.ந.ஜெயராசா அம்பிகை வைத்திய நிலையம் வட்டக்கச்சி - நூலகத்திற்கான ஒரு தொகை நூல்கள்.
06. திரு.ம.ஞானராசா - பிளாஸ்ரிக் கதிரை
07. திரு.த.நேசராசா - ஒலிபெருக்கி செற்
08. சென்ஜோன்ஸ் - 87 பழைய மாணவர்கள் - நூலகத்துக்கான ஒரு தொகுதி நூல்கள்
09. பெற்றோர் ஆசியர்கள் - Band set
10. திரு.சி.தயானந்தன் - மின் மோட்டார்.
11. திரு.தி.துஷந்தன் - மின் இணைப்பு (Meeter box)
12. லயன்ஸ் கழகம், கொழும்பு - கழுத்துப் பட்டி, சப்பாத்து, சீருடை, பயிற்சிப் புத்தகங்கள்.
13. திரு.சு.நடராசா (ஓய்வுநிலை அதிபர்) - நுணுக்குக் காட்டி
14. திரு.ச.சிவேசனறாஜ் குடும்பம் (லண்டன்) (அமரர் இராஜஇராஜேஸ்வரி நினைவு) - திறன் வகுப்பறை
15. லுட்சேர்ன் தமிழ் மன்றம் சுவிஸ் (அனுசரணை Dr.இ.கிருஷ்ணலிங்கம்) - திறன் வகுப்பறை
16. திருமதி.ஜெனதாஸ் பாரதி (டென்மார்க்) - மாணவத் தலைவரின் சின்னங்கள், வெற்றிப் பதக்கங்கள்.
17. திருமதி.யோகலட்சுமி மார்க்கண்டு (செல்வி ப.றிசானியின் பிறந்தநாள் அன்பளிப்பு) - 5 அடி குத்துவிளக்கு (பித்தளை)
18. திரு.உ.தயகுமார் பிரசாந் (அனுசரணை திரு.பவானந்தம் ஜெய்க்காந்தன்) - 40 பிளாஸ்ரிக் கதிரைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றியுரை.

கிளிநொச்சி மாயவனூர் வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டு பதினைந்து ஆண்டுகள் கடந்து முதன் முதலாக வெளிவருகின்ற இம்மலர் உங்கள் கரங்களைத் தழுவி நிற்பதைக் கண்டு பெருமையடைகின்றோம்.

எமது பாடசாலையில் இருந்து ஒரு மலரினை வெளியிட வேண்டும் என்ற எண்ணம் கொண்ட அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், நலன் விரும்பிகள் விரும்பிக் கொண்டபோது அந்நூலுக்கான ஆக்கங்கள் ஏராளமாக வந்து சேர்ந்தன. அவற்றில் மலர்க்குழுவால் தெரிவு செய்யப்பட்டுள்ள ஆக்கங்களைப் பிரசுரித் துள்ளோம். இவ் ஆக்கங்களைத் தந்துதவிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இப் படிகவிழா மலரினை வெளியிடுவதற்கு அனுமதி தந்ததுடன் மட்டுமல்லாது மலருக்கான ஆசிச் செய்தியை தந்துதவிய எமது வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.ஜோன் குயின்ரஸ் அவர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மற்றும் ஆசிச் செய்தி, வாழ்த்துச் செய்தியைத் தந்துதவிய சான்றோர்களுக்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் புத்தகப் பிரதியோக்கத்திற்கு அனுசரனை வழங்கியவர்களான திரு.திருமதி.யோ.திருக்குமார் அவர்களுக்கும், செல்வி.செல்வானந்தம் ரஜிந்தினி அவர்களுக்கும் இந்நூலிற்கான அட்டைப்படத்தினை வடிவமைத்த திரு.ந.பிரசாந் அவர்களுக்கும் இந்நூலினைத் திறம்பட அச்சிட்ட சக்தி பதிப்பகத்தினருக்கும் புகைப்படங்களைத் திறம்பட எடுத்துதவிய கோபால் போட்டோ உரிமையாளர் திரு.கோ.கர்ஷன் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இம் மலரின் பிரதிகளைப் பெற்றுக்கொண்ட உள்ளங்களுக்கும் மலர்க்குழு சார்பில் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் இப்படிகவிழா மலர் சிறப்புற திகழ உதவிய அனைவருக்கும் எமது பாடசாலைச் சமூகம் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மலர்க்குழு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சக்தி பதிப்பகம் மீசாலை - 0773160464

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org